மனிதனும் சூழ்நிலையும்

ஸ்ரீமதி ஆர். எஸ். ருக்மிணி, எம். ஏ.
Lecturer, Queen Mary's College, Madras.

விற்பனை உரிமை:
புத்தக நிலையம்
இராயவரம்
புதுக்கோட்டை ஸ்டேட்

முதல் வெளியீடு : ஆகஸ்டு 1946

விலை இரண்டு ரூபாய்
தபால்செலவு தனி

அச்சிட்டோர் :
பி. என். பிரஸ்,
சென்னை.

உள்ளுறை

3633

முகவுரை

'மக்கள் தாமே ஆறறி உயிரே' என்ருர் தொல் காப்பியர். ஐயறிவு உடையவை மாக்கள்; அதாவது விலங்குகள். ஐந்து அறிவுக்கு மேற்பட்ட உயர்ந்த அறிவு பகுத்தறிவு எனப்படும். அந்தப் பகுத்தறியும் திறன் இன்றிச் செயல் ஆற்றுபவன், மனிதனைப் போலவே இருந்தாலும், மனிதன் அல்லன் என்ருர் திருவள்ளுவர்; 'மக்களே போல்வர் கயவர்' உருத் தோற்றத்தால். ஆனல், மன வேறுபாட்டாலும், குண வேறுபாட்டாலும் அவர்களை மக்கள் இனத்தில் சேர்க்கக் கூடாது என்கிருர்.

குண வேறுபாடு மனத்தைப் பொறுத்திருக்கிறது. பஞ்ச பூதச் சேர்க்கையால் ஆக்கப்பட்டவன்தான் மனிதனும். ஆனலும், சிருஷ்டியில் அவன் உன்னத மான பதவியை அடைந்திருக்கிருன். முக்குணச் சேர்க்கை வேறுபாடுகளால் ராக்ஷஸனுகவும், மானிட னுகவும், தேவனுகவும் மனிதன் ஆய்விடுகிருன். மனப் பண்பாட்டின் முதிர்ச்சியினுல் உயர்ந்த மனிதனுகவும், மனம்போன போக்கெல்லாம் போவதினுல் தாழ்ந்தவ னுகவும் ஆகிவிடுகிருன்.

நீரானது தான் சேர்ந்த நிலத்தின் தன்மையினுலே தன் இயல்பு மாறி அந்நிலத்தின் தன்மையை அடை வதுபோல், மக்களின் அறிவு தன் இயற்கைத் தன்மை மாறி, சேரும் கூட்டத்தாரின் தன்மையை அடையும். ஒருவனது அறிவு-ஆற்றல்கள் பெரும்பாலும் பாரம் பரிய நியதியைப் பொறுத்தே விகாஸம் அடைகின் றன. அப்படி இருப்பினும், சூழ்நிலை நியதிகள் பாரம் பரிய நியதிகளைப் பெரும்பாலும் பாதிக்கின்றன.

தினை விதையிலிருந்து தினைதானே முளைக்கும்? சுரை முளைக்காதே: அதுபோல நல்ல மதி நுட்பத்திற்குப் பேர் போன வம்ச பரம்பரையில் சிறந்த விஞ்ஞானிகள், அறிவாளிகள், மேதாவிகள் முதலியோர் தோன்றுகிருர்கள். சாதாரணமாக ஆன்ற குடிப்பிறந்தார் மாட்டு மனப் பண்புடைமை காணப் படுகிறது. கல்வி அறிவு பெருத குடும்பங்களில் மட்டமான அறிவுடைய மக்களே பிறக்கிருர்கள். குலத்தளவே ஆகும் மனமும், குணமும்.

இவ்விரு காரணங்களினுல், நற்குடியில் பிறத்தலும், நல்ல சூழ்நிலைகள் அமைதலும், நல்லார் இணக்கமும் அதிர்ஷ்ட வசம் என்பார்கள். சிறந்த பாரம்பரிய நியதியும், சூழ்நிலை நியதியும்தான் புத்தித்வம் அதிகரித்துக் காணப்படும் மக்களைச் சிருஷ்டிக்கின்றன. ஆனுல், சில சிருஷ்டிகள் இந்த நியதிகளுக்கு மாறுபட்டுத் தோன்றுகின்றன. 'பண்டித புத்திரர்கள்' என்று ஏளனம் செய்யும்படியான மட சாம்பிராணிகள் மகா பண்டிதர்களுக்குப் பிறக்கிருர்கள். கள்ளி வயிற்றில் அகில் பிறப்பதுபோல, சாதாரணக் குடும்பங்களில் மகா மேதாவிகளும் பிறக்கிருர்கள். இம்மாறுபாடுகளுக்கும்கூட முக்கிய காரணம் சூழ்நிலைதான். பாரம்பரிய நியதிகளைச் சூழ்நிலை நியதிகள் பெரிதும் பாதிக்கின்றன. இது மானஸ சாஸ்திர ஆராய்ச்சியால் கண்டறிந்த உண்மை.

கலன் சிதைக்கும் பாலின் சுவையை. அதுபோலக் கீழ்ப்பட்ட சூழ்நிலைகளின் சேர்க்கை புத்தித்வத்தைக் குறையும்படிச் செய்துவிடுகிறது. எந்த மனிதனும் தன் சூழ்நிலையை மாற்றி அமைத்துக்கொண்டால்,

தான் விரும்பியபடி தன் நிலைமையைச் சீர்திருத்திக் கொள்ளலாம், வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடையலாம் என்று மானஸ சாஸ்திரிகள் முடிவுகட்டியிருக்கிறார்கள்.

இந்த மானஸ நூலில், சூழ்நிலை எவ்வாறு மனிதனைப் பாதிக்கிறது, சூழ்நிலையில் உண்டாகும் தூண்டல்களால் பிரதிச் செயல் எவ்வாறு நிகழ்கிறது, அச் செயல்களுக்கு முற்பட்ட சிந்தனைகள் மனத்தில் எப்படி ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலித் தொடர்போல அமைந்து பிரவர்த்தியாகப் பரிணமிக்கின்றன, பாரம்பரிய நியதிக்கும் சூழ்நிலை நியதிக்கும் உள்ள சக்திகள் எவை, அவை ஒன்றை ஒன்று எவ்விதம் பாதிக்கின்றன, தலைவிதி என்பதன் பொருள் என்ன, எப்படி தலைவிதியை மதி நுட்பத்தால், மானஸ சாஸ்திர அறிவால், மாற்றி அமைக்கலாம்—என்பன போன்ற பல அரிய நுட்பமான விஷயங்களை எல்லாம் நன்றாக விளக்கி, அழகான உதாரணங் காட்டி, எளிய நடையில், பலர் அறிந்துகொள்ளுமாறு எழுதியிருப்பது மிகவும் போற்றத் தக்கது.

‘உலகம் பலவிதம்’ என்பது பழமொழி. ஒருவனைப் போல் இன்னொருவன் இல்லை; தோற்றத்திலும் சரி, அறிவிலும் சரி, குணத்திலும் சரி, மனப் பண்பாட்டிலும் சரி, ‘இதுவும் ஒரு பிரகிருதி’ என்று சொல்லும்படியாகத்தான் இருக்கிறான் ஒவ்வொரு மனிதனும். மனிதர்களுக்குள் காணப்படும் பிரவர்த்தி வித்தியாசங்களைச் சகோதர மனப்பான்மையுடன் ஆராய்ந்து அறிவதற்கு மானஸ சாஸ்திரம் மிகவும் உதவி புரிகிறது.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் மானஸ சாஸ்திர ஆராய்ச்சியின் மூலம் பற்பல உண்மைகள் வெளியாகி இருக்கின்றன. அந்த உண்மைகளைச் சமூக உயர்வுக்குப் பல வழிகளிலும் உபயோகப்படுத்தி வருகிருர்கள். சூழ்நிலைகள் மானிட வாழ்க்கையைப் பாதித்த போதிலும், அறிவுள்ள மனிதன் சூழ்நிலைகளுக்கு அடிமை ஆகாமல், தன் மனப்போக்கையும், செயல் வகையையும் அமைத்துக் கொள்ளுகிருன்; தன்னோடு உலகமும், உலகத்தோடு தானும் கலந்து வாழ்ந்து மகிழ மானஸ சாஸ்திர உண்மைகளைக் கடைப்பிடித்து ஒழுகுகிருன்.

மனம் தடுமாருது, மனம்போன போக்கெல்லாம் போகாது, மன உறுதி பெற்று, நல் வாழ்வு வாழ மானஸ சாஸ்திரம் இன்றியமையாதது. வாழ்க்கைக்குப் பிரயோசனம் அற்ற பல நூல்களைப் படிக்கிருேம். எந்தக் கல்வி வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமோ, அதைப் படிக்கிறதில்லை. பல்கலைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்களும் 'பல கற்ருேம் யாம்' என்று இறுமாப்புக் கொள்ள வேண்டாம். ஏட்டுக் கல்வி நாட்டுக்கு உதவாது. வாழ்க்கையைப் பண் படுத்தும் கலைகளே மிகவும் முக்கியமானவை. இப் படிப் பட்டவைகளில் ஒன்று மானஸ சாஸ்திரம்.

> "தன்னை அறிதல் இன்றிப் பின்னை எது அறிகிலன்?
> தன்னை அறிந்திடில் பின் என்னை உளது அறிய?"

என்ருர் ஸ்ரீ ரமண மகரிஷி. "உன்னை அறிந்துகொள்" என்ருர் ஸாக்ரடீஸ் என்னும் கிரேக்கஞானி. வேதாந்த நுட்பங்களை அறிய முயலாவிட்டாலும் மனதின் இயல்புகளையும், விகாரங்களையும், பண்பாடுகளையும்

அறிந்து கொள்வது தனி மனிதனின் வாழ்க்கைக்கும், சமூக நன்மைக்கும் அத்தியாவசியமானது. மனப் பண்புடையவரே மாண்புடையார். அறிவு மட்டும் போதாது; மனப் பண்பும் வேண்டும். மனப் பண் பில்லாதவர் மரம் போல்வர். இதை அறிந்தே இந் நூல் ஆசிரியர் முதலாவதாக இதை வெளியிடுகிறார். தமிழ் நாடு இத் துறைக்கு நல்ல ஆதரவு தரும் என்ற நம்பிக்கையில் இதற்கு மேல்படியான பல மானஸ விஞ்ஞான அறிவு விளக்கும் நூல்களையும் இவ் வாசிரியர் விரைவில் வெளியிடுவார்.

தமிழ் மொழியில் இதுகாறும் மானஸ நூலொன்றும் வெளி வரவில்லை. மனத்தின் பல அம் சங்களையும், போக்கையும், சக்திகளையும், எண்ண நிகழ்ச்சித் தொடர்களையும், மற்றும் பலவற்றையும் தமிழ் நாட்டினர் நன்கு அறிந்து கொள்ள முதன் முதலாக அமைந்துள்ள இவ்வரிய நூல் பயன்பட வேண்டும். இம்மாதிரியான விஞ்ஞான நூல்கள் மேலும் மேலும் வெளிவர வேண்டும். அப்பொழுது தான் தாய் மொழியில் விஞ்ஞான சாஸ்திரங்களைக் கல்லூரிகளில் போதிக்க முடியும். இல்லாவிட்டால், தமிழ் மொழியில் கல்வி புகட்டவேண்டும் என்ற சட்டம் ஏட்டளவோடு சரி; அமுலுக்கு வராது. இந் நூலைத் தமிழ் மக்கள் அனைவரும் அன்புடன் வரவேற் பார்களாக.

சென்னை,
21-9-'46.

டி. எஸ். திருமூர்த்தி.

முன்னுரை

உலகில் உள்ள சிருஷ்டிகளில் மனிதன்தான் பெரிய அதிசயமாக விளங்குபவன். அவனுடைய மனமோ அவனிலும் மிகப் பெரிய அதிசயமாக விளங்குவது; ஆராய ஆராய அளவற்ற விந்தை விநோதங்களைத் தோற்றுவித்து வாயால் கூறவொண்ணாத வியப்பை விளைப்பது; உலகில் மனிதன் இயற்றுகின்ற ஆக்குதல், அளித்தல், அழித்தலாகிய மூவகைச் செயல்களுக்கும் காரண கர்த்தாவாக இருப்பது; பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதனின் ஆராய்ச்சி விஷயமாக இருப்பது; அங்ஙனம் இருந்தபோதிலும், என்றும் நவீனமாக விளங்குவது; அளவற்ற ஆற்றல் உடையது. இத்தகைய மனத்தைப் பெற்றிருப்பதனுலேதான் மனிதனுக்குச் ஜீவகோடிகளின் தலைவன் என்ற காரணப் பெயரும் ஏற்பட்டது.

மனிதன் என்றைக்குத் தன் மனத்தைப் பற்றி ஆராயத் தொடங்கினுன்? அவன் தன்னைத்தானே ஆராய்ந்து கண்ட உண்மைகள் எவை?—இந்தப் பிரச்னைகளுக்கு விடை காணப் புகுவோர் தனி விஞ்ஞானத் துறையிலே இறங்கி விடுவார்கள். அந்தத் துறையே மானஸ சாஸ்திரம் எனப்படும்.

எஜிப்து தேசத்தாரின் நாகரிகம் மிகத் தொன்மையானதெனப் பண்டைகாலச் சரித்திரக் கலைவல்லார் கூறுகின்றனர். எஜிப்தியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதனுடைய மனம் அழிவற்றது எனவும், அது இவ்வுடலை விட்டு அகன்ற பின்பு விடுதலை பெற்று இன்ப நிலைகளில் திரியும் எனவும், முடிவில் என்றைக்காவது முன்னிருந்த உடலிலேயே

புகுந்து இயங்கும் எனவும் கருதினர். ஆதலால், அந் நாட்டினர் இறந்தவர் உடலை அழியாமல் காப்பதற் கான முறைகளை ஆராய்ந்தனர். அதற்காகப் பல வாசனைப் பொருள்களை உபயோகித்தனர். அவை களை உயிரற்ற சடலத்தில் அப்பி அதை மம்மியாக்கி நிலத்திற்குள் அமைத்த கல்லறைகளில் சேமித்து வைத்தனர். அன்றியும், உடலைவிட்டு அகன்றுபோன மனம் அந்த உடலின் மீது புருவடிவிலே பறந்து உலவும் எனவும் கருதினர். இவ்விதம் உலவுகின்ற மனத்திற்கு மண்ணுலக வாழ்க்கையைப் பற்றிய பழைய நினைவுகள் உண்டெனக் கூறினர். இறந்தவ னுடைய உடலைச் சேமித்து வைத்திருக்கும் நிலவறை யில் மனத்திற்குப் பழக்கமான பொருள்கள், அறிமுக மானவரது உருவச் சிலைகள், அன்பிற்குரியவராக இருந்தவரது பதுமைகள் எனப் பலவற்றையும் நிரப்பி வைத்தால், உடலின் மீது உலாவ வருகின்ற மனம் அவற்றைக் கண்டு பழைய நினைவுகளில் களித்து, முடிவிலே அதே உடலில் புகுந்து உயிர் பெற்று எழும் என்று கருதினர். மானஸ விஞ்ஞானத் தின் ஒரு சிறு துணிக்கையை எஜிப்திய வரலாறு களில் காண்கிறோம்.

கிரேக்கருடைய கதைகளைப் பார்க்கின்றபொழு தும் மானஸ சாஸ்திரத்தின் சிறு துணிக்கைகளைப் பொறுக்கலாம். கிரேக்கர் மனத்தைப் பெண்பா லாக்கி அதற்கு ஸைக்கி என்று பெயர் சூட்டினர். ஸைக்கி என்னும் மானஸப் பெண் காமன் என்னும் அழகனை மணந்தாள். கிரேக்கர் காமனுக்குக் க்யூப்பிட் எனப் பெயர் வழங்கினர். காமன் ஸைக்கிக்கு ஒரு நிபந்தனை செய்திருந்தான். 'நீ என் முகத்தின் அழ

கைப் பாராதிருக்குமளவும் என்னோடு சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம்' என்பதே அந்த நிபந்தனை. ஒரு நாள் இரவில் சைக்கி ஞானச்சுடர் விளக்கேற்றிக் காமனின் முகப் பொலிவைப் பார்த்து விட்டாள். அந்த நிமிஷமே காமன் மறைந்தான். அது முதல் சைக்கி தன் நாயகனாகிய அழகனைத் தேடி அலைந்தாள். சொல்லவொண்ணாத இன்னல்களை அனுபவித்து முடிவிலே தன் நாயகனைப் பெற்றாள்.

மானஸ சாஸ்திரம் என்பதற்கு ஆங்கிலத்திலே வழங்குகின்ற சைக்காலஜி என்ற மொழி சைக்கி என்ற கிரேக்க மொழியினின்று தோன்றியதேயாகும்.

நமது நாட்டில் கோயில்களிலே கடவுள் முன் காட்டுகின்ற சாம்பிராணிப்புகை அடியாரது உள்ளத்தில் எழுகின்ற ஆசைகளையும் வேண்டுதல்களையும் குறிப்பிடுகின்றது. வழிபடுவோரது மனத்தின் சிந்தனைகள் எல்லாம் வாசனைப் புகையாக இறைவன் முன்னே எழுந்து, அவரவரது விருப்பங்களின் வடிவைப் பெறுகின்றன என்பதற்குச் சமிக்கையாக நாம் தூபம் காட்டுகின்றோம். கடவுளுக்குத் தூபம் காட்டுகின்ற வழக்கம் மிகத் தொன்மையானது. இந்த வழக்கத்திலும் மானஸ விஞ்ஞானத்தின் துணிக்கை ஒன்றைக் காணலாம். மனிதன் மண்ணுலகில் தோன்றிய நாள் முதலாக இன்றளவும் அவன் சொன்ன கதைகளிலே, எழுதிய சித்திரங்களிலே, செதுக்கிய சிற்பங்களிலே, கும்பிட்ட கோயில்களிலே, வகுத்த வேதங்களிலே, பாடிய பாசுரங்களிலே, சிந்தித்த சிந்தனைகளிலே, அவனுடைய மனம் போன போக்கையெல்லாம் பார்க்கலாம்.

நெடுங்காலமாக மானஸ சாஸ்திரம் தத்துவ ஞானத்தின் ஓர் அங்கமாகிய மனத்தத்துவ சாஸ்திரத்திலே அடங்கியிருந்தது. தத்துவ ஞானமும், மானஸ சாஸ்திரமும் ஜீவாத்மா, பரமாத்மா, சித்து, அசித்து, மாயை, ஜடம், பூதம் முதலியவற்றைப் பற்றிய தர்சனங்களோடு குழம்பிக் கிடந்தன. கிரேக்க விஞ்ஞானிகளும் இவ்விரண்டையும் குழப்பி வைத்திருந்தனர். சகல மதங்களும் மானஸ சாஸ்திரத்தைத் தம் கொள்கைகளோடு சேர்த்துக் கலங்கலாக வைத்திருந்தன. கடந்த நூற்றுண்டில் சிலர் மனத்தைத் தனியே பிரித்து ஆராயப் புகுந்தனர். அது முதல் மானஸ சாஸ்திரம் நவீன உருக்கொண்டு தோன்றலாயிற்று.

நவீன மானஸ சாஸ்திரம் இன்று பிள்ளைப் பருவத்தில் இருந்தபோதிலும் கடலினும் பெரியது. மனமே ஒப்பு உவமை அற்ற பெருமை வாய்ந்தது. அவ்வளவு பெரிய மனத்தின் விஞ்ஞானம் குழந்தைப் பருவத்திலேயே கடலினும் பெரிதாக இருப்பது அதிசயமன்று. பாற்கடலை நக்கிக் குடித்துவிட வேண்டுமென பேராசை கொண்ட பூனை போல, இத்தகைய மானஸ சாஸ்திரக் கடலையெல்லாம் நான் ஏட்டில் எழுதத் துணிந்தேன்.

மேலை நாடுகளில் மானஸ சாஸ்திர வளர்ச்சிக்காக விஞ்ஞானிகள் பலர் தம் வாழ்நாளையெல்லாம் சமர்ப்பணம் செய்திருக்கிறுர்கள். மேலை நாடுகளிலிருந்து மானஸ சாஸ்திர சம்பந்தமான நூற்கள் நூற்றுக் கணக்கிலே வெளிவருகின்றன. நமது நாட்டிலோ இந்த விஞ்ஞானத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளப் போதிய அளவிலே நூற்கள் வெளி வரவில்லை. நான் இக்குறையைத் தீர்க்க விரும்பினேன்.

மானஸ சாஸ்திரச் சிந்தனைகளைத் தமிழிலே வெளியிடுவதற்குப் பொருத்தமான சொற்கள் சுலபத்தில் அகப்படவில்லை. பழைய மனத் தத்துவ சாஸ்திரச் சொற்களுக்கும் வேதாந்தச் சொற்களுக்கும் வரையறுத்த பொருள் எல்லைகள் உள்ளன. புதிய சிந்தனைகளைச் சுட்டுவதற்கு அதே சொற்களை வழங்கினால் பொருள் மயங்கும் என்று நினைத்து முயற்சி குன்றியிருந்த சமயத்தில் ஸ்ரீமான் ராஜசூடாமணி அவர்கள் அருந்துணைவராக உதவினார்; மானஸ சாஸ்திரக் கருத்துக்களை வெளியிடப் பொருத்தமான தமிழ்ச் சொற்களையும் சொற்றொடர்களையும் அவ்வப்போது குறித்துக் கொடுத்தார். சென்னை கிறிஸ்தவ கலாசாலையில் ஆசிரியராக இருக்கும் ஸ்ரீமான் சி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும் நான் எழுதியவற்றை ஆதியோடு அந்தமாகக் கேட்டு, திருத்த வேண்டியவற்றைத் திருத்தி, புகுத்த வேண்டியவற்றைப் புகுத்தி, என்னை உற்சாகப்படுத்தினர். இவ்விருவரது பேருதவியைப் பெற்றதோடு, காப்டன் என். சேஷாத்திரிநாதன் அவர்களும் எனக்கு அடிக்கடி ஊக்கமூட்டினர்.

இங்ஙனம் பலரது உதவியால் 'மனிதனும் சூழ்நிலையும்,' 'மனிதனும் கவன சக்தியும்' மனிதனின் திறமை திராணிகள்' 'மானஸ சாஸ்திரமும் விளம்பரக் கலையும்' 'மானஸ சாஸ்திரம் என்றால் என்ன?' என்ற புத்தகங்கள் முடிவு பெற்றன. அந்த வரிசையில் இதுவே முதல் புத்தகம். மற்றவைகளும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

'மனிதனும், சூழ்நிலையும்' என்ற இந்நூலில் நான் கையாண்ட தமிழ்ச் சொற்கள் முற்றிலும் பொருத்த

மானவை என்று துணிந்து சொல்ல எனக்கு உரிமை இல்லை. மானவ சாஸ்திரமும் செந்தமிழும் தேர்ந்த பேரறிவாளர் கருணை கூர்ந்து பொருத்தமான சொற்களைக் குறித்து எனக்கு உதவி புரிவாராயின் அன்னவர்க்கு நான் என்றும் நன்றி பாராட்ட கடமைப் பட்டுள்ளேன்.

இந்நூலை எழுதுவதற்குக் கையாண்ட புத்தகங்களின் பெயர்களைக் கடைசியில் கொடுத்திருக்கிறேன். இதில் உள்ள படங்கள் உட்வர்த் என்பவருடைய புத்தகத்தில் இருந்து எடுத்தவை. இதில் வருகின்ற திருஷ்டாந்தங்களில் காணும் பெயர்கள் எவரையும் குறிப்பிடுவன அல்ல.

இந்நூலில் காணும் சொற் குற்றம் பொருள் குற்றங்களுக்காக என்னை மன்னித்து இதனை ஏற்று ஆதரிக்குமாறு பொதுமக்கள் அனைவரையும் வணக்கத்தோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை,
28-8-'46.

ஆர். எஸ். ருக்மிணி.

மனிதனும் சூழ்நிலையும்

சூழ்நிலை எவ்வாறு பாதிக்கிறது

மானஸ **சாஸ்திரம்** வெறும் அனுமான ரீதியான சாஸ்திரம் என்று அநேகர் கருதலாம். ஆனால், கவனித்துப் பார்த்தால், ரசாயனம், பௌதிகம் முதலிய விஞ்ஞானங்களைப் போலவே மானஸ சாஸ்திரமும் பிரத்தியக்ஷ பரிசோதனை - முறைகளோடுதான் அனுமானத்தையும் கையாளுகிறது என்றும், உண்மையாக நிகழ்ந்தவைகளை அனுபவ யுக்திக்கு முரண்பாடின்றி வெளியிடப் பிரயத்தனம் பண்ணுகிறது என்றும் தெரிந்து கொள்ளலாம். மானஸ சாஸ்திரம் வெளியிடுகின்ற தீர்மானங்களெல்லாம் நிபுணர்கள் நேரில் ஆராய்ந்தவைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளன. எந்த விஷயமானாலும் ஒரு தீர்மானத்திற்கு வருமுன் பிரத்தியக்ஷ பரிசோதனைகளால் கிடைக்கும் விளைவுகளை ஆதாரமாகக்கொண்டு, ஏற்கெனவே சம்பாவிதமாக ஒப்புக்கொண்ட விஷயத்தை நிலைநாட்ட முயலுகிறது. க்ஷேத்திர கணிதத்திற்கும் மானஸ சாஸ்திரத்திற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. க்ஷேத்திர கணிதம் சில மூல - சூத்திரங்களையும், வரையறுக்கப்பெற்ற வாக்கியங்களையும் ஆரம்பத்திலேயே வகுத்துக்கொள்கிறது ; பின்பு, அவைகளைக் கலவை முறையிலே பலவிதமாகக் கலந்து, எல்லையில்லாமல் விரிந்துகொண்டே போகும் தர்க்க சாஸ்திர ரீதியான வாதங்களையும், வாதங்களால் விளையும் முடிவுகளையும் உண்டுபண்ணிக் காட்டுகிறது. மானஸ சாஸ்திரமோ கணித சாஸ்திரத்தை ஓரளவு

கையாளுகிறது; நிலைநாட்டுகிற விளைவுகள் பரஸ்பரம் முரண்படாமல் இருக்கும்பொருட்டுக் காரண காரியங்களை ஆழ்ந்து சிந்திக்கிறது; வெளியிடுகிற தீர்மானங்கள் யாவும் அனுபவம், யுக்தி, அனுஷ்டானம், வழக்கு முதலியவற்றிற்குப் பொருத்தமாக இருக்கின்றனவா என்று ஒப்பிட்டுப் பார்க்கிறது; நியாய யுக்திகளைக் கையாண்டு பிரத்தியக்ஷ - பரிசோதனை முறைப்படி ஆராய்ந்து ஓர் ஆளைப் பற்றித் தீர்மானித்த விஷயங்களோடு, அந்த ஆள் தன் சூழ்நிலைக்குத் தக்கபடி என்னென்ன செயல்கள் புரிகிறான் என்பதையும் ஆராய்ந்து மானஸ தத்துவங்களை நிலைநாட்டுகிறது.

மானஸ சாஸ்திரத்தில், **செயல்** என்ற சொல்லை மிகவும் விரிவான பொருளில் உபயோகிக்கிறோம். மனித சரீரத்தின் சலன இயக்கங்களான நடத்தல், பேசுதல் முதலியவைகளும், அறிவைப் பெறும் செயல்களான பார்த்தல், கேட்டல், நினைவுறுதல், ஆலோசித்தல் முதலியவைகளும், மனோவிகாரச் செயல்களான சந்தோஷப்படுதல், துக்கப்படுதல் முதலியவைகளும் அடங்கும்படி **செயல்** என்ற சொல்லை உபயோகிக்கிறோம். கடைசியாகச் சொன்ன சந்தோஷப்படுதல், துக்கப்படுதல் முதலிய செயல்கள் வெளிப் பார்வைக்கு இயக்கமற்றவைகளாகத் தோன்றலாம். என்றாலும், இவைகளும் செயல்களே. சரீரத்தின் மூலமாக இயங்கும் உயிரைப் புறத் தோற்றங்களால் வெளிப்படுத்தும் செயல்கள் அனைத்தையும் வியக்திகள்* என்று குறிப்பிடலாம். ஒருவன் ஒரு பந்தய விளையாட்டைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்ப

*வியக்தி - செயல் காரணமாக வெளிப்படையாகத் தோன்றும் குறி அல்லது ஆவிர்ப்பாவம்.

தாகத் தோன்றலாம்; அல்லது, ஒரு சங்கீதக் கச்சேரியில் சங்கீதம் கேட்டுக்கொண்டிருக்கலாம். இப்படி மனத்தைக் கவரும் விஷயங்களில் ஈடுபட்டுச் சும்மா இருப்பதாகத் தோன்றினாலும், அவன் உண்மையில் செயல்கள் புரிபவனாகவே இருக்கிறான். உயிரோடு இருப்பவர் சும்மா இருக்கின்ற திறம் அரிது. மரணத்திலேதான் மனிதர் சும்மா இருக்க முடியும்.

மானஸ சாஸ்திரம் ஓர் உயிர்நிலையின்* செயல்களைப்பற்றிக் கூறுவது. ஆனால், அது ஓர் உடலுக்குள்ளே நிகழ்கிறவைகளைச் சொல்லுகிறதா என்றால், இல்லை என்றுதான் தோன்றும். அவ்வாறு சொல்லக்கூடியது சரீர சாஸ்திரம். மனிதன் எந்த நேரத்திலும் தன் சூழ்நிலையோடு சம்பந்தப்பட்டுக்கொண்டே இருக்கிறான். இதனால் ஓயாமல் செயல்களும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சூழ்நிலையோடு சம்பந்தப்படுவதன் காரணமாக நிகழ்கின்ற செயல்களைத்தான் மனிதப் பிரவர்த்திகள் என்று சொல்லுகிறோம். அறிந்தோ அறியாமலோ செய்கிற எல்லாச் செயல்களும் சூழ்நிலையோடு சம்பந்தமுடையவை. சூழ்நிலை அல்லது சுற்றுச் சார்புகளிலிருந்து ஒருவனைத் தனியாகப் பிரித்து ஆராய முடியாது. சூழ்நிலை எவ்வாறெல்லாம் ஒருவனுடைய செயல்களுக்குக் காரணமாகின்றது என்றும், சூழ்நிலையால் ஏற்படக்கூடிய குணதோஷங்கள் எவை என்றும் மானஸ சாஸ்திரம் விவரிக்கிறது.

சுகமாகவும் மன ரம்மியமாகவும் வாழ்வதற்குச் சூழ்நிலையான சார்புகளெல்லாம் நடுராசியாக இருக்க வேண்டும். சூழ்நிலையின் நடுராசி என்றால் என்ன என்பதற்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

---

*உயிர்நிலை - அவயவங்களோடு உயிர்பெற்று இயங்கும் உடல்.

கற்பகம் ஒரு பெண். அவளுடைய கணவனுக்கு டில்லியில் உத்தியோகம். கற்பகம் கணவனோடு டில்லிக்குப் போய்ச் சேர்ந்தாள். சித்திரை வைகாசி மாதங்களில் கற்பகத்தால் டில்லி நகரத்தின் உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லை. எப்பொழுதும் விசிறியும் கையுமாகவே இருந்தாள். பகலிலே வெளியில் தலை காட்டாமல் வீட்டுக்குள்ளேயே இருந்தாள். இரவிலே திறந்த வெளியில் படுத்துக்கொண்டாள். உடம்பில் வேனிற் கட்டிகள் தோன்றின; மிகவும் கஷ்டப்பட்டாள். வைகாசி மத்தியில் அவளுடைய கணவனை சிம்லாவுக்கு மாற்றிவிட்டார்கள். கற்பகம் கணவனோடு சிம்லாவுக்குச் சென்றாள். போகும்போதே 'குளிர்! குளிர்!' என்று அடித்துக்கொள்ளத் தொடங்கினாள். பெட்டிக்குள்ளிருந்த கம்பளிச் சட்டைகளெல்லாம் ஒவ்வொன்றாய் வெளியே வரத் தொடங்கிவிட்டன. சிம்லாவுக்குப் போன நாள் முதல், குளிர்ச்சியான அந்தச் சூழ்நிலை கற்பகத்தின் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளவில்லை. சமராசியான சீதோஷ்ணநிலை உள்ள இடந்தான் அவளுக்கு மிகவும் பிடித்திருக்கும். ரொம்ப உஷ்ணமும் பிடிக்கவில்லை, ரொம்பக் குளிரும் பிடிக்கவில்லை. டில்லியின் உஷ்ணமும் சிம்லாவின் குளிரும்—இரண்டும் அவளுக்கு வெறுப்பானவை. என்றாலும், இந்த இரண்டு இடங்களிலேயே அவள் இருக்கநேர்ந்தது. அவள் எப்படிக் காலம் தள்ளினாள்? வாழ்க்கைக்குச் சாதகமான பல உபகரணங்களையும் வசதிகளையும் செய்து கொண்டாள். சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல்களால் வாழ்க்கை-நிலைமைகள் மாறுதல் அடையவே, வாழ்க்கை நிலைமைகளைச் சரியானபடி திருத்தி அமைத்துக்கொண்டாள்.

ஓர் உயிர்நிலையின் எந்தச் செயலுக்கும் சக்தி அல்லது ஆற்றல் தேவை. ஒரு துரும்பைத் தூக்கினுலும் உடம்பிலிருந்து சக்தி செலவாகிறது. துரும்பை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்தில் கொண்டு சேர்ப்பதற்குச் செலவாகிற சக்தியை அளந்து, இவ்வளவு என்று வரையறுத்துக் காட்டுவதற்கு ஏற்ற கருவிகளும் வழி வகைகளும் உள. இப்படிச் செயல்களினுல் ஓயாமல் செலவாகி வரும் சக்தியை ஈடு செய்து நிரப்புவதற்குப் புதிய சக்தியைப் பெற வேண்டும். சூழ்நிலையிலுள்ள பிராணவாயுவும், ஜாடராக்கினி அணைந்து போகாமல் எரியும்படிச் செய்யும் இந்தனமாகிற (எரி பொருள்) உணவும் புதிதாகச் சக்தி அளிக்கின்றன. உண்ணும் உணவுப் பொருள்களே இந்தனமாக உடலுக்குள் எரிந்து, உயிர்நிலையின் ஓயாத செயல்களால் பிராணவாயுவோடு கலந்து அடிக்கடி இரசாயன மாறுதல்களை அடைகின்றன.

டில்லியில் இருந்தபோது கற்பகம் வழக்கமாகச் சாப்பிடுகிற அளவு சாப்பிட முடியவில்லை. அப்படியே சிம்லாவிலும். இதற்குக் காரணம், அவள் சென்னையில் இருந்தபோது செய்துவந்த அளவுப்படி வேலை செய்ய முடியவில்லை. உலாவப் போவதும் குறைந்தது; தோழிகள் வீட்டுக்குப் போவதும் குறைந்தது. இரண்டு நகரங்களிலும் இருந்த சீதோஷ்ண நிலையினுல் வீட்டு வேலைகளையும் அவ்வளவாகக் கவனிக்க முடியவில்லை. பசி மந்தப்பட்டது; அதனுலே நன்ருகச் சாப்பிட முடியவில்லை. சென்னையில் இருந்தபோது எதைச் செய்யலாம், எங்கே போகலாம் என்று அவள் துடிப்பாக இருந்தாள். ஆனுல், டில்லியிலும் சிம்லாவிலும் அவள் எதிலும் உற்சாகமில்லாமல், எதையும்

செய்யப் பிடிக்காமல் இருந்தாள். இந்த அயர்வுக்குக் காரணம் என்ன? அந்த இரு நகரங்களின் சூழ்நிலை அவளை வேலை செய்யும்படி தூண்டவில்லை. அது தார்க்குச்சியும் கையுமாகப் பக்கத்திலே நின்று கொண்டு, 'அதைச் செய், இதைச் செய்' என்று கற்பகத்தைக் குத்தவில்லை என்பதுதான் காரணம். செயல் புரியத் தூண்டிக்கொண்டேயிருக்கும் காரணத்தை அருட்டி* என்று அழைக்கலாம். அருட்டி என்ற தார்க்குச்சி இல்லாதிருந்தாலும், தார் கூர்மையில்லாமலிருந்தாலும், தூண்டுதல் இல்லாமற் போகிறது; அல்லது குறைகிறது. அருட்டி குறைவாய் உள்ள சூழ்நிலை ஒருவருடைய செயல்களைக் குறைத்து விடுகிறது. சுறுசுறுப்புக்கும், உற்சாகத்திற்கும், சந்தோஷத்திற்கும் சூழ்நிலையின் அருட்டிக் குறைவும் அருட்டி நிறைவுமே காரணம். உலகத்திலே உள்ள சகல ஜீவகோடிகளின் செயல்களுக்கும் அவைகளின் சூழ்நிலைகளின் அருட்டிகளே ஆதாரம். சூழ்நிலைகளிலிருந்து அருட்டிகள் எழாவிட்டால், செயல்களும் செயல்களின் போக்குவாயும்† ஏற்படா.

மணி என்ற பையனுக்கு மூன்று வயது இன்னும் நிரம்பவில்லை. வாழைப் பழம் என்றால் அவனுக்குப் பிரியம் அதிகம்; அதற்காக எந்தக் காட்டுமிராண்டியோடாவது எங்கே வேண்டுமானாலும் போய் விடுவான். ஒரு வாழைப் பழத்தைக் காட்டி அவன் முரண்டையும் அழுகையையும் நிறுத்திவிடலாம். ஒரு வாழைப் பழத்திலிருந்து கிளம்பின அருட்டி

---

* அருட்டல் - தூண்டுதல், எழுப்புதல். அருட்டி - தூண்டுவதற்குக் காரணமாயிருப்பது.

† போக்குவாய் - வெளிப்படுதற்கு உரிய வழி.

அவ்வளவு வேகமாக மணியின் உள்ளத்தில் புகுந்து அவனைக் கவரும் சக்தி பெற்றிருந்தது. ஒரு சமயம் மணி ஒருவருக்கும் தெரியாமல் ஒரு சீப்பு வாழைப் பழத்தைத் தின்றுவிட்டான். மாந்தம் கண்டு, வாய் திறவாமல், இறக்கும் நிலைமைக்கு வந்துவிட்டான். அப்பொழுது நாராயண பிள்ளை என்ற வைத்தியர் வந்தார். குழந்தையைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டார். கண் திறக்காமல் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த அக்குழந்தையிடம், 'குழந்தாய்! வாழைப் பழம் வேணுமா?' என்று கேட்டார். உடனே மணி கண்ணைத் திறந்து பார்த்தான். ஒரு வாழைப் பழத்தை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டான்.

மிட்டாய்க் கடை ஒன்றைப் பார்ப்போம். லட்டு, ஜிலேபி, மைசூர்ப்பாகு, பர்ப்பி முதலியவைகளை அடுக்கி வைத்திருக்கிற அழகும், அவற்றின் மேல் ஒட்டி வைத்திருக்கிற வெள்ளி ரேக்கும் கண்ணைப் பறிக்கின்றன. அருகில் போனதும் வாசனை கமகமக்கிறது. மிட்டாய்க் கடையிலே கண்ணுக்கு ஓர் அருட்டி, மூக்குக்கு ஓர் அருட்டி, நாவுக்கும் ஓர் அருட்டி. ஜவுளிக் கடைக்குப் போனால், அங்கே புடைவைகளைப் பொம்மைகளுக்குக் கட்டி நிறுத்தியிருக்கிறார்கள். நம்முடைய கண்ணுக்கு அருட்டிகளை எழுப்பிவிடவே இந்த அலங்காரம். நாம் வித விதமான நகைகளையும் பல நிறமான சேலைகளையும் ஏன் தேடுகிறோம்? பார்ப்பவர்களிடம் அருட்டிகளை எழுப்பிவிடத்தான். உலகமே அருட்டி—நிலையமாகச் சூழ்ந்துகொண்டு நம்மைப் பலவிதமான செயல்களுக்குக் குத்திவிட்டுக் கொண்டே இருக்கிறது.

உயிர்நிலை ஒவ்வொன்றும் செய்யும் செயல்களுக்கு ஒரு போக்குவாயும் வேண்டும். அணிலுக்கு ஏற மரமும் வேண்டும்; அலப்புவாயனுக்குப் பேச ஒரு ஆளும் வேண்டும். ஓயாமல் பேசுவது சிலருடைய அலுவல். இவர்களுக்கு ஏதேனும் ஒரு துறையில் நெடுநாள் பயிற்சி இருந்தால், அந்த விஷயத்தைப் பற்றிப் பேச யாராவது கிடைத்துவிட்டால் போதும்; தங்களுடைய இதர அலுவல்களையும் மறந்துவிடுவார்கள். வழக்கமாகப் பார்த்து வரும் தொழிலைத் திடீரென்று நிறுத்திவிட முடியாது.

குட்டிக்கரணம் போடுவதில் கெட்டிக்காரன் ஒருவன், ராஜசபைகளிலே குட்டிக்கரணம் போட்டுப் பரிசுகள் பெற்றுவந்தான். அவன் ஒரு சமயம் ஒரு சன்னியாசி மடத்தில் புகுந்து சன்னியாசிகள் கஷ்டப் படாமல் காலம் கடத்துவதைக் கண்டு, தானும் சன்னியாசியாகிவிடலாம் என்று நினைத்தான். அவன் மடத்தில் புகுந்த நாள் முதல் சில நாட்கள் வரை நிம்மதியாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஆனால், வாழ்நாள் எல்லாம் குட்டிக்கரணம் போட்டு வயிறு பிழைத்தவனுக்குக் குட்டிக்கரணம் போடாமல் இருக்க முடியவில்லை. ஆனால், மடத்திலே யாருக்கு முன்பாகக் குட்டிக்கரணம் போடுவது? மடாதிபதியின் சன்னிதானத்திலேயா? யார் பார்த்து மகிழ இவன் குட்டிக்கரணம் போடுவது? ஆயினும், தின்னும் சோற்றுக்கு ஏதாவது வேலை வேண்டுமே! ஆகையால், மடத்தில் ஒரு பாகத்தில் இருந்த நடராஜப் பெருமாள் சன்னிதானத்தில் நாள்தோறும் போய்க் குட்டிக்கரணம் போடத் தொடங்கி முக்தி அடைந்தானும். இது ஒரு வேடிக்கைக் கதைதான். சூழ்நிலை இவனுக்குத் தெரிந்

திருந்த வித்தைக்கு ஒரு போக்குவாய் காட்டியிரா விட்டால் இவன் கதி அதோகதிதான்.

இதுவரை ஓர் உயிர்நிலை சூழ்நிலைகளைச் சார்ந்து வாழ்கிறது என்பதை விளக்கச் சில திருஷ்டாந்தங்கள் பார்த்தோம். உலகத்தில் வாழும் உயிர்கள் யாவும் சூழ்நிலைகளைச் சார்ந்து வாழ்கின்றன என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் பார்க்கலாம். அவற்றை எல்லாம் இங்கே அடுக்கிக் கூற அவசியமில்லை. உயிர் நிலை சூழ்நிலைகளோடு சார்ந்து வாழும் அதிசயங்களை விட அதிக அதிசயமானது, அது சூழ்நிலைகளை எதிர்த்து நின்று தாக்குப்பிடிப்பதுதான். சூழ்நிலைகள் நாற்புறமும் சூழ்ந்து தாக்குகிற சக்தி வேகத்தை எதிர்த்து நின்று தாக்குப்பிடிப்பதைத் தவிர சூழ்நிலைகளுக்கு அடிமைப்படுவதில்லை என்றும், தலைவணங்காமலே தன் சுதந்திரத்தை வெளிப்படுத்துகிறது என்றும் பார்க்கிறோம். சூழ்நிலைகளை எதிர்த்து நின்று தாக்குப் பிடிப்பதற்குச் சக்தியில்லாவிட்டால் செத்து மடியவேண்டியதுதான். உயிர் வாழும் உடல்கள் எல்லாம் பற்பல ஜீவாணுக்களால் ஆனவை. பிரபஞ்ச விகாசக்கிரமத்திலே—அதாவது படிப்படியாக உலகம் முன்னேறி வரும் முறையிலே—உடல்களின் அமைப்பு அதிகச் சிக்கலாகி வரும்போது, ஜீவாணுக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே வருகிறதைப் பார்க்கலாம். உலகில் உயிர்கள் எத்தனையோவித உடல்களைக்கொண்டு திகழ்கின்றன. உடல்களுக்குள்ளே கோடிக்கணக்கான அமைப்பு வேற்றுமைகள் இருக்கின்றன. சில உடல்கள் ஒரே ஜீவாணுவைக்கொண்டு அமைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த அமைப்பை உடலின் ஆரம்ப

ஸ்தானம் எனலாம். இத்தகைய ஒற்றை ஜீவாணு வைக்கொண்ட பிராணி ஒன்று நீரிலேயே வாழ் வதைக் கவனிப்போம். அதன் உடலை உருத்தெரி யாமல் கரைத்துவிடக்கூடிய தன்மை சூழ்நிலையான நீருக்கு உண்டு. உடலேயே கரைத்துவிடக்கூடிய நீரில், இந்த ஒற்றை ஜீவாணு தாக்குப்பிடித்துக்கொண்டு வாழ்வது மகா அதிசயம் அல்லவா?.

இப்படி எதிர்த்து நின்று தாக்குப்பிடிக்கிற சக்தி அதனிடத்தில் அமைந்திராவிட்டால் அதன் கதி என்னவாகும்? கற்பகம் டில்லிக்குப் போனளே; அங்கே அந்த உஷ்ணத்திலே எப்படித் தாக்குப் பிடித்தாள்? சிம்லாவுக்குப் போனளே; அங்கே குளிரில் எப்படித் தாக்குப் பிடித்தாள்? சிம்லா விலேயே ஒரு வருஷம் இருந்தபின் திரும்பவும் டில்லிக்குப் புறப்பட்டபோது சிம்லாவே நல்ல இடமாகத் தோன்றிற்று கற்பகத்திற்கு. டில்லி யிலேயே இரண்டு வருஷம் தங்கியபின் திரும்பவும் சிம்லாவுக்குப் புறப்பட்டபொழுது, டில்லியைவிட்டுப் போக இஷ்டம் இல்லை. ஏன்? உஷ்ண ரத்தம் உள்ள மிருகங்கள், விசேஷமாக மனிதர், சூழ்நிலைக்கு ஏற்றபடி தம் உடல்களை வெகு விரைவாகப் பழக்கப் படுத்திக் கொள்ளும் சக்தி பெற்றிருப்பது தான் காரணம். இதனுல்தான் அடிக்கடி ஏற்படுகிற சூழ்நிலை-மாறுதல் களுக்கு ஏற்றவாறு எதிர்த்து நின்று தாக்குப் பிடிக்க முடிகிறது.

சூழ்நிலையை எதிர்த்துத் தாக்குப்பிடிக்கிற சக்தி மனிதனிடத்தில் எவ்வளவாகக் காணப்படுகிறது என்பதை விளக்க இன்னும் சில திருஷ்டாந்தங்களைப் பார்க்கலாம்.

வைரமுத்து பெரிய குளத்திற்குப் பக்கத்திலே கோடைக்கானல் மலையின் அடிவாரத்தில் ஓர் ஊரில் இருப்பவன். கோடைக்கானல் மலைக்குப்போக இப்பொழுது பெரிய ரஸ்தா அமைந்திருக்கிறது. சில காலங்களில் இந்த மோட்டார் ரஸ்தாவுக்கு மலைச் சறுக்கல்களால் சேதம் ஏற்படுவது வழக்கம். இதற்குப் பழுது ஏற்பட்டுவிட்டால் வண்டிப் பாதையும் வழக்கற்றுப் போகும். அப்பொழுது, அந்த சுகவாசஸ்தலத்திற்குப் போகிறவர்கள் அடிவாரம் வரை சென்றதும், சாமான்களைத் தூக்கி வருவதற்குக் கூலி ஆட்களை அமர்த்திக்கொண்டு, ஒற்றையடிப் பாதை வழியாக மலைமீது ஏறிச் செல்வார்கள். நினைத்தவுடன் கூலி ஆட்களைக் கூப்பிட முடியாது. ஒவ்வோர் ஊரிலும் கண்காணிகள் உண்டு. கண்காணியிடம் சொல்லித்தான் கூலிகளை ஏற்பாடு செய்ய முடியும்.

வைரமுத்து ஒரு கண்காணி. நூறு கூலி ஆட்கள் வேண்டுமானாலும் அவன் நொடிப்பொழுதிலே திரட்டிவிடுவான். இவர்கள் யாவரும் பெரிய பெரிய பெட்டிகளையும் சாமான்களையும் தூக்கிக்கொண்டு கூலிப் பாதை வழியாகப் புறப்படுவார்கள். கூலிப் பாதை மூன்று அல்லது நாலு அடி அகலந்தான் இருக்கும். கீழ்ப்பிரதேசங்களிலிருந்து வருகிறவர்களுக்கு மறையாணிபோல் வளைந்து வளைந்து மேலேறிச் செல்லும் இந்தப் பாதை வழியாகத் தங்கள் உடல்களைச் சுமந்து செல்வதே வெகு சிரமம். ஆனால், கூலிக்காரர்களோ, மேடும் பள்ளமும், கரடும் முரடும் சறுக்கலும் வழுக்கலும், செங்குத்துமாக இருக்கும் குறுக்குப் பாதையில் ஏறிச் செல்வார்கள். ஒரு பெரிய

பெட்டியைத் தூக்கிக்கொண்டு இந்தக் குறுக்குப் பாதை வழியாக நாம் நூறு அடி தூரம் ஏறிப் பார்த்தால், நம்முடைய உடலில் எந்த எந்த உறுப்புக்களில் நோவு எடுக்கிறது என்று தெரியும். வைர முத்துவின் தலையிலே பெரிய டிரங்குப் பெட்டி ஒன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதன் பாரத்தைச் சமநிலைப்படுத்தித் தலையில் சுமப்பதே வெகு சிரமம். அவன் அதையும் சுமந்துகொண்டு குறுக் குப் பாதை வழியாக ஏறிப் போகிறான். அவனுடைய கால் கட்டைவிரலுக்கு அமைந்திருக்கும் குரங்குப்பிடி அபாரமானது. ஒரு சிறு கல்லும் பெயராதபடி அவன் கால் வைக்கும் விதமே அலாதி. அவனுடைய கணுக்கால்-பூட்டுக்கள் மிகவும் உறுதியானவை. இப்படியே அவனுடைய உடலின் ஒவ்வோர் உறுப்பிலும் விசேஷத் தன்மைகள் காணப்படுகின்றன. சூழ்நிலைகளோடு தினந்தோறும் மல்லாடியதில் சூழ்நிலைகள் அவனுடைய உடல் அமைப்பிலேயே பல மாறுதல்களை உண்டுபண்ணிவிட்டன.

கிரேக்க தேசத்தில் ஈசோப் என்று ஓர் அடிமை இருந்தான். அவன் கதை சொல்லுவதிலே அசாதரணத் திறமை உடையவன். அரசர்களும் பிரபுக்களும் அவன் சொல்லும் கதையை வெகு ஆவலாகக் கேட்பார்கள். ஈசோப் சொன்ன கதைகளில் ஒரு கதை மனிதன் சூழ்நிலைகளை எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதை விளக்குகிறது. ஒரு நாள் சூரியனும் வாயு தேவனும் சண்டையிட்டுக் கொண்டார்களாம். இருவரில் எவன் பெரியவன் என்பதே விவாதம். இதைப் பரிட்சித்துப் பார்க்க இவர்களிடம் ஒரு பிரயாணி

அகப்பட்டுக்கொண்டான். பிரயாணி தன் உடைகளை எல்லாம் கழற்றி எறியும்படி செய்துவிட வேண்டும். இப்படிச் செய்ய யாருக்கு வல்லமை உண்டோ அவனே பெரியவன் என்று தீர்மானமாயிற்று. முதலாவது வாயுபகவான் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கினான். சுழற்றிச் சுழற்றிச் சூரு வளியாக வீசிப்பார்த்தான். பிரயாணியின் ஆடை களை அப்படியும் இப்படியுமாக இழுத்துப் பார்த்தான். பிரயாணியின் தலையிலோ ஒரு மூட்டை! அது விழுந்துவிடாமல் ஒரு கையாலே பிடித்துக்கொள்ள வேண்டும். மற்றொரு கையால் சட்டையையும் ஆடை யையும் இழுத்துப் போர்த்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தாங்க முடியாத குளிரால் வருந்த நேரிடும்; இதோடு பின்னும் ஒரு சங்கடம். காற்று ஒரு பக்கமாக அடிக்காமல் இப்படியும் அப்படியுமாக அடித்து ஆளையே உருட்டிவிடப் பார்த்தது. ஆகையால் உருண்டு விழாதபடி உடலை நடுநிலைப் படுத்திக்கொள்ளவும் வேண்டும். இத்தனை சங்கடங் களையும் எதிர்த்துத் தாக்குப் பிடித்துக்கொண்டு சென்றானே அல்லாமல் அந்தப் பிரயாணி தன் மேல்-அங்கியைக் கூடக் கழற்றவில்லை. மனிதனுக்குத் தன் சூழ்நிலைகளை எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் ஆற்றல் அமைந்திருந்ததால், வாயு தன் தோல்வியை ஒப்புக்கொண்டான். பின்பு சூரிய பகவான் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினான். காலை இளங்கதிர் நடுப் பகலில் தீக்கோட்டையாக வளர்ந்தது. உஷ்ணம் அதிகரிக்க அதிகரிக்க மனி தனும் தன் சட்டைகளை ஒவ்வொன்றாகக் கழற்றத் தொடங்கினான். முடிவிலே, ஒரு சட்டையும் இல்லை.

சூரியன் ஜயக்கொடி நாட்டிவிட்டான். ஆனால் உண்மையில் ஜயம் பெற்றவன் போட்டியில் கலந்து கொள்ளாமல் வழி நடந்து சென்ற பிரயாணிதான்! குளிரில் அவன் ஆடைகளை இழுத்துப் போர்த்திக் கொண்டான், வெயிலில் கழற்றி எறிந்தான். இயற்கையின் மாறுபாடுகளுக்குத் தக்கபடி அவன் தன் நிலைமையை மாற்றி அமைத்துக் கொண்டான். இப்படியே இயற்கையின் ஒவ்வொரு சக்தியையும் சூழ்நிலையால் ஏற்படும் தாக்குதல்களையும் சமாளிக்க மனிதன் நாள்தோறும் பல உபாயங்களைக் கையாண்டு சூழ்நிலையை அடக்கி ஆளும் வல்லமை பெற்று வருகிறான்.

சூழ்நிலையைச் சார்ந்து பிழைக்கவும், எதிர்த்து நின்று தாக்குப் பிடிக்கவும் மனிதனுக்கு முடிகிறது என்று பார்த்தோம். மேலும், சூழ்நிலையோடு நெருங்கி உறவாடித் திரியவும் அவனுக்குத் தெரியும். ஓடுகிற டிராம் வண்டியில் கைப்பிடி ஒன்று இல்லாமல் நாம் நிற்க முடியாது. வண்டி ஓடும்பொழுது ஒரு வேளை நிற்க முடியும். ஆனால், திடீரென்று வண்டி நிறுத்தப்பட்டால், நாம் உருண்டு விழுந்து எதிலாவது மோதிக்கொள்வோம். ஆனால், நீண்ட காலமாக வேலை பார்த்துவரும் 'கண்டக்டர்' நம்மைப்போல் கீழே உருளாமல் நிலையாக நிற்பான். வண்டி ஓடினாலும் நின்றாலும் அவனுக்குப் பிடி ஒன்றும் தேவையில்லை. அதிர்ச்சி எதுவும் அவனை அசைப்பதில்லை.

மரக் கிளையிலே உட்கார்ந்திருக்கும் காகம் கிளையின் அசைவுக்கு ஏற்றபடி உடலை அசைத்துக் கொடுக்கிறதே தவிர, கிளையின் ஆட்டத்தினால் அதை விட்டு அகன்றுபோகிறதில்லை. நதியில் நீந்துகிறவன்

வெள்ளத்தை எதிர்த்து நிற்பதற்கான கைவீச்சுக் களோடு நின்று விடாமல் வெள்ளத்தின் போக்குக்கு ஏற்றபடியாக உடலையும் பொருத்திக்கொள்கிருன். சைக்கிளில் போகிற ஒருவன் திடீரென்று சைக்கிள் சறுக்கி விட்டால், மிதிபடியில் இருந்து கால்கள் இரண்டையும் எடுத்துவிட்டு, சைக்கிளின் அமட்டல் களுக்கு ஏற்றவிதமாக உடலை வளைத்து நெளித்துக் கொடுத்து விட்டு, வண்டி சமநிலை அடைந்ததும் முன் போலவே மிதித்துக்கொண்டு போகிருன். இவைகளை யெல்லாம் பார்க்கும்பொழுது, மனிதனுடைய செயல் கள் பிரகிருதிப் போக்கோடு இசைந்த அம்சங்களா கவும் காணப்படுகின்றன. ராணுவ வீரர் அளவிட்டு அடி வைத்து நடப்பதும், மக்கள் பாட்டுக்கு ஏற்றபடி தாளம் போடுவதும், தாளத்திற்கு ஏற்றபடி சிரக்கம் பமோ நடனமோ புரிவதும்—எல்லாம் பிரகிருதிப் போக்கோடு இசைந்து நடப்பதற்குச் சிறந்த உதாரணங்கள் என்று சொல்லாம்.

ஒவ்வொரு மனிதனும், பல காரணங்களினுலே, தன்னேடு சம்பந்தப்படும் வேறு பல மனிதர் களால் பாதிக்கப்படுகிருன். தனி மனிதனின் சூழ்நிலை பெரும்பாலும் சூழ உள்ளவர்களாலேயே அமைகிறது. ஒரு குழந்தை எந்த ஜனசமூகத்தில் பிறக்க நேர்ந்ததோ அந்தச் சமூகத்தாரைச் சார்ந்து பிழைத்து வளர்கிறது. குழந்தையின் தேவைகளை அவர்களே கொடுத்து உதவுகிருர்கள். அதன் செயல் களையும் அவர்களே அடக்கி ஆளுகிருர்கள். அது வளரும்பொழுது தனக்கு இடம் கொடுத்துப் பரா மரித்தவர்களை எதிர்த்துத் தன் சுதந்திரத்தை அடைய விரும்புகிறது; என்ருலும், அவர்களோடு பல வகையில்

இசைந்து ஒழுகி, அவர்கள் பேசும் பாஷை, அவர்களுடைய பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கற்றுக்கொள்கிறது. அவர்களைச் சார்ந்து வாழ்கிறது; அவர்களை எதிர்த்துத் தாக்குப்பிடிக்கிறது; அவர்களோடு இசைந்து நடந்து அவர்கள் செய்யும் செயல்களுக்குப் பங்காளியுமாகிறது. மானிட வாழ்க்கையே சூழ்நிலைகளோடு இசைந்து ஒழுகும் ஒழுக்கத்தினுல் அமைந்திருக்கிறது என்று தெளிவாகிறது. மனிதன் சூழ்நிலையில் நிகழ்பவைகளோடு இசைந்து ஒழுகுகிருன்; தன்னைச் சூழ உள்ள பொருள்களோடும் ஆட்களோடும் எப்படி எப்படித் தாக்குப் பிடிக்க வேண்டுமோ அப்படி அப்படியெல்லாம் தாக்குப் பிடிக்கிருன். அவர்களை ஓரளவிலே அறிந்து ஏறத் தாழ அவர்களோடு சமாளித்துக் கொண்டு போகிருன். ஒரு ஆளின் பிரவர்த்திகளுடைய எல்லை குழந்தைப் பருவமுதல் வயோதிகம் வரைக்கும் விரிந்துகொண்டே போகிறது; காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவிதமாக வளர்ந்து கொண்டே போகிறது. ஒருவன் குழந்தையாக இருக்கும்பொழுது அவனுடைய செயல்கள் தொட்டிலைச் சுற்றியே நிகழ்கின்றன. பெரியவனுனதும், தொலையிலுள்ள குன்று மலைகளை உணர்ந்து, வானவளையத்திற்கு அப்பாலுள்ள இலக்கை நோக்கித் தொடர்கிருன். குழந்தையின் செயல்கள் அந்த அந்த நேரத்தோடு தொடர்புற்றிருக்கின்றன; இறந்தகால எதிர்காலங்களோடு அவ்வளவாகத் தொடர்புற்ருே கட்டுண்டோ இருக்கவில்லை. ஆனுல் முதிர்ந்த வயதுள்ள ஒருவனுடைய செயல்கள் அப்படியில்லை. உதாரணமாகத் தீர்க்க சிந்தனையுள்ள ஒரு தேசிய

வாதியைப் பார்ப்போம். அவன் தன் நாட்டிற்காகத் திட்டங்களை வகுக்கும்பொழுது, இறந்தகாலச் சரித்திரத்தின் ஊடுபாவுகளில் உள்ள இழைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து, நெடுங்காலமாகச் செய்து முடிக்கவேண்டிய ஒரு திட்டத்தை வகுக்கிறான்.

இதுவரை சொன்னவைகளை எல்லாம் திரும்பவும் சிந்தித்துப் பார்க்கும்பொழுது, ஒவ்வோர் ஆளுடைய வாழ்க்கையும் அவனவனுக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளோடு எந்நேரமும் நடத்திவரும் கொடுக்கல் வாங்கலான லேவாதேவியாகத்தான் காணப்படுகிறது. சூழ்நிலை ஏதோ ஒன்றைச் செய்கிறது; ஆளும் சூழ்நிலைக்கு ஏதோ ஒன்றைத் திரும்பச் செய்கிறான். சூழ்நிலைச் சக்திகள் ஆளைத் தாக்குகின்றன; உடனே அவன் அந்தத் தாக்குதலுக்கு ஏற்றவிதமாக ஏதேதோ பிரவர்த்திகளைச் செய்கிறான். அவனுடைய பிரவர்த்திகள் திரும்பவும் சூழ்நிலையைத் தாக்குகின்றன; உடனே சூழ்நிலைகளிலிருந்து சக்திகள் புறப்படுகின்றன; அவனைத் திரும்பவும் தாக்குகின்றன. அவனும் செயல்களைத் திரும்பவும் தோற்றுவிக்கிறான். இப்படியே மாறி மாறி ஓயாமல் இடையறாமல் தொடராகச் செயல்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சூழ்நிலையும் ஆளும் மாறிமாறிப் புரிந்து வரும் பிரவர்த்தியை விளக்கும்பொருட்டு வாய்பாடாக ஒன்றை வகுத்துக் காட்டலாம். ஓர் ஆளைக் குறிப்பிட முதல் எழுத்தான 'ஆ' என்னும் எழுத்தையே வைத்துக்கொள்வோம். சூழ்நிலையாகிற உலகத்தைக் குறிப்பிட முதல் எழுத்தாகிற 'உ' என்னும் எழுத்தையே வைத்துக் கொள்வோம். அப்படியானால் அமையும் வாய்பாடு இதுவே :—

உ—ஆ—உ

உலகமாகிற சூழ்நிலை ஆளின்மேல் தாக்குவதை உ—ஆ என்றும், உடனே, ஆள் உலகத்தைத் தாக்குவதை ஆ—உ என்றும் குறிப்பிடுகிறோம். செயல்கள் அனைத்தும் பரஸ்பரமாக நிகழ்கின்றன என்று பார்த்தோமல்லவா? ஆகையால், மேலே குறித்த வாய்பாட்டை 'ஆ—உ—ஆ' என்று மாற்றி அமைத்தாலும் பொருந்தும்.

அருட்டியும் பிரதிச் செயலும்

சூழ் நிலையைப் பாதிக்கும்படி ஒருவன் பல செயல்களைச் செய்கிறான். அவனுடைய செயல்கள் பாதித்த மாத்திரத்திலே சூழ் நிலையிலிருந்து புறப் படுகிற பிரதி-இயக்கங்கள்* அவனைப் பாதிக்கின்றன. இதனால் ஒருவனுடைய பிரவர்த்திப் பண்பு முழுதும் மாறிவிடுகிறது. இது எவ்வாறு சாத்தியமாகும்? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமானால், பரஸ்பரத் தொடர்புள்ள செயல்களின் நடப்பைப் பற்றி ஆரம்பமாகச் சில விஷயங்களையாவது நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு சிறு திருஷ்டாந்தத்தை எடுத்துக் கொள் வோம்: **மணி வாழைப்பழத்தை எடுத்தான்.** 'எடுத்தல்' என்பது செய்கையைக்குறிக்கிறது. இதில் செய்கைக் கர்த்தா மணி. இவன் ஓர் உயிர்நிலை. மணி என்ற உயிர்நிலை செய்தது ஒரு சிறு காரியந்தான். இந்தக் காரியத்தை இன்னும் ஊன்றிப் பார்த்தால், மணி வாழைப் பழத்தைத் தன் கையால் எடுத்தான் என்பது தெரியவரும். வாழைப்பழம் சூழ் நிலைகளில் ஒன்று. சரீர சாஸ்திரப் பயிற்சி சிறிதுடையவர்கள், மணிக்குக் கை இருந்தால் மட்டும் போதாது, கையில் உள்ள தசைநார்கள் வேலை செய்யாவிட்டால் அவனுடைய கை வாழைப்பழத்தை எடுக்கப் பயன் படாது என்பதை ஒப்புக்கொள்வார்கள். தசை நார் களின் இயக்கம் இல்லாத கை அசைவற்ற கை. அது நரம்புகளினால் அருட்டப்படாவிட்டால் இயக்கமே

---

* பிரதி - இயக்கம் அல்லது பிரதிச்செயல்—ஒரு செயலின் காரணமாக விளையும் எதிர்ச்செயல்.

இல்லாமல் இருக்கும். கையை இயக்குகிற நரம்பு களுக்கு இயக்க-நரம்புகள் என்று பெயர். இந்த இயக்க - நரம்புகளுக்கு நரம்புகளின் நடுநிலையத்தி லிருந்து, விசேஷமாக மூளையிலிருந்து, ஏவல் ஏற்படாவிட்டால் கை செயலற்றுக் கிடக்கும். நாம் சாதாரணமாக வாழ்க்கையில் ஒருவனுடைய மூளையையோ, நரம்புகளையோ, தசை நார்களையோ பார்ப்பதில்லை. வாழைப்பழத்தை எடுத்த மணியும் அந்தக் காரியத்தைச் செய்தபோது தனக்குள்ளே நிகழ்ந்தவைகளைப் பார்த்ததில்லை. செய்த காரியம் இன்னது என்றுதான் அவனுக்குத் தெரியும்; செய்கையினால் சூழ்நிலையில் விளைந்த மாறுதல் இன்ன தென்றும் அறிவான்.

இந்தத் திருஷ்டாந்தத்தில் ஒரு செயலுக்கு அண்மைக்* காரணமாக இருந்த தசை நார்களுக்குக் காரிய-இந்திரியங்கள் என்று பெயர். மனித சரீரத்தில் தசை நார்களாகிற காரிய-இந்திரியங்களைத் தவிர, உமிழ்நீர்ச் சுரப்பிகள் போன்ற சில சுரப்பிகளைத் தான் காரிய-இந்திரியங்களாகச் சொல்ல முடியும். மின்மினிப் பூச்சியின் ஒளி-உறுப்பும், விலாங்கு முதலிய மின்சார அதிர்ச்சி விளைக்கும் சில மீன்களின் உடலில் உள்ள மின்சார உற்பத்திக் கருவியும் காரிய-இந்திரியங்களுக்குச் சிறந்த திருஷ்டாந்தங்கள்.

திரும்பவும் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொண்ட செய்கையைப் பார்ப்போம். மணி வாழைப்பழத்தை எடுத்தான். இந்தச் செய்கையில் காரிய-இந்திரி யங்கள் எவை என்று தெரிந்து கொண்டோம். இச்

* அண்மை - அருகில், அல்லது சமீபம்.

செய்கையை நாம் முந்திய வாய்பாட்டின்படி கூறுவதானால், மணி என்ற ஆ வாழைப்பழமாகிய உ என்பதை எடுத்தான். அதாவது, ஆ, உவ்வைப் பாதிக்கும் செயல் ஒன்றைப் புரிந்தான். செயல் உவ்வை எப்படி பாதித்தது என்ருெரு கேள்வியை எழுப்பிக்கொண்டு, அதற்குக் கிடைக்கிற பதிலைக் கவனிப்போம்.

முதலில், கேள்வியை விரித்து உணர்ந்து கொள்வோம். சூழ்நிலையில் பொருள்களும் நிகழும் நிகழ்ச்சிகளும் ஒருவருக்குப் புலப்படுவது எப்படி? மணி தன்னைச் சூழவுள்ள பொருள்களைப் பார்க்கிருன். தனக்கு அவைகளோடு நேர்முகமாகச் சம்பந்தத் தொடர்பு இருப்பதாகவே அவனுக்குத் தோன்றுகிறது. அவன் நினைப்பது சரிதானு என்றுபார்ப்போம். அமாவாசை மையிருட்டு. வானத்திலே மேகம் கறுத்துக் குவிந்திருக்கிறது. அறையின் ஒரு மூலையிலே மேஜை இருக்கிறது. அந்த மேஜை மீது வாழைப் பழம் இருக்கிறது. பழம் கண்ணுக்குத் தெரியவில்லை. எடுப்பதற்கு முன் தடவிப்பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனுல், பகலில் அப்படித் தடவிப் பார்க்கத் தேவையில்லை. 'எடுத்தல்' என்ற செய்கை பகலிலும் இருட்டிலும் வித்தியாசப்படக் காரணம் என்ன? மணிக்குக் கண் மட்டும் இருந்தால் போதாது. ஒளியும் வேண்டும். ஒளி சூழ்நிலைப் பொருள்களின் மீது படவேண்டும். பொருள்களின் மீது படுகிற ஒளி கண்களில் படாவிட்டால், கண்களைப் பெற்றிருந்தாலும் சூழ்நிலைகளில் இருக்கும் பொருள்களைப் பார்க்க முடியாது என்று பௌதிக விஞ்ஞானம் கூறுகிறது. கண்ணைப் போலவே நாதும். பொருள்களி

லிருந்து ஓசை ஒலி எழாவிட்டால் செவியும் கேட்க முடியாது. அப்படியே மூக்கும்; பொருள்களிலிருந்து மணம் எழாவிட்டால் மூக்கும் முகர முடியாது. ஆகையால், சூழ்நிலையிலுள்ள பொருள்களோடு ஓர் ஆளுக்குள்ள சம்பந்தம் நேர்முகமன்று; துணைமுக மானது என்பது விளங்குகிறதல்லவா? மனி வாழைப் பழத்தைப் பார்க்கவில்லை; வாழைப்பழத்திலிருந்து வரும் ஒளியைத் தான் அவன் கண்கள் பெறுகின்றன. அவனுடைய காதுகளும் கேட்பதில்லை; பொருள்களி லிருந்து வரும் ஓசை ஒலிகளையே அவனுடைய செவி கள் பெறுகின்றன; அப்படியே அவனுடைய ஸ்பரிச-இந்திரியங்கள் சூழ்நிலையிலுள்ள பொருள்களிலிருந்து எழும் சீதோஷ்ணத்தையும், சூழ்நிலைப்பொருள்களால் ஏற்படும் அழுத்தலையும்* பெறுகின்றன. சூழ்நிலை களிலுள்ள பொருள்களிலிருந்து எழுந்துகொண்டே யிருக்கும் சக்தி-அலைகளைத்தான் மனி பெறுகிறான். ஒளி-அலைகள், ஒலி-அலைகள், வாசனை-அலைகள், தீண்டு தலால் ஏற்படும் அலைகள், சுவை-அலைகள் என் ஐம்புலன்களும் பெறக்கூடிய ஐந்து வகையான புல னுணர்ச்சி அலைகளைத்தான் அவன் பெறமுடியும்.

சூழ்நிலைப் பொருள்களிலிருந்து அலைகள் எழுந் தால் மட்டும் போதாது. இந்த ஐம்புலன்களோடு தொடர்புற்றிருக்கும் உணர்ச்சி - இந்திரியங்கள் உட லுக்குள்ளே உண்டு. இந்தப் புலனுணர்ச்சி இந்திரி யங்கள் யாவும் உணர்ச்சிகளை அறிவதில் அபார சக்தி பெற்றவை. இந்தப் புலனுணர்ச்சி இந்திரியங் களையே கிராஹ்ய-இந்திரியங்கள் என்று கூறுவார்கள்.

---

* அழுத்தல் - அமுக்கும் செயல்.

இந்தப் பொறிகள் தத்தமக்குச் சொந்தமான நரம்புகளைச் செயல் இயக்கத்திற்கு எழுப்பிவிடுகின்றன. புலனுணர்ச்சி-நரம்புகள் மூளையை எழுப்பிவிடுகின்றன. மூளை வழியாகக் கிராஹ்ய-இந்திரியங்கள் இயக்க நரம்புகளோடு தொடர்புற்று, முடிவிலே காரிய-இந்திரியங்களோடு சம்பந்தப்படுகின்றன. இப்படியாக, மணியனுடைய பிரவர்த்திக்கும் சூழ்நிலைப் பொருளாகிய பழத்திற்கும் இடையிலே வளையத்தோடு வளையமாகப் பல வளையங்களால் தொடுப்புற்று அமையும் ஒரு சங்கிலிபோலப் பல செயல்கள் தொடுக்கப் பெற்றுள்ளன.

மணியாகிற உயிர்நிலைக்கு வாழைப்பழமாகிற சூழ்நிலைப் பொருளிலிருந்து ஒரு சக்தி அலை எழுந்து வந்தது. அந்த அலை மணியினுடைய புலனுணர்ச்சி-இந்திரியங்களில் ஏதோ ஒரு கிராஹ்ய-இந்திரியத்தை அருட்டிவிட்டது. அருட்டி என்பதை ஏற்கெனவே ஒரு தார்க்குச்சிக்கு ஒப்பிட்டிருப்பது ஞாபகம் இருக்கலாம். மானஸ சாஸ்திரத்தில் அருட்டி என்பது ஓர் உயிர்நிலையில் ஏதேனும் ஒரு பாகத்தையாவது, பல பாகங்களையாவது, அல்லது முழு அமைப்பையாவது எழுப்பிச் செயலுக்குத் தூண்டுகிறவைகளைக் குறிப்பிடும். அருட்டிகள் பெரும்பாலும் சூழ்நிலையிலுள்ள பொருள்களிலிருந்து வருகின்றன; என்றாலும், பல அருட்டிகள் ஒருவரின் உடலுக்குள்ளிருந்தே கிளம்பலாம். தசைநார்களின் நோவு, பசி, தாகம் என்பன புற-அருட்டிகள்* அல்ல; இவை அக அருட்டிகள்.§

* புற-அருட்டிகள்-வெளியேயிருந்து ஏற்படும் தூண்டுதல்கள்.

§ அக-அருட்டிகள்-உள்ளேயிருந்து ஏற்படும் தூண்டுதல்கள்.

உயிர்நிலையின் ஓர் அம்சம் மற்றோர் அம்சத்தைச் செயலுக்கு எழுப்பிவிட முடியும். புலனுணர்ச்சி-நரம்புகள் மூளையை எழுப்பிவிடுகின்றன. மூளை இயக்க-நரம்புகளை எழுப்பிவிடுகின்றன.

நடு இரவு; அயர்ந்த தூக்கம்; பயங்கரமான பெரு முழக்கம் கேட்கிறது; திடுக்கிட்டு எழுந்திருக்கிறான் ஒருவன். அந்த நேரத்தில், அருட்டிகள் ஊக்கிவிடுகிற அலைகள் இயக்க-நரம்புகளைத் தாக்கித் தசைநார்களை எழுப்பிவிடுகின்றன. இப்படி நரம்புகளைத் தாக்கித் தசைநார்களை எழுப்பிவிடும் அலைகளுக்கு ஊக்கும் அலைகள் அல்லது **ஊக்கிகள்** என்று பெயர்.

அருட்டியால் எழுப்பப்படுகிற எந்தச் செயலும் எழுப்பிவிட்ட அருட்டிக்குப் பிரதிச் செயலாக அமைகிறது. அருட்டி என்றால் பிரதிச் செயல்களை எழுப்பி விடுவது என்றே கூறவேண்டும்; பிரதிச் செயல் என்றால் அருட்டிகளால் எழுப்பிவிடப்படுவது என்றுதான் கூறவேண்டும். இந்த இரண்டு சொற்களும் பரஸ்பரத் தொடர்பு உடையவை. பிரதிச் செயல் என்பது ஓர் உயிர்நிலையில் அடங்கிக் கிடக்கும் செயல் அன்று. குறிப்பிடத்தகுந்த ஒரு செயல். மானஸ சாஸ்திரத்தில் 'செயல்' என்ற சொல்லை எந்தப் பொருளில் உபயோகிக்கிறோம் என்பதை மறக்கலாகாது. தார்க்குச்சி மாட்டை முன்னே பிடித்துத் தள்ளுவதன்று; அதை முன்னிலும் வேகமாக நடக்கும்படி செய்வது தான். அருட்டி பிரதிச் செயலை வெளியே பிடித்துத் தள்ளுவதன்று, ஒரு காரியத்தைத் துரிதப்படுத்துவது தான். காற்று அடிக்கிறது—நாணல் சாய்கிறது; மரக்கிளைகளும் அசைகின்றன. இங்கே காற்று அடிப்பது காரணம்; நாணல் சாய்வதும் மரக் கிளை

கள் அசைவதும் காரியம். சூரியன் உதிக்கிறது; தாமரை மலர்கிறது. இதில் சூரியனுடைய வெளிச்சம் அருட்டி; தாமரையின் மலர்ச்சி பிரதிச்செயல். ஒரு மரக் கிளையை வெட்டினால் அதிலுள்ள இலைகள் வாடி விடுகின்றன. வெட்டுதல் காரணம்; வாடுதல் காரியம். தொட்டாற் சுருங்கிச் செடி தொட்டவுடனே வாடிவிடுகிறது. இதில் தொடுதல் அருட்டி; சுருங்கி வாடுதல் பிரதிச்செயல்.

கிரகணத்தன்று ஒரு பையன் கடலில் நீராடப் போகிறான். அலைவந்து அவனை உருட்டித் தள்ளி விடுகிறது. அலை மோதுதல் காரணம்; பையன் உருண்டு விழுதல் காரியம். விழுந்தவன் எழுந்ததும் திரும்பவும் ஓர் அலை வருகிறது. உடனே நீருக்குள் மூழ்கிவிடுகிறான். அலை அவனைக் கடந்து போகிறது; அல்லது, அலை தன்னைக் கடந்து போகிறதற்காகப் பையன் நீர்-மட்டத்திற்கு மேல் எழும்பிக் குதிக்கிறான். இங்கே அலை அருட்டி, பையன் மூழ்குதல் அல்லது தாவிக் குதித்தல் பிரதிச் செயல். ஒருவன் செயலின்றி இருக்கும்பொழுது அருட்டிகள் அவனைச் செயலுக்குத் தூண்டுகின்றன. அவன் செயலில் இறங்கியிருந்தால் அருட்டிகள் அவனுடைய செயலில் ஏதேனும் ஒரு மாறுதலை உண்டுபண்ணுகின்றன. இந்த மாறுதல் தான் பிரதிச்செயல் எனப்படும்.

பிரதிச்செயலுக்குச் சிறந்த உதாரணமாகத் தசைநார்களின் இயக்கத்தையே கூறவேண்டும். என்றாலும், புற-அருட்டிகளினாலாவது, அக-அருட்டிகளினாலாவது ஏற்படுகிற தூண்டுதல்களின் காரணமாக ஓர் உயிர்நிலை செய்கிற எந்தச் செயலையும் பிரதிச் செயல் எனலாம்.

அருட்டி பிரதிச்செயலாகவும், பிரதிச்செயல் அருட்டியாகவும் எப்படி மாறி மாறி வருகின்றன என்பதைத் திருஷ்டாந்தத்தால் விளக்கிக் கொள்ள லாம். என் கவனமெல்லாம் ஒரு புத்தகத்தில் ஊன்றி நிற்கிறது. அப்பொழுது பக்கத்து வீட்டில் ரேடியோ மூலமாக வரும் இன்னிசை என் செவிகளில் விழு கிறது. செவியில் விழுந்த இசை புற-அருட்டி. இதற்கு ஏற்றபடி செவியின் அக உறுப்புக்களும் மூளையும் பிரதிச் செயலை விளைத்து, இசையைக் கேட்கச் செய் கின்றன.

முதல் தொடர்

புற-அருட்டி	பிரதிச்செயல்
இன்னிசை	செவியின் அக உறுப்புக்களின் இயக்கமும் மூளையின் இயக்கமும்

கேட்ட இன்னிசை புல்லாங்குழலின் இசை என்று உணர்கிறேன். முற்காலத்தில் நான் பெற்றிருந்த அனுபவத்திலிருந்து இந்த உணர்ச்சி இப்பொழுது ஏற்படுகிறது.

இரண்டாவது தொடர்

அக-அருட்டி	பிரதிச் செயல்
இன்னிசை கேட்டல்	சென்றகால அனுபவத்தின் ஞாபகம், கேட்ட இடம்.

என்னிடம் மிகவும் அன்புபாராட்டிய ஸ்திரீ ஒருவருடைய வீட்டில் நான் சிறுமியாக இருந்த போது முதன்முதலில் புல்லாங்குழலின் இசையைக் கேட்டேன். 'கேட்டல்' என்ற அருட்டிக்குக் கேட்ட இடத்தைப் பற்றிய பழைய ஞாபகம் பிரதிச் செயலாக அமைகிறது. புல்லாங்குழலிசை வீட்டைப்

பற்றிய பழைய ஞாபகம் அந்த அம்மாள் என்னிடம் பாராட்டின அன்புச் சின்னங்களை ஞாபகப்படுத்து கின்றது. இசையைக் கேட்ட இடம் அந்த இடத்தில் இருந்த அம்மாளை நினைக்கும்படி செய்கிறது.

மூன்ருவது தொடர்

அக-அருட்டி	பிரதிச் செயல்
புல்லாங்குழலிசைகேட்ட வீட்டைப்பற்றிய பழைய ஞாபகம்.	அந்தவீட்டில் இருந்த அம்மாளைப் பற்றிய பழைய ஞாபகம்.

அந்த அம்மாளுடைய அன்பைப் பற்றி எழுந்த பழைய ஞாபகம், இன்பமான ஒருவகை உணர்ச்சியை விளைக்கிறது. இதில் அம்மாளைப் பற்றிய பழைய ஞாபகம் அருட்டியாகவும் இன்பமான உணர்ச்சி பிரதிச் செயலாகவும் இருக்கின்றன.

நான்காவது தொடர்

அக-அருட்டி	பிரதிச் செயல்
அந்த அம்மாளைப் பற்றிய பழைய நினைவுகள்	இன்பமான உணர்ச்சி

இந்த இன்பமான உணர்ச்சி ஏற்பட்டதும் அந்த அம்மாளைப் பார்க்க போகவேண்டும் என்ற ஆசை எனக்குள் எழுகின்றது.

ஐந்தாவது தொடர்

அக-அருட்டி	பிரதிச் செயல்
இன்பமான உணர்ச்சி	அந்த அம்மாளைப் பார்க்கப் போகவேண்டும் என்ற ஆசை

இந்த ஆசை ஏற்பட்டவுடன் என்றைக்குப் போகவேண்டும் என்று தீர்மானம் செய்கிறேன்.

ஆருவது தொடர்

அக. அருட்டி	பிரதிச் செயல்
அந்த அம்மாளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை	எப்பொழுது போகவேண்டும் என்ற தீர்மானம்.

இப்படியே அருட்டிகள் பிரதிச் செயல்களுக்குக் காரணமாகின்றன. பிரதிச் செயல்கள் அருட்டிகளாக மாறிப் புதுப் பிரதிச்செயல்களை உண்டு பண்ணு கின்றன. இங்ஙனமே சங்கிலித் தொடர்கள் நீண்டு கொண்டே போகின்றன. இவைகளை எல்லாம் மிகவும் ரசமான ஒரு வாய்பாடாக வகுத்துக் காட்ட முடியும்.

அருட்டியைக் குறிப்பிட இதில் உள்ள முதல் எழுத்தை எடுத்துக்கொள்வோம். 'அ' அருட்டியைக் குறிப்பிடுகிறது. பிரதிச் செயல் என்பதில் உள்ள முதல் எழுத்து 'பி'; 'பி' பிரதிச் செயலைச் சுட்டு கிறது. ஆகவே வாய்ப்பாடு இவ்வாறு அமையும்:

அ–பி அல்லது அ–வுக்கு பி.

இந்த வாய்பாட்டை விரித்து வாசிப்பதானல், ஓர் அருட்டி ஒரு பிரதிச் செயலை எழுப்பிற்று என்ரு வது ஒரு பிரதிச்செயல் ஓர் அருட்டியால் எழுப்பப் படுகிறது என்ருவது கூறவேண்டும். ஓர் அருட்டி ஒருவன் மீது படும்பொழுது, 'இந்த அருட்டிக்கு அவனிடம் ஏற்பட்ட பிரதிச் செயல் என்ன?' என்று நாம் ஒரு கேள்வி கேட்கலாம். அவன் ஏதாவது ஒரு செயலைச் செய்வதைப் பார்க்கும்பொழுது, நாம் 'இவனுடைய இந்தச் செயலுக்கு அருட்டி என்ன?' என்று கேட்கலாம்.

வகுத்துக்கொண்ட வாய்பாட்டில் காணப்படும் குறைவுகளை நிறைவாக்கி அமைத்துக் கொள்வது

மிகவும் அவசியம். இந்த அ—பி வாய்பாடு கிடைத்து விட்டது; இனிமேல் ஒருவனுக்கு ஏற்படும் அருட்டி என்னவென்று தெரிந்து விட்டால் உடனே அவனிடம் எழப்போகும் பிரதிச் செயல் இன்னது என்று முன்னதாகவே சொல்லிவிட முடியும் என்று கருதலாகாது. அல்லது, இப்படிப் பட்ட ஓர் அருட்டியை இன்னவனுக்குக் கிளப்பி விட்டால் இவனிடமிருந்து இன்ன பிரதிச் செயலைப் பெறமுடியும் என்றும் கருதிவிட வேண்டாம். ஏன் என்றால் அருட்டிக்குப் புறமாக மற்றொரு முக்கிய விஷயம் இருப்பதை மறந்துவிடலாகாது. அது ஆளாளுக்குள்ள வேற்றுமை. ஓர் ஆள் மற்றோர் ஆளுக்கு முற்றிலும் வித்தியாசமானவன்; ஆகையால் குறிப்பிட்ட ஓர் அருட்டிக்கு மணியனிடமிருந்து ஒருவிதமான பிரதிச் செயலும், கடலில் குளிக்கப் போன மையனிடமிருந்து மற்றொரு விதமான பிரதிச் செயலும் எழுந்து வரும். அல்லது, அதே அருட்டி மணியிடத்திலேயே ஒரு நேரத்தில் ஒரு விதமாகவும், மற்றொரு நேரத்தில் மற்றொரு வித மாகவும் பிரதிச்செயல்களை எழுப்பி விடும். ஆகையால் அருட்டியை மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. அருட்டப்படுகிற ஆளையும் அறிந்திருக்க வேண்டும். இதிலிருந்து நம்முடைய வாய்பாட்டைத் திருத்தி அமைக்கவேண்டும் என்பது தெளிவாகிற தல்லவா? ஆள் அல்லது உயிர்நிலைக்கு முதல் எழுத் தான 'ஆ' என்பதை முன்பு ஒரு வாய்பாட்டில் உபயோகித்திருக்கிறோமே. அதே முறையில் இங்கே யும் அதே 'ஆ' எழுத்தை உபயோகித்து வாய்பாட் டைத் திருத்திக்கொள்ளலாம்.

அருட்டிக்கு—ஆள்; ஆளுக்குப்—பிரதிச்செயல்

அ—ஆ—பி.

இதை விரிப்பதானால், அருட்டப்படுகிற ஆள் எழுப்பும் பிரதிச்செயல் என்று வாசிக்கலாம்; அல்லது அருட்டியும் ஆளும் எழுப்புகிற பிரதிச்செயல் என்றும் வாசிக்கலாம்.

ஒவ்வொருவருடைய மனப்போக்கும், மனப் பண்பாடும், வித்தியாசமுள்ளவை. அதேபோல, அறிவுத்திறமையும், ஆக்கும் ஆற்றலும், நோக்கமும், லக்ஷ்யமும் எல்லாம் ஆளாளுக்கு வேற்றுமைப்படும். இவைகளுக்குக் காரணமான அகக் கூறுபாடுகளைத் தெரிந்து கொண்டால்தான் வேற்றுமைப் பட்டுக்கொண்டேயிருக்கும் பிரதிச்செயலின் போக்குகளையெல்லாம் தெரிந்துகொள்ள முடியும். ஆள்தோறும் காணப்படும் வேற்றுமைகளுக்குக் காரணமான அகக் கூறுபாடுகளை 'அமைப்பு,' 'நிலைமை.' 'செயல்-போக்கு' என்னும் மூன்று தலைப்புக்களில் தொகுக்கலாம்.

இந்தத் தலைப்புக்களின் கீழே பாகுபாடு செய்யக்கூடிய விஷயங்கள் எவை என்று பார்க்கலாம். ஒரு திருஷ்டாந்தம்: தொலையிலே போகிற ஒருவனைக் கைதட்டிக் கூப்பிடுகிற வழக்கம் பலரிடத்திலே உண்டு. இந்த வழக்கம் ஹாஸ்யமான பல சம்பவங்களுக்குக் காரணமாகிறது என்பதை நகைச்சுவை எழுத்தாளர்கள் ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுத விட்டுவிடலாம். எனக்கு நன்றாய்த் தெரிந்த எழுத்தாளர் ஒருவர் பட்டணத்தை விட்டுக் கிராமத்தில் வாழச் சென்றார். கிராமத்திலே அவர் குடியிருந்த வீட்டின் முற்றம் நாற்சதுரமான விசாலமுள்ள இடம். இந்த முற்றத்தில் கல் பதித்திருந்தது. இதைச் சூழத்

திண்ணைக் கட்டு இருந்தது. தெற்குப் பக்கத்துத் திண்ணையிலே அவர் மேஜை நாற்காலி போட்டுக் கொண்டு தமது எழுத்தாளர் உத்தியோகத்தைச் செய்துவந்தார். அவருடைய மனைவி முற்றத்திலே அரிசி, வற்றல், வடகம் முதலிய பொருள்களில் ஏதாவது ஒன்றை உலர வைத்துவிட்டு வேறு அலுவலாகப் போய்விடுவாள். எழுத்தாளர் ஆர்வத்தோடு எழுதும் விஷயத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது காக்கைகள் கும்பலாக வந்து உலர வைத்திருக்கும் பண்டங்களைத் தின்னத் தொடங்கும். அவருக்கு இது பரம சங்கடமாக இருக்கும். ஆகையால், காக்கை வரும்பொழுதெல்லாம் கையைத் தட்டி ஓட்டத் தொடங்கினர். கைகளைத் தட்டும் சத்தம் கேட்டவுடனே காக்கைகள் பறந்துவிடும். ஆனால், சிட்டுக்குருவி அவ்வளவு எளிதில் போகாது. இருந்தாலும், பலமாகத் தட்டும் பொழுது அதுவும் பறந்து போகும். காக்கைகளை ஓட்டி ஓட்டி, எழுத்தாளருக்கு நாளடைவில் கையைத் தட்டும் வழக்கம் ஏற்பட்டது. அவர் சென்னைக்குத் திரும்பி வந்ததும், டிராம் வண்டி ஓடும் ரஸ்தா ஓரமாக ஒரு வீடு அமர்த்திக்கொண்டு வாழத் தொடங்கினர். வாசற்கதவுக்கு எதிராக அவருடைய அறை இருந்தது. பட்டணத்திலே அவர் குடியிருந்த வீட்டில் காக்கை-உபத்திரவம் அவ்வளவாக இருக்கவில்லை. பிச்சைக்காரர்களுடைய உபத்திரவம்தான் அதிகமாக இருந்தது. கையைத் தட்டிக் காக்கை ஓட்டப் பழகின எழுத்தாளர் பிச்சைக்காரர்களை ஓட்டுவதற்காகத் தம் வழக்கப்படி கையைத் தட்டத் தொடங்கினர். கையைத் தட்டுவதன் கருத்து என்ன என்று தெரியாத பிச்சைக்கார்கள், தங்களுக்குப் பிச்சை போடு

வதற்காக எழுத்தாளர் யாரையோ கையைத் தட்டி அழைப்பதாக நினைத்துக் கொண்டு வாசலிலேயே காத்திருப்பார்கள். அவருக்குப் பிரமாதக் கோபம் வந்துவிடும். 'போ என்று கையைத் தட்டுகிறேன்; அது கூடத் தெரியாமலா நிற்கிறாய்?' என்று கத்து வார். கையைத் தட்டுவதன் கருத்து 'போ!' என் பதுதான் என்று வருகிற பிச்சைக்காரருக்கெல்லாம் கற்றுக்கொடுக்க வேண்டிய தேவை எழுத்தாளருக்கு ஏற்பட்டுவிட்டது.

ஏழை எழுத்தாளருக்குக் காக்கையின் உடல் அமைப்புக்கும் பிச்சைக்காரனின் உடல் அமைப்புக்கு முள்ள வேற்றுமை தெரியவில்லை. உயிர்தோறும் உடல்களின் அணுக்கட்டுக் கோப்பு* வேற்றுமைப் படு கிறது. பறவைகளின் உடலை அமைக்கும் அணுக்கட் டுக்கோப்பு கையைத்தட்டினால் எழும் சத்தத்திற்குப் பயந்து ஓடும் முறையிலே அமைந்திருக்கிறது. ஓசை ஒலிகளால் அதிர்ச்சி ஏற்படக்கூடிய முறையிலே, நாகப்பாம்பின் உடலை ஆக்குகிற அணுக்கட்டுக் கோப்பு, அமைந்திருக்கிறது. அதனாலே தான் பாம்பாட்டி குழல் ஊதும்பொழுது நாகம் நிலைகொள் ளாமல் ஆடுகிறது. கையைத் தட்டிப் பறவைகளை ஓட்டுகிற விதமாக நாய் பூனைகளை ஓட்ட முடியாது. வீட்டிலே பாட்டி நாயைக்கண்டு, 'வெட்டு!' என் றும், பூனையைக் கண்டு 'சூத்து!' என்றும் கூச்ச லிடுவதைக் கேட்டதில்லையா? மனிதனுடைய அதி காரக் குரலுக்குத் தான் இவை கீழ்ப்படியும். ஸர்க்க ஸில் புலி சிங்கங்களைப் பழக்குகிறவர்கள், புலிக்கு

---

* அணுக்கட்டுக் கோப்பு :— ஜடப்பொருள்களை வடிவாக்குகிற அணுப்பொருள்கள் அடுக்கும் அமைப்புமாக கட்டிவைக்கப்படும் இயல்பு.

ஒருவகையான குரலையும் சிங்கத்திற்கு மற்றொரு வகையான குரலையும் காட்டுகிறார்கள். அப்படியே யானையும் பாகனுடைய தொனி வேற்றுமைகளை அறிந்துகொள்ளும். மற்றெல்லா மிருகங்களைவிட முற்றிலும் வித்தியாசமான அணுக்கட்டுக்கோப்பினால் ஆனது மனித சரீரம். அப்படியே மனிதனுடைய மூளையை அமைக்கும் அணுக் கட்டுக்கோப்பு ஆள் தோறும் வேற்றுமைப் படுகிறது. இப்படி ஆள் தோறும் வேற்றுமைப் பட்டிருக்கும் மூளையின் சூக்ஷ்மமான கட்டுக்கோப்பு வளர்ச்சிக்கும் வயதுக்கும் ஏற்றவாறு மாறுதல் அடைந்துகொண்டே வருகிறது. எந்தப் பிரதிச் செயலும் மூளையின் அமைப்பைச் சார்ந்திருக்கிறது. உள்ளமைப்பைப் பார்க்கமுடியாத போதிலும், ஒருவனுடைய ஜன்ம சுபாவங்கள் அவனுடைய அமைப்பிலேதான் ஸ்திரமாக இருக்கின்றன என்று ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்லமுடியும். ஒருவனுடைய பிரதிச் செயலைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், பாரம்பரியம், ஏற்கெனவே அமைந்திருந்த சூழ்நிலைகள், இறந்தகாலத்தில் செய்த கிரியைகள் முதலியவற்றோடு தொடர்புற்றிருக்கின்ற அளவிலே பிரதிச் செயலின் காரணங்களையும் கூட்டிக் கொள்ளவேண்டும். ஆகையால், ஒரு உயிர்நிலையின் பிரதிச் செயலைப் பாங்காய் அமைக்கின்ற கூறுபாடுகளில் முக்கிய அம்சமாக ஒருவனுடைய அமைப்பிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸ்திதி—State

இங்கே நிலைமாறுகிற ஸ்திதியைத்தான் குறிப்பிடுகிறோம். "குடிகாரன் பேச்சுப் பொழுது விடிந்தால் போச்சு," என்னும் பழமொழியைக் கேட்டதில்லையா? "பசிக்கு ருசி வேண்டாம்; தூக்கத்திற்குப் பாய் வேண்டாம்" என்பார்களே. "பசி ருசி அறியாது; நித்திரை சுகம் அறியாது." எல்லாம் காலத்துக்கு ஏற்ற கோலம். ஒரு சமயத்திலே ஒருவன் கலைத்திருக்கிறான்; மற்றொரு நேரத்தில் தூக்கத்தின்பேரில் ஏக்கமாக இருக்கிறான்; இன்னொரு தருணம் அயர்ந்த தூக்கத்தில் இருக்கிறான்; பிறிதொரு தருணம் விழித்துக் கொள்கிறான்; ஒரே அடியில் ஒரு விஷயத்தில் பித்துப் பிடித்துத் திரிகிறான்; ஒன்றைச் செய்து முடிக்கவேண்டும் என்று 'மெய்வருத்தம் பாராமல் பசி நோக்காமல்', கண் துஞ்சாமல் ஏதேதோ காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறான். இப்படியே மனிதனுடைய மன நிலைக்கு ஏற்றபடி அவனுடைய பிரதிச்செயலும் மாறிக்கொண்டே இருக்கிறது. குடிகாரன் ஒருவன் ஒரு கல் - தூணைக் கட்டி அணைத்து முத்தாடி "என் கண்ணே, கண்ணாட்டி, என் காதலியே! உன் கன்னம் என்ன? மலர்ந்த ரோஜாவா?" என்று கொஞ்சுகிறான். பேரறிவாளரும் அபாரமான சாந்தகுணமும் வேதனையைத் தாங்கும் ஆற்றலும் எவரையும் நோகச் செய்யலாகாது என்ற விரதமும் உடைய ஒருவர் அகோர வியாதியிலிருந்து மீண்டு வந்து, உடம்பு தேறும் தருணத்தில், தமக்கு அருந்துணையாக இருந்தவர்களின் மனம் நோகப் பேசிப் பத்திய முறைகளுக்கு அடங்காமல் எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறப்பார்க்கிறார். அவரே, உடம்பு சுகமானதும், தமது நடத்தைக்

காகத் தூக்கப் படுகிறார். இவற்றை எல்லாம் சிந்திக்கும்பொழுது, சோர்வும் அயர்வும் அசதியும் துக்கமும் விழிப்பும் அருட்டிகளுக்கு ஏற்ற விதமான பிரதிச் செயல்களை உண்டுபண்ணுவன அல்ல; வேற்றுமைப் பட்ட பிரதிச்செயல்களை எழுப்பிவிடுவன. மது பானத்தால் வெறித்திருக்கும் பொழுதும், காய்ச்சல், பசி தாகங்களால் வருந்தும்பொழுதும் ஓர் உயிர்நிலையில் ஏற்படும் ரசாயனரீதியான நிலைக்கு ஏற்றவாறு ஸ்திதிபேதமும் காணப்படுகிறது. இத்தகைய சரீர நிலைமை, ரசாயனக் கிரம-வேறுபாடு-நிலைமை, என்பவற்றோடு மனவெழுச்சி, மனச்சோர்வு, கோபம், அதிகச் சந்தோஷம் முதலான மனோவிகார நிலைமைகளையும் கவனிக்க வேண்டுமல்லவா? ஆகையால், பிரதிச் செயல்களைப் பற்றித் தீர்மானிக்கும்பொழுது, அவற்றிற்குத் தற்காலிகமாக அமைந்த ஸ்திதியையும் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம் என்று ஏற்படுகிறதல்லவா?

மூன்றாவது கூறுபாடு. செயல்-போக்கு :—இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்கலாம். பக்கத்து வீட்டு விசாலாக்ஷி கம்மலின் திருகாணியைக் கீழே போட்டுவிட்டாள்; போட்ட இடத்தில் தேடினாள்; அகப்படவில்லை. துடைப்பத்தால் வீடு எங்கும் பெருக்கினாள்; குப்பையைத் தேடிப் பார்த்தாள்; அகப்படவில்லை. 'ஒரு வேளை கீழே விழுந்து தெறித்து வெளியே போயிருக்குமோ?' தெருவாசல் பக்கமாகக் குனிந்து தேடினாள். 'மினு மினு' என்று மின்னியதெல்லாம் விசாலத்துக்குப் பொன் திருகாணியாகத் தோன்றியது. பொன்னாகத் தோன்றியவைகளை எல்லாம் கையால் கிளறிப் பார்த்தாள். காணாமல்

போன திருகாணி, மின்னிய எந்தப் பொருளையும் பொன் திருகாணியாக இருக்கலாமோ என்று என்றும்படி செய்துவிட்டது. தேடுதல் என்னும் பிரதிச் செயலுக்குக் காணமல்போன திருகாணி அருட்டியாக இருந்தது. திருகாணி தவறிப் போகாமலிருந்தால், மினுங்கும் அந்தப் பொருள்களை விசாலம் கண்ணெடுத்தும் பார்த்திருக்கமாட்டாள். 'தேடுதல்' என்னும் பிரதிச் செயல் அருட்டியாக மாறிப் பிற பொருள்களையும் திருகாணியாக எண்ணவும், தேடவும் செய்துவிட்டது. அவளுடைய செய்கைப் போக்கோடு இசைந்திருந்த அருட்டிகளுக்கு ஏற்ற வாறு பிரதிச்செயல்களும் வெகுவிரைவில் எழுந்து கொண்டே இருந்தன.

குறித்த ஒரு நேரத்தில் நம்முடைய கவனம் முழுவதையும் கவர்ந்து நிற்கிற செய்கைக்கு ஏற்ற விதமாக அருட்டிகளும் அவற்றின் பிரதிச்செயலும் இருக்கும். ஓர் அருட்டி தோன்றி ஒருவரை எழுப்பிவிடுகிற மட்டும், அவர் சும்மா இருக்க முடியாது. எப்பொழுதும் ஏதாவது செய்து கொண்டே இருப்பார். சும்மா இருக்கின்ற திறம் மனிதனுக்கு அரிது என்று ஏற்கெனவே கூறியதைத் திரும்பவும் நினைப்பூட்ட வேண்டும். மனிதன் ஏதோ ஒன்றைச் செய்கிறன்; எங்கேயோ போகிறன்; ஏதோ ஒரு விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறன். இப்படியே மனிதன், தான் இயற்றிவரும் செய்கைக்குப் பொருத்தமான அருட்டிகளைப் பயன்படுத்திக் கொள்கிறன்; வேண்டாத அருட்டிகளை விலக்கித் தள்ளுகிறன். செய்கைப் போக்கிற்குப் பொருத்தமான அருட்டிகளுக்குத்தான் சரியான பிரதிச் செயல்கள்

கிடைக்கும். இதனாலே தான், பிரதிச் செயலைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது, ஒருவனுக்கு ஏற்படும் அருட்டிகள் அவனுடைய செயல்-போக்குக்குப் பொருத்தமாக இருக்கின்றனவா என்று ஆராய்வதும் வெகு முக்கியமானது.

மனிதன் செய்யும் எந்தப் பிரதிச் செயலும் தானாக எழுவதுமில்லை; உறுக்குதலினால் எழுவதுமில்லை. ஏனென்றால் எந்தப் பிரதிச் செயலுக்கும் ஏதாவது ஓர் அருட்டி இருந்தே தீரவேண்டும். குதிரையைத் தண்ணீர் வரைக்கும் 'கறகற' என்று இழுத்துக்கொண்டு போகலாம்; அன்றி, அதைக் குடிக்கப் பண்ணமுடியாது. ஆகையால், செயல்கள் அனைத்தும் ஓர் உயிர்நிலையின் சுயமான செயல்கள் என்றே கருதவேண்டும். நாம் வகுத்த அ—ஆ—பி என்ற வாய்பாட்டை மனிதன் செய்யும் சகல பிரவர்த்திகளுக்கும் பொருத்திவிட்டால், மனிதன் எதையும் தானாகவே செய்வதில்லை என்றும், யந்திரப் பதுமைபோல, புற-அருட்டிகளுக்கும் அக-அருட்டிகளுக்கும் பொருத்தமான பிரதிச் செயல்களைச் செய்பவன் என்றும் ஏற்பட்டுவிடும். அதோடு, உறுக்குதலினால் எழும் செயல்களும் இல்லை என்றாகி விடும்.

ஒருவன் அயர்ந்த நித்திரையில் பக்கத்தில் கிடந்த கையை உடல்மீது போட்டுக் கொள்கிறான். இது ஒரு செயல். மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது, இந்தச் செயலுக்கு அருட்டி என்னவென்று தெரியாது. மனிதனுடைய சரீரத்திற்குள்ளே அருட்டிகள் குப்பல் கும்பலாக எழுந்துகொண்டேயிருக்கின்றன. நாம் எப்பொழுதும் எந்தப் பிரதிச்

செயலுக்கும் புற-அருட்டிகளைத் தேடலாகாது. ஒரு செய்கைக்குப் புற-அருட்டிகள் காணப்படாவிட்டாலும் அக-அருட்டிகள் காணப்படும். குறித்த ஒரு செய்கைக்குக் காரணமான அக-அருட்டிகள் நமக்குப் புலப்படா. அக-அருட்டிகள் புலப்படாத போது, ஒருவனுடைய செய்கை தானாகவே நிகழ்வதாக நமக்குத் தோன்றலாம். பசியும் தாகமும் அக-அருட்டிகள்; பேசித் தளர்ச்சியும், திமிர்ப்பும், நோவும் பிறவும் அக-அருட்டிகளே. இரத்த—ஓட்டத்தின் வேற்றுமைப்பாடுகளையும் அக-அருட்டிகளாகவே கருதவேண்டும்; கோபம், பகை, பொறாமை முதலியனவும் அக-அருட்டிகளேயாம். இப்படியே, நூறாயிரங்கோடி அக-அருட்டிகளால் இயங்குகிற மனிதன் அருட்டிகளில்லாமல் தானாகவே எழும் செயல்களை உடையவன் என்று எப்படிச் சொல்லமுடியும்? ஒருவன் ஜாக்ராவஸ்தை*யில் ஆழ்ந்து சிந்தித்த ஒரு பிரச்னைக்கு ஸ்வப்னாவஸ்தை§யில் ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடும். அல்லது, ஜாக்கிராவஸ்தையிலேயே நெடுங்காலமாகச் சிந்தித்துக்கொண்டிருந்த ஒரு பிரச்னைக்குச் சும்மா இருப்பதுபோலத் தோன்றுகிற ஒரு நிலையிலே, முடிவு காணமுடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில், அவனுடைய மனத்திற்குள் எழுகின்ற அருட்டிகள் பிரதிச் செயல்களுக்குக் காரணமாகின்றன.

முதலாவது விஷயம்:—ஒருவன் சிந்தனை செய்கிற ஒரு விஷயம் மற்றேதேனுமொரு செயல்-போக்கிற்கு இசைந்தவாறு ஓர் அருட்டியால் ஏவுதல்

---

* விழிப்பு நிலை, § கனவு நிலை

அடையலாம். ஒரு புற - அருட்டி ஓர் அகப் - பிரதிச் செயலைக் கிளப்பி விட்டிருக்கலாம். அந்த அகப் - பிரதிச் செயல் பிரத்தியக்ஷமான உரு அடைந்த பிரவர்த்தியாக வெளிப்படும் வரைக்கும் நெடுங்காலம் செயல்-நிலையில் மறைந்தே இருக்கலாம்.

இரண்டாவது விஷயம்:—தெளிவாக உரு அடைந்த செயல்கள் நிகழும்பொழுது, குறிப்பிட்ட ஒரு செயல், நிகழ்ச்சிக் காலத்துக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். அங்ஙனம் இராவிட்டால், அந்தச் செய்கை நினைப்பதற்கும் அரிய அசம்பாவிதச் செயலாகவும் பயனற்றதாகவும் காணப்படும்.

கல்யாண விருந்துக்கு வந்திருந்த நண்பர்களோடு வெகு ரசமாகப் பேசிக்கொண்டிருந்த வைத்தியர் சம்பாஷணையை மொட்டையாக நிறுத்திவிட்டுப் பரபரப்பாக எழுந்து வாசலை நோக்கி ஓடுகிறார். பார்க்கும் விருந்தினர்கள் இந்தச் செயலை அசம்பாவிதமாகக் கருதுகிறார்கள். வாசல் பக்கமாக ஓடின டாக்டர் திரும்பவும் வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிறார். உடனே கூட இருப்பவர்கள், "என்ன டாக்டர்? பித்துக்கொள்ளி போல ஓடினீரே; என்ன சமாசாரம்?" என்று கேட்கிறார்கள். "ஒரு நோயாளியைப் பார்க்கவேண்டும் என்று போனேன்; அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று திரும்பி வந்தேன்" என்பாரானால், அவருடைய செய்கை கேட்பவர்களுக்கு அசம்பாவிதமாகத்தான் தோன்றும். ஆகையால், நகைப்புக்கு இடமாகும். டாக்டருடைய செய்கை சூழ்நிலைகளுக்கு முரணாக இருந்ததோடு, டாக்டருடைய உருப்பெற்ற செய்கை பயனற்றதாகவும் முடிந்தது. இதற்கு மாறாக, வெளியே செல்வ

தற்று எழுந்த டாக்டர் காரில் ஏறிக்கொண்டு நோயாளியைப் பார்க்கப்போயிருந்தால், அவருடைய செய்கை தாற்காலிகமாக எழுந்த ஓர் அருட்டிக்குப் பொருத்தமான பிரதிச் செயலாகிவிடும். டாக்டர் விருந்தினரோடு தமாஷாகப் பேசிக்கொண்டிருந்த நேரத்திலும் அவருக்குள் அக - அருட்டிகளும் அவற்றிற்குரிய அக - பிரதிச் செயல்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன. புறம்பான செய்கைப் போக்குக்குள்ள அளவிலே அகச்செயல்-போக்குக்கும் ஏற்றம் உண்டு. அகச்செயல்-போக்கை நாம் மதித்தாலும் மதிக்காவிட்டாலும், அருட்டிகள் அகத்தும் புறத்தும் எழுவதினாலேதான் அகத்தும் புறத்தும் பிரதிச் செயல்கள் தோன்றுகின்றன. இந்த விஷயமாக மானஸ சாஸ்திரத்தின் முடிவு: "எல்லாவற்றையும் ஆலோசிக்கும் அளவிலே, ஏறக்குறையத் தானாகவே எழும் செயல்கள் இருக்கலாம்; என்றாலும், எந்தச் செயலும் முற்றிலும் தானாகவே எழுகின்றதெனச் சொல்லமுடியாது." இந்த முடிவு கோமுட்டி-வழக்குத்-தீர்ப்பாகவே இருக்கிறது.

தினந்தோறும் நிகழும் சம்பாஷணைகளில் உறுக்குதலினால் விளையும் செயல்களைப் பற்றிய பேச்சுக்களைக் கேட்கிறோம். யமன் வாயில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற நோயாளி ஒருவனைப் பெனிஸிலின் மருந்துப் பிரயோகத்தால் பிழைப்பூட்டலாம் என்று ஒரு டாக்டருக்குத் தோன்றுகிறது. உடனே, சண்டமாருதத்தோடு கொட்டிப் பொழியும் மழையைப் பாராமல் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். சாய்ந்து விழுந்த மரத்தால், போகும் ரஸ்தா அடைபட்டுவிட்டது. நோயாளியின் வீட்டிற்குப் போக

வேறு வழியும் இல்லை. டாக்டரின் செய்கைக்குத் தடை ஏற்பட்டுவிட்டது. சூழ்நிலைகள் "மேலே போகாதே! உன் உயிருக்கே அபாயம்!" என்று உறுக்கிப் பயமுறுத்துகின்றன. டாக்டருக்கோ, எப்படியாவது நோயாளியிடம் போகவேண்டும் என்ற ஒரே எண்ணந்தான். வீட்டுக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை. சூழ்நிலைகள் ஒன்முய்க் கூடி உறுக்கியதால் நிகழ்ந்த விளைவு, டாக்டர் வீட்டுக்குத் திரும்பி வந்ததேயாம். அக-அருட்டிகளினுல் நிகழ்ந்த பிரதிச் செயல்களை புற-அருட்டுகள் உறுக்கித் தமக்குக் கீழ்ப்படியச் செய்தன. இப்படி உறுக்குகிற அருட்டிகளுக்குக் கீழ்ப்படியவோ மீறவோ ஒரு ஆளுக்கு அதிகாரமும் உண்டல்லவா? நோயாளியைக் காக்கவேண்டும் என்று உறுதிகொண்ட டாக்டர் மோட்டார்காரை இந்தப் பக்கத்திலேயே விட்டு, மரத்தின்மேல் ஏறி அதைத் தாண்டி மறுபக்கம் சென்று ஓட்டமும் நடையுமாக நடந்தாவது, வேறு ஏதேனும் வாகனத்தை அமர்த்திக் கொண்டாவது போகிறுர் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானுல், உறுக்கிக்கொண்டிருந்த புற-அருட்டிகளை மீறிச்செல்லும் சுதந்தரம் அவருக்கு இருப்பதாக ஏற்படுகிறதல்லவா? இதனுல், உறுக்குகிற அருட்டிகளை மீறும் சுதந்திரம் ஓர் ஆளுடைய அகநிலையையும் செயல்ப்போக்கையும் பொறுத்திருக்கிறது என்பது தெளிவு.

ஸமூகக் கட்டுப்பாடுகள் ஒருவனது செயல்களை மாற்றிவிடக்கூடிய ஆற்றல் பெற்றவை; ஒருவனை அவனுடைய பிரகிருதிக்கு முற்றிலும் வித்தியாசமாக உருவாக்கி விடுகின்றன. அந்தக்

கட்டுப்பாடுகள் தம்முடைய போக்குக்கு ஏற்றபடி அவனுடைய செய்கைப் போக்கை இப்படியாவது அப்படியாவது திருப்பிவிடுகின்றன என்றெல்லாம் ஸமூக விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். இத்தகைய பேச்சை மானஸ சாஸ்திரம் ஒருபோதும் ஒப்புக் கொள்ளாது. ஒரு ஜன ஸமூகத்திற்குள்ள ஆற்றல்களினால் வெளிப்படும் விளைவுகளைத் தொடருவதே சமூக சாஸ்திரத்தின் நோக்கம். ஆகையால், ஓர் உயிர்நிலைக்குத் தானாக எதையும் செய்வதற்கு உரிமை இல்லை; அது செயலற்றது என்று கருதி இந்தச் சம்பாஷணை விஷயமாகச் சமூக சாஸ்திரம் தன் அபிப்பிராயங்களை வெளியிடும். ஆனால், மானஸ சாஸ்திரமோ ஆள்தோறும் நிகழும் செயல்களையும் ஒவ்வோர் ஆளுடைய பிரவர்த்தியையும் அறிவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றது; ஆகையால், உறுக்குதலின்பேரில் உயிர்நிலைகளின் செயல்கள் நிகழ்வதை ஒப்புக்கொள்ளாது; ஒருவருடைய செயலைப்பற்றிப் பேசும்பொழுது, அவர் இப்படிச் செய்வதற்குகந்த அருட்டிகள் ஏற்பட்டிருந்தன என்றுதான் சொல்லும். பிறருடைய பழிப்புக்கு ஆளாகாதபடி அருட்டிகள் அவனைச் சூழ்ந்து நின்றன; ஸமூகத்தோடு இசைந்து வாழ்வதற்கமைந்த அருட்டிகள் அவருக்கு ஏற்பட்டிருந்தன; தொகுதியின் செயல்போக்கோடு இசைந்து போகக் கூடிய அருட்டிகளுக்குப் பொருத்தமான பிரதிச் செயல்களை அவர் செய்ய நேர்ந்தது என்றுதான் மானஸ சாஸ்திரம் ஓர் ஆளின் செயல்களைப்பற்றிக் குறிப்பிடும். "ஊரோடு இசைந்து வாழ்!" "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்!" என்

றெல்லாம் சொல்லிப் பயமுறுத்தி உறுக்கிக்கொண்டிருக்கிற இந்து - ஜனஸமூகத்தாரின் மத்தியிலே ஒன்றிரண்டு முகம்மதியக் குடும்பத்தார் குடியிருக்க நேர்ந்தால், தீபாவளிப் பண்டிகை அன்று தம்முடைய பிள்ளைகளுக்குப் பட்டாசும் புதுத் துணிகளும் வாங்கிக் கொடுப்பார்கள். இந்தச் செய்கைக்குக் காரணம் என்ன? சூழ்நிலையின் உறுக்குதலுக்குப் பயந்து செய்ததாக இதைக் கருதலாகாது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அக்குடும்பத்தார் தமது வாழ்க்கையில் சில இணக்கங்களுக்கு இடங்கொடுக்கும் மனப்போக்குடையவர்கள் என்றுதான் கருத வேண்டும். ஏனென்றால், மனிதன் சூழ்நிலையின் உறுக்குதலுக்குப் பயந்து எதையும் செய்பவன் அல்லன்; சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன் வாழ்க்கையைச் சரிப்படுத்திக் கொள்ளும் மன இயல்புடையவன்;—இந்த நியதியே அவனுடைய ஒழுக்கங்களுக்கு முக்கிய காரணம்.

செயலுக்கு முந்திய திட்டம்

பாட்டுக் கச்சேரி ஆரம்பமாகப் போகிறது. மிருதங்கக் காரன் மிருதங்கத்தைத் தட்டிக் கொட்டிச் சுதி கூட்டி ஆயத்தமாக வைத்துக் கொள்கிறான். அவனுக்கு முந்தியே, சுதி போடுகிறவன் தம்புருவைச் சுதி கூட்டி வைத்துக் கொள்கிறான். தனலக்ஷ்மி பாடப்போகிறாள்; அவள் அடக்கமாகத் தொண்டையைக் கனைத்துக் கொள்கிறாள். பிடில் வாசிக்கிறவனும் அப்படியே முன்னதாகச் சுதி கூட்டி ஆயத்தம் செய்து கொள்கிறான். இவை யாவும் பாட்டுக் கச்சேரிக்கு முற்படும் ஆயத்தத் திட்டங்கள்.

கௌரி முதல் தடவையாக வானொலி நிலையத்தில் (ரேடியோவில்) பாடிவிட்டு, ஒலி பரப்பும் அறையிலிருந்து வெளியே வந்தாள். ரேடியோவில் அறிவிப்போன், "கௌரி, இதென்ன? ஆயத்தப் பிசகு பண்ணிவிட்டாயே" என்றான். கௌரிக்கு அவன் சொன்னதின் கருத்து விளங்கவில்லை. திகைத்து நின்றாள் ஒரு நிமிஷம். பின்பு, அறிவிப்போனிடம், "எப்படி?" என்று கேட்டாள். "நான் கை காட்டின உடனே தொடங்கவில்லையே! தொடங்குவதற்கே ஒரு நிமிஷம் போய்விட்டது. வீடுகளிலே ஒலிப் பெட்டிகளில் கேட்கிறவர்களுக்கு அது ரொம்ப நீண்ட காலமாகத் தோன்றுமே," என்று பொறுமையாக விளக்கிச் சொன்னான். கௌரி அடுத்த நிகழ்ச்சிக்குப் பாட, வானொலி நிலையத்தில் ஒலி பரப்பும் அறைக்குப் போனபொழுது, அறிவிப்போன் அறிக்கையைச் சொல்லி முடிப்பதற்கு முந்தியே பாடத் தொடங்கிவிட்டாள். ஒலிப் பெட்டியில்

பாட்டைக் கேட்டவர்களுக்குப் பல்லவியின் ஆரம்ப வார்த்தைகள் கேட்கவில்லை. ஏன் என்றால், அறிவிப்போன் தான் பேசும் ஒலி வாய்க்காலை அடைத்து விட்டு, பாடுகிறவளுக்குரிய ஒலிவாய்க்காலைத் திறந்த பிறகுதான் பாடத் தொடங்கும்படி சமிக்கை செய்வான். அன்றைக்குப் பாடிய பிறகு, கௌரி வெளியே வந்தபோது, அறிவிப்போன் அவளுடைய ஆயத்தத் திட்டத்தைப்பற்றி முந்தின நிகழ்ச்சியின் போது சொன்ன அதே குற்றங்குறைகளைக் குறிப்பிட்டான்.

ராமு டைப்-ரைட்டிங் பரீக்ஷைக்குப் போனான். டைப் அடிக்க வேண்டிய பரீக்ஷைப் பத்திரம் கிடைத்தது. படிப்பதற்குக் கொடுத்திருந்த நேரத்திற்குள் அதைப் படித்துவிட்டான். டைப்-ரைட்டரில் காகிதம் செருகித் தயாராக வைத்துக்கொண்டான். டைப் அடிக்கச் சமிக்கை கிடைத்தவுடனே, அவன் கை விரைவாக ஓடவில்லை. இந்த ஆயத்தக் குறைவினால், டைப் அடிக்கும் வேகம் குறைந்து விட்டது. ஆயத்தத் திட்டக் குறைவினாலே அவன் பரீக்ஷையில் தோற்றுவிட்டான்.

பள்ளிக்கூடத்தில் ஓட்டப் பந்தயம் நிகழும் பொழுது, ஓட்டத்தைத் தொடங்க வேண்டிய கோட்டில் ஓடுவதற்காக நிற்கும் பையன்களைப் பார்த்திருக்கிறீர்களா? ஒருவன் நெஞ்சை முன்னே விட்டுக்கொண்டு ஒரு காலை உயர்த்திக் கைகளையும் மடித்துக்கொண்டு நிற்பான். வேறொருவன் மற்றவர்களை விட அதிகமாகக் குனிந்து நிற்பான். ஒருபந்தய ஓட்டத்தில் இருபது பையன்கள் சேர்ந்திருந்தால், அவர்களுடைய ஆயத்தத் திட்டமும் ஆள்தோறும் வித்தியாசமாக இருப்பதைப் பார்க்கலாம்.

இவற்றை யெல்லாம் பார்க்கும்பொழுது, ஒரு செயல் வெளிப்படையாக உருக்கொள்வதற்கு முந்தியே நிகழ்கிற ஆயத்தத் திட்டம் ஒன்றிருப்பதாகத் தெரிகிறதல்லவா? செயலுக்கு முந்திய திட்டம் குறைந்திருந்தால், அது பந்தய ஓட்டத்திற்கு இடையூறாக இருக்கும்.

பந்தயம் ஓடுகிறவர்கள், ஓட்டம் தொடங்குவதற்காகக் குறித்திருக்கிற கோட்டில் நிற்கும்பொழுது அவர்களுடைய நிலையைப் பார்த்தால், அவரவர்களுடைய உடற்கூற்றுக்கும் உள்ளத்திலே கொண்ட உறுதிக்கும் இசைந்த அளவிலே ஆயத்தத் திட்டம் செய்திருப்பதைப் பார்க்கலாம். பந்தய ஓட்டத்தின் ஆரம்பத்தில் முன்னேக்காய்ச் செல்வதற்கேற்ற விதமாக ஒவ்வொருவனுடைய அங்க நிலையும் பொருத்தம் பெற்றிருப்பதைக் கவனிக்கலாம். ஒரு செயலுக்கு முற்படுகிற இந்த ஆயத்தத் திட்டம் நான்கு நிலைகளை உடையது:—**1. ஆரம்பத் திட்டம், 2. தொடர்ச்சித் திட்டம், நிர்வாகத் திட்டம் அல்லது போக்குத் திட்டம், 3. நிலைமைத் திட்டம், 4. எல்லையை நெருங்கிய திட்டம்** என்பனவாம்.

பிரதிச்செயலுக்கு முன் ஏற்படுவது ஆரம்பத் திட்டம். இதைச் சார்ந்திருக்கிறது ஒரு பிரதிச் செயலின் நிகழ்ச்சிக் காலம். ஆரம்பத் திட்டம் அளவுக்கு மிஞ்சினாலும் பிந்தினாலும், பிரதிச்செயல் நிகழவேண்டிய காலத்தில் நிகழாமல் இலக்குத் தவறி விடும்.

பிரதிச்செயலின் நிகழ்ச்சிக் காலம் ஆரம்பத் திட்டத்தோடு தொடர்புற்றிருக்கிறது. பிரத்தியக்ஷப் பரிசோதனை சாலைகளில், குறித்த ஒரு பிரதிச்செயல்-நிகழ்ச்சிக்குத் தேவையான காலம் எவ்வளவு என்று

பரிசைஷபார்த்து அளந்திருக்கிறார்கள். பரிசோதனை சாலையில் ஒரு மேஜை இருக்கும். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாமல் மறைப்பதற்காக மேசையின் நடுவில் ஒரு திரை இருக்கும். திரையின் ஒரு பக்கத்தில் ஆராய்ச்சியாளன் இருப்பான். மறு பக்கத்தில் ஆராயப்படுகிறவன் இருப்பான். ஆராய்ச்சியாளன் இருக்கும் பக்கத்திலும் ஆராயப் படுகிறவன் இருக்கும் பக்கத்திலும், மேசைமேல் மின்சாரச் சாவிகளும், வெளிச்சம் தரும் மின்சார விளக்குகளும், ஒலி எழுப்பும் கருவிகளும் இருக்கும். ஆராய்ச்சியாளன் தன் பக்கத்தில் உள்ள மின்சாரச் சாவியை அழுத்துவதற்கு ஏற்றவிதமாக ஆராயப் படுகிறவன் இருக்கும் பக்கத்தில் வெளிச்சமாவது ஒலியாவது எழும். ஆராய்ச்சியாளன் எழுப்பும் அருட்டிக்கு ஏற்றவிதமாக ஆராயப்படுகிறவன் தன் ஆட்சியில் இருக்கும் மின்சாரச் சாவியைத் தட்டி, ஆராய்ச்சியாளனிருக்கும் பக்கத்தில் உள்ள விளக்கு எரியவும் ஒலிக்கருவியில் ஒலி எழவும் செய்வான். இதனால், பிரதிச்செயல்கள் தோன்றும். ஆயத்தமாக இருக்க ஆராய்ச்சியாளன் மின்சாரக் கருவியால் முதலில் எச்சரிப்பான். உடனே, ஆராயப்படுகிறவன் தன் விரலை மின்சாரச்சாவிமேல் வைத்துக்கொண்டு ஆயத்தமாக இருப்பான்; தன் பக்கத்தில் வெளிச்சம் தெரிந்தால் உடனே தன் மின்சாரச் சாவியை அழுத்தி மறுபக்கத்தில் வெளிச்சம் தோற்றுவிப்பான்; தன் பக்கத்தில் ஒலி எழுந்தால் உடனே மின்சாரச் சாவியை அழுத்தி மறுபக்கத்தில் ஒலி எழும்படிச் செய்வான். ஆராயப்படுகிறவன் தனக்குக் கிடைக்கும் அருட்டிக்கு ஏற்றவிதமாகப் பிரதிச்செயல் எழுப்பு

வதற்கு எடுத்துக்கொள்ளும் ஆயத்தத் திட்டத்தின் நேரத்தை மின்சாரக் கருவி இம்மியும் பிசகாமல் குறித்துவிடும். ஆராயப்படுகிறவனுக்குப் போதுமான பயிற்சி ஏற்பட்டபிறகு மின்சாரக் காலமானி குறித்திருக்கும் கால நிர்ணயத்தைப் பார்த்தால், ஓர் அருட்டி கிடைத்ததும் அதற்கு ஏற்றவிதமாகப் பிரதிச் செயல் ஒன்று நிகழ்வதற்கு அரைக்கால் விநாடிகை நேரம் தேவை என்பது தெரியவரும். இதுதான் பிரதிச் செயல் நிகழ்ச்சிக்குத் தேவையான காலம்.

மேலே விவரித்த பரிசோதனை ஒற்றைப் பிரதிச் செயல் எனப்படும். இதைத் தவிர, தெரிந்து எடுத்துச் செய்யப்படும் பிரதிச் செயல்கள் என்றும், தொடர்புற்ற பிரதிச் செயல்கள் என்றும் இருவகைப் பிரதிச் செயல்கள் உள.

தெரிந்து செய்யும் பிரதிச்செயல்-பரீக்ஷையில், குறிப்பிட்ட இரண்டு அருட்டிகளுக்கு வித்தியாசமான பிரதிச் செயல்களை விளைக்கவேண்டும் என்று முன்னதாவே பரிக்ஷைக்கர்த்தா ஏற்பாடு செய்துகொள்வான்; அந்த ஏற்பாட்டின்படி ஆராயப்படுகிறவன் பிரதிச்செயல்களை விளைக்கவேண்டும். ஆராயப்படுகிறவனுடைய பக்கத்தில் இருக்கிற விளக்கில் இரண்டு வர்ணமான வெளிச்சங்கள் மாறிமாறித் தோன்றும். உதாரணமாக, சிவப்பு வெளிச்சமும் பச்சை வெளிச்சமும் என்று வைத்துக்கொள்வோம். அப்படியே ஒலிக் கருவியிலும் உரத்த ஒலி, மெலிந்த ஒலி என இருவகையான ஒலிகள் மாறிமாறித்தோன்றும். விளக்கில் சிவப்பு வெளிச்சம் தோன்றினால், ஆராயப்படுகிறவன் வலது கையை உயர்த்திக் காட்டவேண்டும் என்றும், பச்சை வெளிச்சம் தோன்றினால் இடது கையைத்

தூக்கிக் காட்டவேண்டும் என்றும் கட்டுப்பாடு செய்திருப்பான். இதற்கு ஏற்றபடி, ஆராயப்படு கிறவன் கைகளை உயர்த்திக் காட்டுவான். அப்படியே, ஒலி விஷயத்திலும் ஏற்பாடு செய்திருக்கும். ஆராயப் படுகிறவன் எங்கே தவறுகள் ஏற்பட்டுவிடுமோ என்று தயங்குவதினால், பிரதிச்செயலின் ஆரம்பத் திட்டத்திற்கு, முந்தின பரிசைஷக்கு ஆன நேரத்திலும் அதிக நேரம் தேவை. ஏற்கெனவே இருந்த அரைக் கால் விநாடிகையோடு பத்திலொரு பங்கு விநாடிகை யும் தேவை.

தொடர்புற்ற பிரதிச் செயல்களுக்கு இன்னும் அதிக நேரம் தேவை. விளக்கிலே பல நிறங்கள் தோன்றிய தும், ஆராய்ச்சியாளன், ஓர் எண்ணிற்கு அடுத்த பெரிய எண்ணைக் கூறவும், கொடுக்கிற ஒரு மொழிக்கு எதிர் மொழி சொல்லவும் முன்னரே ஏற்பாடு செய்வான். ஆராய்ச்சியாளன் இவற்றை மாற்றி மாற்றிக் கூறும்பொழுது, ஆராயப்படுகிறவன் பிரதிச் செய லுக்கு எடுத்துக்கொள்ளும் காலம் முன்னிரண்டு வகையான பிரதிச்செயல்களுக்கும் எடுத்துக்கொண்ட நேரத்திற்கும் அதிகமாகிறது என்று மின்சாரக்கால மானி உணர்த்துகிறது. எதற்கும், ஆரம்பத் திட்டம் ஒன்றுபோல இருந்தாலும், பிரதிச் செயல் நிகழ்ச்சிக் காலம் வித்தியாசப்படுகிறது.

பிரதிச்செயலின் காலத்திட்டம், நம்முடைய ஜீவி யத்திலும் பிறருடைய ஜீவியத்திலும், தினந்தோறும், பல இடங்களிலும் பல தருணங்களிலும் பலவாறாக அமைவதைப் பார்க்கலாம். ஹாக்கி விளையாட்டிலும் கால்-பந்து விளையாட்டிலும், விளையாடுகிறவர்கள்

4

பிரதிச்செயலுக்கு எடுத்துக்கொள்ளும் நேரத்தில் ஏற்றத்தாழ்ச்சி இருப்பதை நன்ருய்க் கவனிக்கலாம். சிலம்பம் பழகுகிறவர்களைக் கவனித்தால், பிரதிச் செயல் சிறிதும் காலதாமதமில்லாமல் வருவதைப் பார்க்கலாம். இதில் தற்காப்பு என்னும் நியதியும் கூடவே கலந்திருப்பதனுல் பிரதிச்செயல்கள் கால தாமதமின்றி நிகழ்வதைப் பார்க்கலாம். வாசித்தல், எண்களைக் கூட்டல் முதலிய பல சாதாரணச் செயல் களுக்குத் தொடர்புற்ற பிரதிச்செயல்கள் தேவையாக இருப்பதைக் கவனிக்கலாம். கிறிக்கட் விளையாட் டிலும், குறிபார்த்துச் சுடுதல் முதலியவற்றிலும் ஆயத்தத் திட்டத்தைத் தெளிவாகப் பார்க்கலாம். நிகழப்போகிற சம்பவம் இன்னதென்று தெரிந் திருக்கும்பொழுது, ஒருவன் முன்னதாகவே நிச்சயம் பண்ணிக்கொள்ளாமல் ஆயத்தமாக இருக்கிருன்; அல்லது, சரியான காலத்தில் சரியான பிரதிச்செயலை விளைக்க ஆயத்தமாக இருக்கிருன்.

இதுமட்டும் ஆயத்தத் திட்டத்தைப்பற்றிச் சிந்தித்தோம். இப்பொழுது தொடர்ச்சித் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். இதை நிர்வாகத் திட்டம், அல்லது போக்குத்திட்டம் என்றும் குறிப்பிடலாம். மானஸசாஸ்திரக் கருத்து முழுவதையும் விளக்கக் கூடிய ஒரு பதத்தை இந்தத் திட்டத்திற்குக் கண்டு பிடிப்பது வெகு சிரமமான விஷயம். நாள்தோறும் பேச்சுவழக்கிலே இருக்கும் பல சொற்களை மானஸ சாஸ்திரம் கையாளும்பொழுது, அந்தப் பதங்களுக்கு வரையறுத்த சில கருத்துக்களைப் பொருத்திவைத் திருப்பது வழக்கம். இந்த முறைப்படியே குறிப்பிட்ட

3633

சில கருத்துக்களை உணர்த்துகிறது தொடர்ச்சித்திட்டம் என்ற சொற்றொடரும். ஒரு செயலைத் தொடங்குவதற்கு மட்டுமல்ல, அந்தச் செயலில் இறங்கி அதைத் தொடரும்போது — ஒரு செயல் நிகழும்போது— திட்டம் என்னும் மனநியதியைப் பார்க்கலாம். பாடுகிறவன் பாடும்பொழுது எழுப்பவேண்டிய சுரஸ்தானங்களுக்கும் பிருகாக்களுக்கும் தொனிநயங்களுக்கும், பாட்டின்மூலமாக வெளியிடவேண்டிய மனோபாவனைகளுக்கும் ஏற்றவாறு உடலின் உறுப்புக்களிலும் மனத்திலும் தொடர்ச்சித்திட்டம் நிகழ்வதைக் காணலாம். கௌரி வானொலி நிலையத்தில் பாடியபோது, குறித்திருந்த நேரத்திற்குள் குறித்திருந்த பாடல்களைப் பாடி முடிப்பதற்காக, ராக ஆலாபனைப் போக்கையும் பாட்டில் அமைக்கும் சங்கதிகளையும் பாடும்போதே திட்டம் செய்துகொண்டு போகாமல், ஒரே அடியில் மனம்போனபடி பாடியிருந்தால் நிகழ்ச்சிக்குக் குறித்திருந்த பாட்டுக்களை யெல்லாம் அவள் பாடியிருக்க முடியாது. பந்தய ஓட்டத்தில் ஓடுகிறவன் திரும்பவேண்டிய இடங்களுக்கு ஏற்ற விதமாக உடலை அமைத்துக் கொடுக்கிறான். அப்படியே சைக்கிலில் போகிறவன் ஒரு பக்கமாகத் திரும்பும்பொழுது, தன் உடலைத் திருப்பிக் கொடுக்கிறான். தொடர்ச்சித்திட்டத்தில் ஒருவனுடைய காரியேந்திரியங்களும் கிராஹ்யேந்திரியங்களும் பலவாறாக இயங்குகின்றன. அவற்றிற்கு ஏற்றவிதமாக அருட்டிகளும் பிரதிச்செயல்களும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. வைரமுத்து தகரப்பெட்டியைத் தலையில் சுமந்து செல்லும்பொழுது, அதை அடிக்கடி நடுநிலைப்படுத்துவதும் ஒருவகையான தொடர்ச்சித்

திட்டமேயாம். மரக்கிளையில் பெட்டி தட்டாதபடி ஒரு பக்கமாக வளைந்து கொடுப்பதும் தலைமேல் இருக்கும் சுமை மரத்தில் தட்டாதபடி சமாளிப்பதும் தொடர்ச்சித் திட்டங்களேயாம். மேட்டிலே ஏறும் பொழுதும் பள்ளத்தில் இறங்கும்பொழுதும் தலையில் இருக்கும் பாரத்திற்கு ஏற்றவிதமாகத் தொடர்ச்சித் திட்டங்கள் அமைகின்றன. விசாலம் காணாமல்போன திருகாணியைத் தேடிக்கொண்டிருந்தபொழுது, பல வகையான தொடர்ச்சித்திட்டங்கள் ஒன்றின்பின் ஒன்றாக அமைந்தன. சில தொடர்ச்சித் திட்டங்கள் தெளிவாக வெளிப்பட்டுத் தோன்றும். சில தொடர்ச்சித் திட்டங்கள் ஏற்படுவது வெளிப் படையாகத் தெரியாது. கேட்ட கேள்விக்கு ஒருவன் விடைகூற மனத்திற்குள் சிந்தனை செய்யும்பொழுதும், சில எண்களைக் கூட்டும்பொழுதும் தொடர்ச்சித் திட்டங்கள் அமைகின்றன. இந்தத் திட்டங்களுக்கு வெளிப்படையான அறிகுறிகள் இல்லாவிட்டாலும், கேள்விக்கு விடையும், கூட்டிவந்த தொகையும் தவறும்பொழுது, தொடர்ச்சித் திட்டம் போன போக்கை ஒருவாறு தெரிந்துகொள்ள முடியும். நண்பர் ஒருவர் சில விஷயங்களின்பேரில் பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதுவது வழக்கம். இவர் என்ன எழுதினாலும் தாமாகவே எழுதுவ தில்லை. நேர்த்தியாக எழுதும் ஒருவனை இவ் வேலைக்கு அமர்த்திக்கொள்வார்; தாம் சொல்வதை எல்லாம் எழுத அவனிடம் சொல்லுவார். இவர் வாக் கியங்களைச் சொல்லிக்கொண்டே போகும்பொழுது, சில வாக்கியங்கள் ஸங்கீர்ண வாக்கியங்களாக அமைந்துவிட்டால், வாக்கியத்தை முடிக்கும் தருணத்

தில், எழுதியதைத் திரும்பவும் வாசிக்கும்படி எழுது கிறவனிடம் கேட்பார். வாக்கியத்திற்கு முடிவில் அமைக்கவேண்டிய பாகத்தைத் திட்டம் செய்வதற் காகவே அவர் இப்படிக் கேட்பது வழக்கம். நீண்டு வளர்ந்த வாக்கியத்தை அமைத்தபொழுது கருத்துக்க ளோடு நிர்வாகத்திட்டமும் ஏறப்பட்டுக்கொண்டே இருந்ததினுல், வாக்கியத்தின் ஆரம்ப பாகம் மறந்து போயிற்று. இப்படியே எந்தப் பிரதிச்செயலுக்கும் அடுக்காக வரும் தொடர்ச்சித்திட்டங்கள் உள.

பிரதிச்செயல்தோறும் ஆரம்பத்திட்டம், தொ டர்ச்சித்திட்டம், முடிவுத்திட்டம், இலக்கை ஒட்டிய திட்டம் எனச் சில திட்டங்கள் உண்டு என்பதற்கு என்ன அத்தாட்சி? சில திட்டங்கள் பிரதிச்செயல்க ளின் அங்கநிலையாகவே தோன்றுவன. சில பிரதிச் செயல்கள் நிகழுமுன், நாம் ஆயத்தமாயிருக்கிறோம் என்பதை நமக்குள் அந்தர்த்தரிசனமாகப்* பார்க்கும் பொழுது, நமக்கே தெளிவாகப் புலப்படுகிறது. சில தருணங்களில், ஆரம்பத்திட்டம் புலப்படாவிட்டா லும், சங்கிலிக்கோவைபோலத் தொடராக நிகழ்கின்ற பிரதிச்செயல்களின் மறைவில் அச்செயல்கள் அனைத் திற்கும் தெளிவான உத்தேசம் இருப்பதை உணர் கிறோம். இவ்வாறெல்லாமிருந்தாலும், ஒரு பிரதிச் செயலின் ஆரம்பத்திலிருந்து அதன் முடிவுவரைக்கு முள்ள செயல்போக்கைப் பல திட்டங்களாக வகுத்துத் தெரிந்துகொள்ளவேண்டுமா? வேண்டாம் என்றாலும் இங்ஙனம் திட்டங்களைப் பல நிலைகளிலே வகுத்துக் காட்டுகின்ற முறை, பிரதிச்செயல்க

* அந்தர்த்தரிசனம்—உள்-பார்வை.

ளின் பல தோற்றங்களை வெகு நன்றாக விளக்கிக் காட்டுவதற்காவது பயன்படுமென்று சொல்லக் கூடாதா? விளக்கிக் காட்டுவதற்காக வகுத்துக் காட்டுகிற சம்பாவிதங்கள்* என்றாவது கருதலாம் அல்லவா? எப்படிக் கருதினாலும் 'திட்டங்கள்' என்பவை ஓர் உயிர்நிலையில் நிகழும் பிரதிச்செயல்-போக்கில் ஏற்படுகிற பல தோற்றங்களாகவும், அத் தோற்றங்களின் பெரும்பான்மையும் மூளையிலிருந்து உதிக்கின்றவைகளாகவும் காணப்படுகின்றன. 'ஒரு பிரதிச்செயலுக்கும் மற்றொரு பிரதிச்செயலுக் கும் இடையிலே, திட்டங்கள் தாற்காலிகமாகத் தோன்றி விரைவில் மறைவதையும் புதுப்புதுப் பிரதிச்செயல்கள் தொடர்ந்து வரும்பொழுது, புதுப் புதுத்திட்டங்கள் ஏற்படுவதையும் பார்க்கிறோம். அருட்டிகளுக்குப் பொருத்தமாக எழுகின்ற பிரதிச் செயல்களின் திட்டங்கள் யாவும் குறிப்பிடத்தகுந்த ஒரு செயல் போக்குவரைக்கும் வியக்தநிலை† யிலே அநுகூலமாக இருந்து, இதரச் செயல் - போக்குகளை அவ்வியக்த நிலை§ அடையும்படிச் செய்துவிடுகின்றன. குறித்த ஒரு தருணத்தில் நிகழ்கின்ற பல செயல்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிநிலைச்செயலாக்கும் தன்மை திட்டங்களுக்குண்டு என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.

உதாரணமாக, விசாலம் காணாமல்போன திருகாணியைத் தேடினபொழுது, கண்ணாலே பார்த்தல்,

---

* சம்பாவிதங்கள்—நிகழக்கூடியவை.

† வியக்தநிலை—தெளிவாகத் தோன்றுகிற நிலை.

§ அவ்வியக்தநிலை—தெளிவாகத் தோன்றாத நிலை.

தேடும் பொருளை அபின்னமாக* ஒப்பிட்டு அறிதல் என்ற இவ்விருவகைச் செயல்களே தெரிநிலைச் செயல்களாக அமைகின்றன. அந்த நேரத்தில், பிறருடைய சம்பாஷணை அவள் காதில் விழுந்தாலும் செவிப்புலனின் இயக்கங்கள் அவ்வியக்தமாக இருக்கின்றன. அப்படியே, பாட்டில் ஈடுபட்டிருந்த கௌரிக்குப் பக்கத்தில் நின்றவர்களின் செய்கைகள் வியக்தமாகப் புலப்படவில்லை. வெகு கவனமாக ஒரு விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஒருவனுடைய கட்புலனின் இயக்கங்கள் சூழவுள்ள பொருள்களைப் பார்த்தாலும் அவை அவ்வியக்தமாகின்றன. ஒரு செயலுக்கு ஆயத்தமாக இருப்பது இதரச் செயல்களுக்கு ஆயத்தமின்மையாகவே காணப்படுகிறது.

* அபின்னம்—வேறுபடாதது; சிதைவின்மை.

மனப்போக்கு

கடந்த காலத்தில் என் ஜீவியத்தில் நிகழ்ந்தவைகளையெல்லாம் சிந்தனை பண்ணிக்கொண்டிருந்தேன். என் மனக்குதிரையின் கடிஞாணை அவிழ்த்து விட்டேன். அது தானாகவே, தன் இஷ்டப்படியே என் இறந்தகால வாழ்க்கைச் சம்பவங்களில் திரிந்துகொண்டிருந்தது. அப்பொழுது என் தாய், "நேற்றுக் கடைக்குக் கொண்டுபோன பணத்திற்குச் செலவு விவரம் சொல்லவில்லையே. சொல்லு; எழுதிக்கொள்கிறேன்; அப்பா வந்தால் கணக்குக் கேட்பாரே" என்று என்னிடம் கேட்டாள். அவள் கேட்ட கேள்வியோ பராக்காகப் பதில் சொல்லக் கூடியதாக இல்லை. கொஞ்சம் கடினமான கேள்விதான். தன் இஷ்டப்படி திரிந்துகொண்டிருந்த என் மனக்குதிரைக்குக் கடிஞாண் இட்டு, அதைத் திருப்பிக் கொண்டுவரவேண்டிய நிமித்தகாரணம்* ஏற்பட்டு விட்டது. என் மனக்குதிரையைக் கட்டி இழுத்துக் கொண்டு வருவதற்குள்ளே, என் தாய் கேள்வியைத் திரும்பவும் கேட்டாள். "ஊங்" என்றேன். "ஏன் இப்படிப் பராக்காய் இருக்கிறாய்?" என்று என் தாய் கடிந்து பேசத்தொடங்கினாள்.

இலக்கு ஒன்றுமே இல்லாமல், கட்டவிழ்த்து விட்டவுடனே சுயேச்சையாகத் திரிந்துகொண்டிருந்த என் மனக்குதிரை அதுவரைக்கும் செய்துவந்த வியாபாரத்தை நிறுத்தவேண்டியதாயிற்று. திரும்பவும் என் கடிஞாண்—கட்டுக்கு அடங்கி நடக்கவேண்டிய

---

* நிமித்த காரணம்—குடத்துக்குக் குயவன்போலக் காரியத்தோடு அனுவிருத்தியில்லாத காரணம்.

தாயிற்று. மனத்தின் சில வியாபாரங்கள் கட்டுப்பாடுகளில்லாதவைபோலத் தோன்றுகின்றன. வேறு சில வியாபாரங்களோ கட்டுப்பாடுகளுக்கு அடங்கியவை போலத் தோன்றுகின்றன. சிறு பிராயம் முதல் நம்மைச் சூழ்ந்திருக்கும் பெரியவர்கள் “மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்” என்று ஓயாமல் உபதேசம் பண்ணி வருகிறார்கள். மனத்திற்குச் சுயப்போக்கு அல்லது சுதந்தரப்போக்கு எனவும் ஆட்சிப்போக்கு எனவும் இருவகையான போக்குகள் உள; இதை நாம் ஒப்புக்கொள்கிறோம்.

மானஸ சாஸ்திர ரீதியாக இவ்விருவகைப் போக்குகளையும் ஆராய்ந்து பார்த்தால், அருட்டி இல்லாமல் தானாகவே எழும் சிந்தனையே இல்லை; எதிர்பாராத விதமாக, ஒன்றுமில்லாமையிலிருந்து ஒரு சிந்தனை உதயமாகாது என்னும் உண்மைகள் புலப்படும். ஒன்று மற்றொன்றை நினைப்பூட்டுகிறது. ஒரு சிந்தனைக்கும் மற்றொரு சிந்தனைக்கும் உள்ள தொடர்பை நாம் உணரமுடியும். இதை மானஸ சாஸ்திரிகள் **சிந்தனைகளின் தொடர்புநிலை** என்பார்கள். இந்தச் சொற்றொடர் இரண்டு சிந்தனைகளின் சம்பந்தத்தை உணர்த்துவது.

நளினி கலாசாலை—விடுதிக்குப் போய் இன்னும் இரண்டு தினங்களாகவில்லை. கமலா அவளுடைய அறைக்குள் புகுந்து, “நீ தர்க்க சாஸ்திரப் புத்தகம் வாங்கி விட்டாயா?” என்றாள். நளினி அவளை அதற்குமுன் சந்தித்ததே இல்லை. அறிமுகமில்லாத ஒருத்தி மலர்ந்த முகத்தோடு எதிரில் நிற்பதைக்கண்ட நளினி அவளை ஏற இறங்கப் பார்த்தாள். பின்பு தான், “வாங்கவில்லை” என்று பதில் சொன்னாள்.

அப்பொழுது கமலம், "இனிமேல் எனக்கு இந்தப் புத்தகம் தேவை இல்லை. நீ வைத்துக் கொள்" என்று, தன் புத்தகத்தை நளினியிடம் கொடுத்தாள். அன்று முதல் நளினியும் கமலாவும் ஆப்த நண்பர்களானார்கள். கமலா நளினியின் தோழியாக வெகு நாட்கள் அவளோடு பழக முடியவில்லை. அவள் விவாகமானவள். ஆகையால், தன் கணவனோடு வட இந்தியாவுக்குப் போய்விட்டாள். ஆறு வருஷங்கள் கடந்துவிட்டன. நளினியின் புத்தகத் தட்டில் அந்தத் தர்க்க சாஸ்திரப் புத்தகம் இருந்தது. அவள் அதைப் பார்த்தபொழுதெல்லாம் கமலாவின் ஞாபகம் எழுந்தது. கமலாவின் ஞாபகம் வந்ததும், கலாசாலை-விடுதியில் அவளை முதன் முதலில் சந்தித்த இடத்தின் ஞாபகம் வந்தது. பின்பு, கலாசாலையில் அவளோடு அளவளாவி நட்புறவு கொண்டாடிய நாட்களில் நிகழ்ந்த சம்பவங்கள் ஒன்றின்பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன. கமலாவின் வீட்டுக்கு விடுமுறை நாட்களில் சென்றதும், உல்லாசமாகக் கழித்த சில தினங்களில் நிகழ்ந்த சம்பவங்களும் இதர ஞாபகங்களின் நடுவில் நினைவிற்கு வந்தன. நளினி, கமலாவின் தமயனை அங்கே தான் முதன் முதலில் சந்தித்தாள். அவனுடைய வசீகரமான தோற்றம், சாதுரியமான சம்பாஷணைத்திறம், நாகரிகமான நடை உடை பாவனைகளெல்லாம் அவளுடைய நினைவுக்கு வந்தன. அவனோடு நெருங்கிப் பழகிய நாட்களைச் சிந்தித்தாள். அவன் கற்பகத்தைக் காதலித்தான் என்று தெரிந்ததும் நளினியின் நெஞ்சு பட்ட வேதனை இன்றைக்கும் சுறுக்கென்றது. அவன் கற்பகத்தைவிட்டு வேறொரு பெண்ணைக் கலியாணம்

பண்ணிக் கொண்டதை நினைத்தாள். முடிவிலே, ஆண்களுடைய நிலையற்ற குணங்களும், காதலின் நிலையாமையும் நளினியின் சிந்தனைக்குரிய விஷயங்க ளாயின. சிந்தனையின் முடிவிலே ஒரு மனக் கசப்புத் தட்டியது; உலகமே கசப்பாகத் தோன்றியது. நளினியின் சிந்தனை எங்கே ஆரம்பித்து எப்படி முடிந்ததென்று பாருங்கள். கசப்பான சிந்தனைகளி லிருந்து தப்பி ஓடுவதற்காக நளினி இன்னொரு விஷயத்திற்குள் பாய்ந்தாள். நளினி எங்கே ஆரம்பித் தாள்? அவளுடைய புத்தகத் தட்டில் இருந்த தர்க்க சாஸ்திரப் புத்தகத்தில்தானே? புத்தகம் ஒரு பொருள்; அப்பொருளிலிருந்து, ஓர் ஆளைப்பற்றிய ஞாபகம் எழுந்தது. அந்த ஆளிலிருந்து, ஆளைச் சந்தித்த இடமும், இடத்தில் நிகழ்ந்த சம்பவங்களு மாக இப்படியே சிந்தனைகள் ஒன்றின்பின் ஒன்ருகத் தொடர்புநிலை பெற்று, ஆரம்பித்த முதல் அருட்டியி லிருந்து நளினியை எங்கேயோ வெகு தூரத்திற் கப்பால், எல்லாம் கசப்பாகத் தோன்றுகிற ஓர் உலகத்திற்குக் கொண்டுபோய்விட்டன.

நண்பர்கள் கூடிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களுடைய சம்பாஷணையிலே கலவாமல் ஒரு மூலையில் அமைதியாக இருந்து, அவர்களுடைய பேச்சைக் கவனித்துக் கேளுங்கள். சிந்தனு விஷ யங்கள் எப்படி ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவி ஓடுகின்றன என்று பாருங்கள்; சிந்திக்கும் சிந்தனைகள் புறப்பட்ட இடத்திலிருந்து நம்மை வெகு தூரத்திற்கப்பால் ஓர் இடத்தில் கொண்டு போய் விடுகிறபோது, நாம் அந்த இடத்திலிருந்து பின்நோக்காகத் திரும்பி, சிந்தனைத் தொடர்பு

நிலைகளை ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டே தொடங்கின இடத்திற்கு வருவது, மிகவும் சிறந்த மனப் பயிற்சியாக அமையும். காலாடியாகத் திரியும் மனத்தின் சலனமெல்லாம் **சுதந்திரத் தொடர்புநிலை** எனப்படும். கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களிலே வரைமுறை இல்லாமல் செல்லுகிற தொடர்புகள் என்று நமக்குத் தெளிவாகப்புலப்படும்.

சுதந்திரத் தொடர்பு நிலைக்கு உதாரணமாக ஒரு பரிசைக்ஷயைக் குறிப்பிடலாம். பொழுது போகாத நேரத்தில், நாலு ஐந்து பேராக ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு, சிந்தனைச் சுதந்திரத் தொடர்பைப் பரிசைக்ஷ பண்ணிப் பாருங்கள். முதலாவது, சிந்தனைக்கு அருட்டியாக ஒரு வார்த்தையை ஒருவன் கூற வேண்டும். உதாரணமாக, **உரல்.** உடனே மற்றவர்கள், நெல் குற்றுதல், கல்-உரல், மாவுலக்கை என்றெல்லாம் தொடர்புநிலைகளைக் கூறவேண்டும். இந்தப் பொழுது போக்கில் கலந்து கொள்ளுகிறவர்கள் அவரவருக்கு இஷ்டமானபடி யெல்லாம் சொல்லும்படி விட்டு விடுங்கள். அருட்டியாகக் கொடுத்த வார்த்தை உரல். இதிலிருந்து, கல், மலை, உளி, கல்-தச்சன், என்றும், உரல், திரிகல், அம்மி, ஆட்டுக்கல், குழவி என்றும் சிந்தனைத் தொடர்புநிலைகள் போகிற போக்கைக் கவனிக்கலாம். சிந்தனைப் போக்கு எந்தப் பக்கமாக வாயினும் பாய்ந்து செல்லச் சுதந்திரம் பெற்றிருப்பதையும் கவனிக்கலாம்.

அடக்கி ஆளப்படும் சிந்தனைத் தொடர்பு நிலையை விளக்கும் பரிசைக்ஷக்கும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். முந்திய பரிசைக்ஷக்கு ஆயத்தம் பண்ணின விதமாகவே இந்தப் பரிசைக்ஷக்கும் ஆயத்தம் பண்ண

வேண்டும். பரிக்ஷையில் கலந்து கொள்பவர்கள், அருட்டியாகக் கொடுக்கப்படும் வார்த்தைச்குக் குறித்த வரைமுறையிலே சொற்களைக் கூறும்படி ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். உதாரணமாக, 'நன்மை' என்ற பதம் அருட்டியாக இருந்தால், பரிக்ஷையில் கலந்துகொள்கிறவர்களில் ஒருவன் '**தீமை**' என்று எதிர்மொழி கூறவேண்டும். '**பொய்**,' '**நெட்டை**,' '**கருமை**,' '**பெருமை**,' '**தூக்கம்**' என்றிப்படியே பல சொற்களைக் கொடுத்து, விடை தருகிறவர்கள் எடுத்துக் கொள்ளும் காலத்தையும், எத்தனை பதங்களுக்குச் சரியான விடை தருகிறார்கள் என்பதையும் உடனுக்குடனே குறித்துக் கொள்ளுங்கள். இந்தப் பரிக்ஷையை இன்னொரு விதமாகவும் நடத்தலாம். '**மரம்**' என்ற அருட்டியைக்கொடுத்து, அந்தப் பொருளின் உறுப்புக்களை வரிசைக்கிரமமாக எழுதவேண்டுமென்று கூறுங்கள்; வேரிலிருந்தாவது. கனியிலிருந்தாவது தொடங்கவேண்டுமென்று சொல்லுங்கள். எத்தனை பேர் குறைந்த கால அளவிற்குள் எழுதி முடிக்கிறார்கள் என்று பாருங்கள். வேறொரு பரிக்ஷை: நாலு கால் மிருகங்களில் '**எலி**'யிலிருந்து தொடங்கிப் படிப்படியாகப் பெரிய மிருகங்களின் பெயர்களைச் சொல்லும்படிக் கேளுங்கள். இப்படியே, அடக்கி ஆளப்படும் சிந்தனைத் தொடர்புநிலையை விளக்குகிற பல பரிக்ஷைத் திட்டங்களை வகுத்துக் கொள்ளலாம். புத்தித்துவம்* அதிகமாக உள்ளவர்கள்

---

*புத்தித்துவம்—புத்தியின் இயல்பான அமைப்பும் தன்மையும். நவீன மானஸ சாஸ்திரத்தில் வழங்கிவரும் Intelligence என்னும் ஆங்கில மொழிக்கு மிகவும் அகன்ற பொருள் - நுணுக்கங்கள் உள. ஆகையால், புதிய சொல் ஒன்றைச் சிருஷ்டிக்கவேண்டியதாயிற்று.

இந்தப் பரிக்ஷையில் வெகு விரைவாக விடை அளிப்ப தையும், குறைவான புத்தித்துவம் உள்ளவர்கள் அதிகப் பிழைகள் போடுவதோடு, அதிகக் காலமும் எடுத்துக் கொள்வதையும் கவனிக்கலாம். இன்னபடி செய்ய வேண்டும் என்று நாம் தெளிவாக்கியவுடனே, பரிக்ஷைக்கு ஆயத்தப்படுத்துகிற செயல்-திட்டம் பரிக்ஷிக்கப்படுகிறவர்களைப் பிற பிரதிச் செயல் களுக்கு அவ்வியக்தமாக்கி விடுவதையும் நாம் கவனிக்கலாம்.

சுதந்தரத் தொடர்பு-நிலைப் பரிக்ஷையாக இருந் தால், 'நன்மை' என்ற பதத்தைக் கொடுத்தவுடனே, பரிக்ஷையில் கலந்துகொண்டிருப்பவர்களுடைய சிந்தனைப்போக்கு 'தன்மை', 'உண்மை,' 'நேர்மை' என்றிப்படியே காடுமேடெல்லாம் திரியவாரம்பித்து விடும்; 'மரம்' என்ற பதத்தை அருட்டியாகக் கொடுத்தால், 'செடி' 'கொடி' 'காடு' 'புதர்' என்றுவது, 'புளியமரம்' 'மாமரம்' என்றுவது வரை முறையில்லாமல் சிந்தனைப் போக்கு ஓடத் தொடங்கி விடும்.

அடக்கி ஆளப்படும் தொடர்பு நிலைச் சிந்தனைப் போக்கிற்குத்தான், மனனம்* செய்கிற சகல விஷயங் களிலும் பிரதமஸ்தானம் உண்டு. சுலபமான இரண்டு எண்களைத்—உதாரணமாக, '8, 6' என்ற எண்களை - தொடராகச் சொன்னால், உடனே கேட்கிறவர்களு டைய உள்ளத்தில், கடந்த காலத்து அனுபவங்களை ஆதாரமாகக்கொண்ட பலவகைப் பிரதிச் செயல்கள்

*மனனம் - சிந்தித்தல்.

எழ வழி உண்டு. 8—6 என்பது, 86 என்றும், 14 என்றும், 2 என்றும், 48 என்றும் பலவிதமாகப் பிரதிச் செயலை எழுப்பக்கூடும். அப்படி எட்டு ஆறு என்று சொல்லாமல், எட்டும் ஆறும் என்று சொல்வதாயிருந்தால், 14 என்ற பிரதிச் செயல்தான் எழும். எட்டிலிருந்து ஆறு என்றால், உடனே 2 என்ற பிரதிச்செயல்தான் எழும். 'எண்ணாறு' என்றால் உடனே 48 என்ற பிரதிச் செயல்தான் எழும். எட்டுக்கு ஆறு என்றால் $1\frac{1}{3}$ என்றுதான் பிரதிச் செயல் எழும். இப்படித் தெளிவுறக் கூறும் பொழுது, கூட்டல் கணக்காக இருந்தால் கழித்தலும், பெருக்கலும், வகுத்தலுமாகிய பிரதிச் செயல்கள் அவ்வியக்தநிலை அடைந்து மறைந்து விடுகின்றன. அப்படியே இதரக் கணக்குகளிலும் நிகழ்வதைக் காணலாம். 'எண்ணாறு' என்று கூறும் பொழுது, பிரதிச்செயல் பெருக்கல் வாய்பாட்டைத் தேடி ஓடுகிறது. 'எட்டும் ஆறும்' என்றவுடனே பிரதிச் செயல் கூட்டல் வாய்ப்பாட்டைத் தேடி ஓடுகிறது. கூட்டலும் பெருக்கலும் வெகு விரைவாக நிகழவேண்டுமானால் ஆயத்தத் திட்டம் தேர்ச்சி பெற்ற நிலை அடைந்திருக்க வேண்டும். தேர்ச்சி பெற்ற ஆயத்தத் திட்டத்தை அடையும் பொருட்டே வாய்பாடுகளை மனனம் பண்ணப் பல முறைகளைக் கையாளுகிறார்கள். கணித சாஸ்திரத்தில், குறிப்பிட்ட சில செயல்களுக்கு ஏற்ற விதமாக, அடக்கி ஆளப்படும் தொடர்புநிலைச் சிந்தனைப் போக்கிற்கு இசைந்த பிரதிச் செயல்கள் பெரும்பாலும் மனன வேலையாக இருக்கும் என்பது முன்பு விளக்கிய திருஷ்டாந்தங்களால் தெளிவாகிறதல்லவா?

கணித சாஸ்திரத்திற்குப் பதிலாக, வாசிப்புப் பாடம் என்று வைத்துக் கொள்வோம். 'ராமன்.' இது ஒரு பதம். ஓர் ஆளின் பெயர்; இவை வெளிப் படையாகத்தெரிகின்றன. என்றாலும், இந்தப்பெயர்ச் சொல் யாரைக் குறிக்கிறது என்பதை, மேலும் தொடர்ந்து வரும் சொற்களைக் கொண்டுதான் நிதா னிக்க முடியும். "ராமன் கடைக்குப் போய்" என்று வாசிக்கும்பொழுது, அந்தப் பெயர்ச்சொல் குறிப்பிடு கிற ஆளும், "ராமன் சீதையோடு காட்டுக்கு" என்று வாசிக்கும் பொழுது குறிப்பிடுகிற ஆளும் எவ்வளவு வித்தியாசமான பொருளை உணர்த்துகின்றன? முதல் ராமன் எத்தனையோ ராமன்களில் ஒரு ராமனையும், இரண்டாவது ராமன், தசரத சக்கரவர்த்தியின் மைந்தனும் ராமாயணத்தின் பிரதம கதாநாயகனு மான ஸ்ரீ ராமனையும் குறிப்பிடுகின்றன என்பது, இரு வாக்கியங்களிலும் பொருள்பட நிற்கின்ற இதர மொழிகளால் தெளிவாகிறதல்லவா? 'சிந்தின' என்ற சொல்லை மட்டும் கேட்டவுடனே நம்முடைய உள்ளத் தில் பிரதிச் செயலாகத் தொனிக்கும் பொருள்கள் பல. ஆனால், இந்தச் சொல்லை, "சிந்தின நெல்லைப் பெருக்கி எடுத்தாள்" என்னும் வாக்கியத்தில் தொனிக்கின்ற பொருள், "சிந்தின மூக்கும் அழுத கண்ணுமாக வந்து நின்றாள்" என்று வாசிக்கும் பொழுது தொனிக்கின்றபொருளுக்கு முற்றிலும் வித் தியாசமாக இருக்கின்றதல்லவா? "சிந்தின" என்ற சொல் இரண்டு வாக்கியங்களிலும் இறந்தகாலப் பெயரெச்சமாக உருக்கொண்டிருந்தாலும் சந்தர்ப்பத் திற்கு ஏற்ற விதமாகப் பொருளில் வேற்றுமைப்படு கிறதல்லவா? ஆகையால், வாசிப்புப் பாடத்திற் தச்

சந்தர்ப்பத் தொடர்பு நிலைத் திட்டமும், கணிதப் பாடத்திற்குப் பிரச்னைத் தொடர்பு நிலைத் திட்டமும் அமைகின்றன என்பது வெகு தெளிவாகப் புலப்படுகிறது. வாக்கியங்களிலுள்ள சொற்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி பொருள் கொள்ளத் தகுந்த பிரதிச்-செயல்-திட்டம் பெறுவதைப் பார்க்கிறோம்.

ஸ்ரீங்கேரியிலிருக்கும் சங்கராசார்ய சுவாமிகள் ஸமஸ்கிருத கலாசாலையில் விஜயம் செய்திருப்பதாக வைத்துக்கொள்வோம். ஜகத்குருவைத் தரிசனம் பண்ண வருகிறவர்கள் யாவரும் சிந்தனைப்போக்கிலும் செயல்போக்கிலும் தங்களை ஆயத்தம் பண்ணிக் கொண்டு வருவதை வெகு தெளிவாகப் பார்க்கலாம். பரிகாசப் பேச்சுக்களும் தமாஷான சம்பாஷணைகளும் அடங்கி விடுகின்றன. அங்கவஸ்திரங்களை இடுப்பிலேச் சுற்றிக் கட்டிக்கொண்டு, நிமிர்ந்து நிற்கிற தலை வணங்க, வெகு அடக்க ஒடுக்கமாகப் பலர் வருகிறார்கள். தரிசனத்திற்கு வருகிறவர்களுடைய வணக்கமும், பேச்சும், நிற்கும், நிலையும் எல்லாம் நிகழ்ச்சி-நிலைக்கு ஏற்றவாறு திட்டம் பெற்றிருப்பதைப் பார்க்கலாம். தரிசனத்திற்கு வரும் சிஷ்யர்களின் சிந்தனைப் போக்கு, வெளிப்படையாகத் தோன்றுகிற சரீரத் திட்டத்திற்கு ஏற்றவாறு அமைந்திருப்பதைப் பார்க்கலாம். கலியாணத்திற்குத் தாம்பூலம் வாங்கப் போகிறவர்களும் நிகழ்ச்சி - நிலைக்கு ஏற்றவாறு சிந்தனைச் செயல்-திட்டங்களோடு போகிறார்கள். மரண வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கப் போகிறவர்களும், அந்த நிகழ்ச்சி-நிலைக்கு ஏற்றவிதமாகச் சிந்தனைச் செயல்-திட்டம் பெற்று அவ் வீட்டிற்குள்

பிரவேசிக்கிறார்கள். கோவிலுக்குச் சுவாமி தரிசனம் பண்ணப் போகிறபொழுதும் நிகழ்ச்சி-நிலைக்கு ஏற்ற வாறே சிந்தனைச் செயல்-திட்டங்கள் அமைகின்றன.

தினந்தோறும் வாழ்க்கையில் பல பிரச்னைகள் எழுகின்றன. எழுகின்ற பிரச்னைகளுக்கு விடை காண் பதற்காகச் செய்கின்ற முயற்சிகளுக்கு உகந்தபடி திட்டங்களும் அமைகின்றன. பழக்கமான தொழில் களாக இருந்தால், அந்த அந்தத் தொழில்களுக்கு ஏற்றவிதமாக, வேளைதோறும் பிரதிச் செயல்களை எழுப்பக்கூடிய முறையில், முன்னதாகவே திட்டத் தொடர்புகளும் அமைந்துவிடும். ஆனால், கடினமான பிரச்னைகளாக இருக்குமாயின், பிரதிச் செயல்களுக்கு ஏற்றபடி முன்னதாகவே திட்டங்கள் ஏற்பட வழி யில்லை. கடினமான பிரச்னைகள் எழுகின்ற காலத்தில், முன் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்ட திட்டங் கள் இல்லாவிட்டால், நம்மாலியன்றவாறு எவ்வளவு நேர்த்தியான திட்டங்களை வகுத்துக்கொண்டாலும், அந்தப் பிரச்னைகளுக்குப் பொருத்தமான பிரதிச் செயல்களை உடனேதானே நாம் எழுப்ப முடியாது. பிரதிச் செயலைத் தேடவேண்டியதாக நேரிடும். என்றாலும், பிரச்னைக்கு ஏற்ற பிரதிச் செயலைத் தேடுவதற்கும் ஏதோ ஒருவகைத் திட்டம் வழிகாட்டி யாக இருக்கும்.

நிகழ்ச்சி-நிலைக்கு ஏற்றபடி அமையும் சிந்தனைச் செயல்-திட்டத்தைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட் டிருக்கிறோம். இதோடு சம்பந்தமுடைய மற்றொரு திட்டமும் உண்டு. அதையும் சிந்தித்து ஆராய்வது மிகவும் அவசியம். இலங்கையில் ஒரு ஐவுளி

வியாபாரி சங்கர அய்யர்; இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்குவதற்கு முன் ஜவுளி வியாபாரத்தில் பெருவாரியான வருமானம் அடைந்தவர்; யுத்தம் வந்ததும் துணிகளின் ஏற்றுமதி விஷயமாகப் பல சட்டங்களை இந்திய சர்க்கார் பிறப்பித்து விட்டனர். முன்போலச் சரக்குகளை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அவர் கொண்டுபோக முடியவில்லை. ஆகையால், தமக்குப் போதுமான சரக்குகளை ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்காரிடம் இருந்து விசேஷ அனுமதி பெருவிட்டால் வியாபாரம் பாழாகி விடும் என்று அவருக்குத் தோன்றியது. உடனே டில்லிக்குப் புறப்பட்டார். அவருக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. அவருக்குத் தமிழ்தான் தெரியும். அவர் தம்முடைய வாழ்நாளில் சென்னை நகர் வரைக்குந்தான் பிரயாணம் செய்திருந்தார். அவருக்கு டில்லி மாநகரம் முற்றிலும் புதியது. டில்லி நகரத்திற்குச் சென்றதும், அந்நகரத்தின் அமைப்பே புது முறையாகத் தோன்றிற்று. பாஷையும் புதியது. ஜனங்களின் நடை உடை பாவனைகளும் புதியவை; ஸ்டேஷனிலிருந்து அவருக்காக ஏற்பாடு செய்திருந்த விடுதிக்குச் சென்றபொழுது, அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டே போனார். விடுதிக்குப் போனதும் ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு, அந்நகரத்தை அறிமுகமாக்கிக் கொள்ளும்பொருட்டும் அதன் தெரு அமைப்புக்களைத் தெரிந்து கொள்ளும்பொருட்டும், ஏதோ காரணத்தை முன்னிட்டு டில்லி நகரில் சுற்றித் திரிந்து விடுதிக்குத் திரும்பி வந்தார். அவருடைய அலுவலுக்கு உதவக்கூடிய இரண்டொருவரைத் தங்கியிருந்த விடுதியில் சந்தித்து அவர்களைத் துணை

வர்களாகக் கொண்டார். அன்றிரவு தங்கியிருந்த விடுதியில் அவர் படுத்துத்தூங்கினார். மறுநாள் காலையில் எழுந்ததும், வந்திருந்த இடத்தைப்பற்றிய ஞாபகம் அவருக்கு உடனே எழவில்லை. என்றாலும், வெகு விரைவில் நிகழ்ச்சி-நிலைத்-திட்டம் அவர் இருக்கும் இடத்தை நினைப்பூட்டியது. அன்றைக்கு அவருக்கு டில்லி நகரத்தைப்பற்றி இருந்த அறிவு முந்தின நாள் இருந்த வெறும் குழப்பமான அறிவன்று. முந்தின நாள் சுற்றித் திரிந்து பார்த்தபோது ஏற்பட்ட அறிவு இன்றைக்கு அந்தப் பட்டணத்தைப்பற்றி வரை முறையாகச் சேர்த்துக் கூட்டிய சேர்மானமாக இருந்தது. முந்தின நாள் சுற்றித் திரிந்தபோது கிடைத்த அறிவின் அருட்டிகள்தான் இதற்குக் காரணம்.

இரண்டாவது நாளிலும், வந்த அலுவலை அவர் அவ்வளவாகக் கவனிக்க முடியவில்லை. அன்றைக்கும் ஊர் சுற்றிப் பார்ப்பதிலேயே பொழுதைக் கழித்தார். மூன்றாவது நாளிலே, அவர் கருதிவந்த அலுவலைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்; பார்க்கவேண்டிய அதிகாரிகளைப் பார்த்தார்; போகவேண்டிய ஆபீஸ்களுக்குப் போனார். முதல் இரண்டு நாட்களிலும் நகரத்தையும், நகரத்தின் தெரு அமைப்புக்களையும் அறிந்து கொள்வதை நாடியிருந்த மனம், இப்பொழுது அலுவல் சம்பந்தப்பட்ட வரையில் போகவேண்டிய தெருக்களையும் வீடுகளையும் குறிவைத்து இடம் தெரிந்து கொள்வதிலும், அலுவலைக் காரியசித்தி பெறச் செய்வதற்கான வழி வகைகளைத் தேடுவதிலுமே ஊன்றி நின்றது.

இப்பொழுது மனம், இலக்கை ஒட்டிய திட்டத்திற்கு ஏற்றவிதமாக ஓடலாயிற்று. அவருடைய செய்கைப் போக்கும் இலக்கை ஒட்டிய திட்டத்திற்கு ஏற்ற விதமாக இருந்தது. அவருடைய செயல் போக்கு முழுவதும் இலக்கை ஒட்டிய திட்டத்தின் ஆட்சிக்கு அடங்கியிருந்தது. அலுவல் சம்பந்தமாகப் பல காரியங்கள் வெகு பரபரப்போடு நடைபெற்றன. அவருடைய இலக்கோடு நெருங்கிய நிலைமைத்-திட்டம், நிகழ்ச்சி-நிலையாக இருந்த டில்லி நகரைத்தைப்பற்றிய அறிவோடு சம்பந்தப்பட்டிருந்தது. போகவேண்டிய இடங்களையும், இன்ன ஆப்பீசுக்கு இன்ன இடத்தில் வண்டி அமர்த்தவேண்டும் என்பதையும், இப்படி இப்படிப் போகவேண்டும் என்பதையும், இன்னின்ன மனிதர்களை வழியில் பார்க்கவேண்டும் என்பதையும் நிகழ்ச்சி - நிலைத் - திட்டத்தோடு சம்பந்தப்படுத்தி விட்டார். இப்படியாக, இலக்கை நெருங்கிய நிலைமைத் திட்டம் நிகழ்ச்சி - நிலைத் - திட்டத்தோடு கலந்து இயங்கலாயிற்று. இதை இன்னும் தெளிவாகச் சொன்னால், சங்கர ஐயர் தமக்கு ஏறக்குறையத் தெரிந்திருந்த நிகழ்ச்சி-நிலைக்குள் இருந்தபடியே காரியசித்தி அடைவதற்குப் பொருத்தமான பிரயத்தனங்களைச் செய்தார் என்றுதான் கூறவேண்டும்.

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் நாம் வகுத்துக் கொண்ட வாய்பாட்டையும் இரண்டாவதாக வகுத்துக்கொண்ட வாய்பாட்டையும் கூட்டிச் சேர்த்துப் புது வாய்பாடு ஒன்றை வகுத்து, இந்த அத்தியாயம் முழுவதிலும் சொன்ன விஷயங்களை யெல்லாம் குறிப்பிடக்கூடிய நிலைக்கு வந்துவிட்

டோம். ஓர் ஆளுக்கும் சூழ்நிலைக்கும் பரஸ்பரமாக ஏற்படுகிற கொடுக்கல் வாங்கல்களின் சம்பந்தத் தொடர்புகளை உ—ஆ—உ என்னும் வாய்பாட்டாலும், ஓர் ஆளுடைய அருட்டிக்கு ஏற்றவிதமாக ஏற்படுகிற பேசி நரம்புச் சம்பந்தமான பிரதிச் செயல்களின் பேரில் நிகழ்கின்ற செயல்களையெல்லாம் அ—ஆ—பி என்னும் வாய்பாட்டாலும் குறிப்பிட்டோமல்லவா? அவற்றைத் திரும்பவும் ஞாபகப் படுத்திக் கொள்வோம். அருட்டிகள் சூழ்நிலையிலிருந்தே பெரும்பாலும் ஏற்படுகின்றன; பேசி நரம்புகளின் பிரதிச் செயல்கள் சூழ்நிலையைத் தாக்குகின்றன; அப்பொழுது ஓர் ஆள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதனோடு சம்பந்தப்பட்டு அதைச் சமாளிப்பதற்கு ஏற்றவிதமாகத் திட்டம் பெறுகிறன் என்பதையெல்லாம் குறிப்பிட வேண்டுமானல் முந்தின இரண்டு வாய்பாடுகளோடு திட்டம் என்பதையும் கூட்டிச் சேர்த்து,

உலகம்—அருட்டி—ஆள் திட்டம்—பிரதிச்செயல்—உலகம்

உ—அ—ஆ. தி.—பி—உ

என்னும் வாய்பாடாக வகுத்துக்கொள்ள வேண்டும். இந்த வாய்பாட்டில், '**ஆ. தி.**' என்பது சூழ்நிலைக்கு ஏற்றபடி ஓர் ஆள் திட்டம் பெற்று, நிலைமைக்கும் முடிவுக்கும் ஏற்றவிதமாகச் செய்துகொண்டேயிருக்கும் திட்டங்களைக் குறிப்பிடுகிறது.

குறித்த ஒரு நிலைமையில் ஓர் ஆள் ஒரு காரியத்தைச் செய்வதற்காகத் திட்டம்பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது ஓர் அருட்டி ஏற்பட்டால், அதற்குரிய

பிரதிச் செயல்கள், நிலைமை—முடிவுத்—திட்டங்களுக்கு ஏற்றபடி, அருட்டிகளுக்கும் பிரதிச் செயல்களுக்கும் குறிப்பிடத்தகுந்த ஓர் உத்தேசம்—ஓர் அர்த்தம்—எற்பட்டுவிடுகிறது. எழுகின்ற ஓர் அருட்டி, ஓர் ஆளுக்கு வாய்த்திருக்கும் நிலைமை இப்படிப் பட்டது என்று உணர்த்துகின்றது; திட்டமோ, பிரதிச்செயல்களையெல்லாம் உத்தேசித்திருக்கிறவிளைவை அடையும் பொருட்டுத் திருப்பி விடுகிறது. உதாரணமாக, சில பெண்கள் கோலாட்டம் அடித்து விளையாடுகிருர்கள் என்று வைத்துக் கொள்வோம். கோலாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் பாட்டுக்கும் தாளத்திற்கும் ஆட்டத்திற்கும் அசைவுக்கும் சலனத்திற்கும் ஏற்ற விதமாகப் பக்கத்திற்குப் பக்கம் திரும்பியும், நெருங்கி வரும் கோலாட்டக் கொம்பினுல் தட்டியும் விளையாடுகிருர்கள். பக்கத்திற்குப் பக்கமாக நெருங்கி வருகிற கோல்களைப் புடைப்பதோடு, தமது கையில் இருக்கும் கோல்களை இடைக்காலத்தில் ஒருமுறை தட்டுவதும் அவசியம். இவை விளையாட்டிற்கு அமைந்த விதிகள். ஒருத்தி தன் கைக்கோல்களை ஒரு முறை தட்டினவுடனே வலது பக்கமாகத் திரும்பி, எதிர்த்து வரும் கோல்களைத் தட்டுவதற்கு ஆயத்தமாகத் திட்டம் பண்ணிக் கொள்கிருள். இப்படிப் பண்ணிக் கொள்கிற ஆயத்தத் திட்டம் சரியானபடி அமையாவிட்டால், எதிரியின் கோல்களில் அடிபடாமல் மற்றவளுடைய கையிலாவது முகத்திலாவது அடி விழலாம். திட்டம் குறைந்து விட்டால், எதிரியின் கோலாட்டக்கொம்புகள் தன்னைக்கடந்து போகலாம். திட்டமே இல்லாமல் இருந்துவிட்டால், விளையாட்டே குழம்பிப் போகலாம். ஆகையால் நிகழ்ச்சி-நிலைக்கும்

அந்த நிகழ்ச்சி-நிலையில் நிறைவேற்ற வேண்டிய விளைவுக்கும் பொருத்தமான திட்டம் ஒன்று அமைவதைப் பொறுத்திருக்கிறது காரியசித்திக்கு ஏற்ற செயல்கள் யாவும். ஒரு ஆளுடைய சகல காரியங்களும் செயல்களும், ஐம்பொறிகளின் வழியாக வருகிற அருட்டிகளுக்கு ஏற்றவிதமாகப் பேசிகளினின்று பிறக்கின்ற பிரதிச்செயல்களைப் பொறுத்திருக்கின்றன; என்ருலும், அதே சமயத்தில், காரிய சித்தியாகும்படி, ஒருவன் செய்கிற செயல்கள் நிலைமைத்திட்டம், இலக்குத் திட்டங்களின் காரணத்தால் சூழ்நிலையைத் தாக்குகின்றன.

நிலைமைத் திட்டத்தையும் இலக்குத் திட்டத்தையும் ஆதியோடு அந்தமாகச் சிந்தித்துப் பார்த்தால், இவை தாமே ஆயத்தத் திட்டமாகவும், தொடர்புத் திட்டமாகவும், அங்கங்கே நமக்குக் காட்சி அளிப்பதைப் பார்க்கலாம். ஒருவன் ஒரு காரியத்தைத் தொடங்க ஆயத்தமாய் இருக்கும்பொழுது ஆயத்தத் திட்டத்தைப் பார்க்கிரேம். பின்பு, இதே திட்டம் நிலைமைத் திட்டமாகவும் தோன்றும். அவன் அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கும் பொழுது தொடர்ச்சித் திட்டத்தைப் பார்க்கிரேம். இதே தொடர்ச்சித் திட்டம் இலக்கை நெருங்கும் திட்டமாகவும் தோன்றும்.

இவ்விஷயத்தை ஆழ்ந்து சிந்தித்தால், மனத்திற்குள்ளும், உடல்மூலமாக வெளியிலும் அமைகின்ற திட்டங்களாகிற பாதைவழியாகத்தான் எல்லா மனப் போக்குகளும், செயல் போக்குகளும் அமைகின்றன என்பதும், மனிதனுடைய பிரவர்த்திகள் கண்மூடித்

தனமாக நிகழ்வன அல்லவென்பதும் தெளிவாகும். மனிதனுடைய செயல்களின் விளைவுகள் யாவும், அச் செயல்களுக்கு அமைகின்ற திட்டங்களையும், அந்தத் திட்டங்கள் வகுக்கின்ற நெறியிலே ஓடுகிற மனப் போக்குகளையும் ஆதாரமாகக் கொண்டவை என்பதும் புலனுகும். சூழ்நிலையாகிற உலகத்திலிருந்து ஓயாமல் எழுகின்ற அருட்டிகளால் ஓர் ஆள் திட்டங்களை வகுத்துத் தொடராகப் பிரதிச் செயல்களை விளைத்து உலகத்தைத் தாக்குகிற பல பிரவர்த்திகளைச் செய்கிருன்.

செயல்-தெளிவு*

கையும் காலும் உடலும் அடக்கமாகத் தாயின் உதரத்தில் கிடந்த சிசு ஜனனமாகி வெளியே வந்ததும், சூழ்நிலைகளிலிருந்து எழுகின்ற அருட்டிகள் பிறந்த சிசுவைத் தாக்குகின்றன. முதலில், குழந்தை தனக்கிருந்த ஆதாரமான நிலையில் ஏதோ ஒரு வகையான மாறுதலை உணர்ந்து அழுகிறது. சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதலால் ஓர் அருட்டி; அதற்குப் பிரதிச் செயல் அழுகை. இது மட்டும் காற்றுப்படாத உடம்பில் காற்றுப்படுகிறது. இதுவும் சூழ்நிலையிலிருந்து எழுகின்ற ஓர் அருட்டி; இதற்குப் பிரதிச் செயலாகச் சிசுவின் உடல் நடுங்குகிறது. குழந்தை தன் மன நிலைமையை உணர்த்த அழுகிறது. சற்று நேரத்திற்குள் புதிய அக-அருட்டி—அதாவது பசி—எழுகிறது. உடனே, அதற்கும் அழுகை பிரதிச்செயலாக அமைகிறது. இது வரைக்கும் திறவாத கண் திறக்கிறது. சூழ்நிலையிலிருந்து பழக்கமில்லாத ஒளி – அருட்டி வருகிறது. அந்த அருட்டியைத் தாங்க முடியாமல் கண்ணை மூடிக் கொள்கிறது. ஒளி-அருட்டி உக்கிரமாக இருந்தால், கண்ணை மூடிக்கொண்டு அழுகிறது. இப்படியே பிறந்தது முதல் ஓர் ஆளுக்கு ஏற்படும் அருட்டிகள் படிப்படியாக அதிகரித்து, முடிவிலே எண்ணத் தொலையாதவைகளாகின்றன. முதலில் அழுகை, கை கால்களை அசைத்தல், சிரித்தல், என்றிவை

---

* செயல்-தெளிவு—பல செயல்களுக்குக் காரணமாக இருக்கும் அருட்டிகளில் சிலவற்றைத் தெளிந்து தெரிந்துகொண்டு அவற்றிற்கு மட்டும் விளைக்கிற பிரதிச் செயலைக் குறிக்கிறது.

போன்ற சில பிரதிச் செயல்களோடு வாழ்க்கையில் பிரவேசிக்கிற சிசு, வளருந்தோறும் நாளொன்றுக்குக் கோடிக்கணக்கான பிரதிச்செயல்களை விளக்கின்ற உயிர்நிலையாகிறது.

சாந்தாவுக்கு வயது இரண்டு அவளுடைய தாய் பரம ஏழை; குக்கிராமத்தில் வாழ்ந்தவள். ஒரு சீமானுடைய வீட்டில் சமையல் வேலை செய்து வந்தாள். ஒரு நாள் அந்த வீட்டில் பெரிய விருந்து நடந்தது. சாந்தாவும் மற்றவர்களோடு சாப்பிட உட்கார்ந்தாள். அவளெதிரில் இட்டிருந்த இலையிலே பலவகையான தின்பண்டங்கள் பரிமாறியிருந்தன. அவற்றில் பெரும்பாலும் பண்டங்களை அவள் அதற்கு முன் உருசி பார்த்ததே இல்லை. இலையிலே முதலில் பரிமாறிய பாயஸத்தையே விரல்களால் தொட்டுத் தொட்டு நக்கிக் கொண்டிருந்தாள். இலையின் ஒரு மூலையில் ஹல்வா, ஜிலேபி, மைசூர்ப்பாகு முதலியவை பரிமாறியிருந்தன. அவை எப்படிப்பட்ட பண்டங்களோ என்று அஞ்சினாள்; அவற்றைத் தொடாமலிருந்தாள். அவள் பக்கத்திலிருந்த மாமா ஹல்வாவில் கொஞ்சம் எடுத்து அவளுடைய வாயில் திணித்தவுடனே 'ஓ!' என்று ஓலமிட்டு அழத்தொடங்கினாள். வெகு விரைவில் அழுகை நின்றது. ஏனென்றால் ஹல்வாவின் தித்திப்பு நாக்கில் தட்டிவிட்டது. இதன் பிறகு, மாமா வேறு தித்திப்புப் பண்டங்களை உருசி பார்க்க அவளுடைய வாயில் திணித்தபோது, சந்தோஷமாக வாயைத் திறந்து காட்டினாள். இலையில் பரிமாறியிருந்த பண்டங்களில் எவை எல்லாம் அவளுக்குப் பிடித்திருந்தன என்பதை அவளுடைய முகபாவனை வெகு தெளிவாகக் காட்டியது. மாமா

சில பண்டங்களை அவள் வாயில் இட்டதும், அவள அவற்றைத் துப்பிவிட்டாள். பரிமாறி முடிந்ததும் எல்லோரும் சாப்பிடத் தொடங்கி விட்டார்கள். மாமாவும் சாப்பிடத் தொடங்கிவிட்டார். சாந்தா இலையில் பரிமாறியிருந்த எல்லாப் பண்டங்களையும் சாப்பிடவில்லை. சிலவற்றை ஒன்று இரண்டு முறை உருசி பார்த்துவிட்டு விலக்கி விட்டாள். சிலவற்றை ஒரு முறை உருசி பார்த்ததோடு நிறுத்திவிட்டாள். வேறு சில பண்டங்களையோ மிஞ்சாமல் தின்றதோடு திரும்பவும் போடும்படிச் சைகை காட்டினாள்.

சாந்தாவின் கண் எதிரில் இருந்த இலையில் பரி மாறிய தின்பண்டங்களிலிருந்தும் கறி வகைகளிலிருந் தும் கண்ணுக்கும் நாவுக்கும் உகந்த அருட்டிகள் எழுந்து வந்தன. அருட்டிகளை எழுப்பிய பண்டங் களிற் சிலவற்றிற்கு அதிகமான பிரதிச்செயல்களும், சிலவற்றிற்குக் குறைவான பிரதிச் செயல்களும் தோன்றின. சாந்தா இந்த விருந்தில் சாப்பாட்டு விஷயமாக வெளிப்படுத்திய செயல்–தெளிவு வெகு ஸ்பஷ்டமாக விருந்தது. அத்தனை அருட்டிகளிலே எந்தெந்த அருட்டிகளுக்கு இடங்கொடுத்து பிரதிச் செயல்களை வெளிப்படுத்தினாள் என்பது அவளுடைய இலையிலிருந்த பண்டங்களையும் அவள் திரும்பவும் பரிமாறும்படிக் கேட்டுக்கொண்ட பண்டங்களையும் பார்த்தாலே தெளிவாகும்.

இப்படியே, ஓர் ஆள் பிறந்தது முதல் தனக்கு ஏற்படும் அருட்டிகளில் எவ்வெவற்றிற்குப் பிரதிச் செயல் தேவை, எவ்வெவற்றிற்குப் பிரதிச் செயல் தேவையில்லை என்று தெளிவாக அறிந்து

கொள்கிறான். இத்தகைய செயல் - தெளிவில்லாத மனிதன், 'பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்ட மாட்டான்' என்றபடி, குழப்பம் அடைந்து தாறு மாருகச் செயல்களை விளைத்துக் கொண்டே இருப் பான்.

ஒருவன் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் செய்யும் பிரதிச் செயல்களின் எண்ணிக்கையையும் அவற்றின் சிக்கலான தொடர்புகளையும், அந்தப் பிரதிச் செயல் களுக்குக் காரணமான அருட்டிகளின் பிரவாகத்தை யும் அவற்றின் அலைகளையும் அவை தாக்கும் வேகத் தையும் பார்த்தால், மானிட வாழ்க்கையில் செயல்-தெளிவு எவ்வளவு முக்கியமான விஷயம் என்பது புலப்படும். இதனாலேதான் மனிதன் பிறந்தது முதல் செயல் - தெளிவிலே அதிகம் அதிகமாகத் தேர்ச்சி பெற்று வெகு சமர்த்தனாகிக் காரிய சித்தி அடை கிறான். மனிதன் மனம்போன போக்கிலே போகிற தில்லை; எதிலும் ஒரு செயல் தெளிவை வெளிப் படுத்துகிறான்.

சாந்தாவின் தாய் வெளியே போயிருந்தாள். சாந்தா, மாடியிலே பொம்மைகளை வைத்து விளை யாடிக்கொண்டிருந்தாள். கீழே பல பெண்கள் உரத்த சத்தமாகக் கலகலவென்று சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். வெகு நேர மட்டும் விளையாட்டிலேயே ஈடுபட்டிருந்த சாந்தா வுக்குக் கீழே பேசிக் கொண்டிருந்தவர்களுடைய பேச்சும் சிரிப்பும் எவ்வித அருட்டியையும் எழுப்ப வில்லை. திடீரென்று சாந்தா வாசல் பக்கமாகக் கையை நீட்டி "அம்மா!" என்றாள். அவளுடைய

தாய் மாடியின் வாசல் பக்கமாக வரவில்லை. என்றாலும், கீழே சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர்களின் குரல்களில் ஒரு குரல் சாந்தாவைக் கவர்ந்தது. அந்தக் குரல் தன் தாயின் குரல் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. அதற்குக் காரணம் அவளுடைய செயல் - தெளிவுத் திறமைதான். கீழே பேசிக் கொண்டிருந்த பெண்களின் குரல்கள் சாந்தாவுடைய கவனத்தை வெகு நேரம் கவராமலிருந்தும், செயல் - தெளிவுத் திறமையால், அத்தனை குரல்களில் ஒரு குரல் மட்டும் தாயின் குரலெனத் திடீரென்று தெரிந்துகொண்டாள். அத்தனை குரல்களில் தாயின் குரல் ஒன்றுதான் அவளுடைய கவனத்தைக் கவரும் தன்மை பெற்றிருந்தது. மாடியில் இருந்த அவளுடைய மாமா, சாந்தாவின் தாய் வெளியே சென்று திரும்பி விட்டதாக முதலில் நம்பவில்லை. திரும்பவும் சாந்தா, "அம்மா!" என்று கத்தி அழத் தொடங்கினாள். அப்பொழுது, மாமா அவளைத் தூக்கிக் கொண்டு கீழே சென்று பார்த்தபொழுது, சாந்தாவின் தாயும் மற்றவர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

ஜன நடமாட்டம் அதிகமாகவுள்ள ஒரு தெருவில் குடியிருப்பவள் ஒருத்தி, தன் வீட்டு மாடியில் மனம் ஊன்றி ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். தெரு வழியாகப் பேசிக்கொண்டு போனவர்களுக்குக் கணக்கே இல்லை. அவர்களுடைய குரல்கள் அவளுடைய கவனத்தைச் சிதைக்கவில்லை. படிக்கும் புத்தகத்தில் கருத்தூன்றி நின்றவள், திடீரென்று தெருப்பக்கமாகவுள்ள ஜன்னலை நோக்கி ஓடிச் சென்று தெருவைப் பார்த்தாள். "ஏன் ஸரஸா!

எதற்காக அப்படி ஓடினாய்? யாரைப் பார்க்க?" என்று பக்கத்திலிருந்த ஒருவள் கேட்டதற்கு, "ஒன்றும் இல்லை; என் மாமாவின் குரல்போலிருந்தது. அவரா என்று; பார்த்தேன்" என்றாள். ஸரஸாவுக்குத் தன் மாமாவிடம் அபாரப் பிரேமை. ஸரஸாவின் மாமா அன்றெல்லாம் அவளைப் பார்க்க வரவில்லை; அவள் அவரை ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்த்திருந்தாள். ஆகையால் மாமாவின் குரல்போல் தொனித்த மற்றொருவருடைய குரல் அவளுடைய கவனத்தைக் கவர்ந்தது.

உபாத்தியாயர் ஒருவர் வகுப்பிலிருந்த மாணாக்கருக்கு ஒரு கணக்குக் கொடுத்துவிட்டு நாவல் வாசிப்பது வழக்கம். வகுப்பிலே ஒரு பையன் வேணு; காப்பி அடி*ப்பதிலே வெகு கெட்டிக்காரன். அவன் பக்கத்துப் பையனுடைய நோட்டுப் புஸ்தகத்தைப் பார்த்துக் காப்பிஅடிக்கக் கண்ணைத் திருப்பினான்; உடனே, உபாத்தியாயருடைய மேசைமேல் இருந்த சுண்ணாம்புக்கட்டி. வேணுவின் முகத்திலே விழுந்தது. வகுப்பு மூலையில் சோமு கணக்குப் போடாமல் காகிதக் கப்பல் செய்து கொண்டிருந்தான். உபாத்தியாயர் படித்துக்கொண்டிருந்த நாவல் அவன் தலையிலே விழுந்தது. பலருக்கும் இந்த உபாத்தியாயர் ஓர் அற்புத மனிதராகத் தோன்றினார். இவருக்கு முதுகுப் பக்கத்திலும் கண்களைக் கடவுள் சிருஷ்டித்து விட்டாரோ என்றுகூடப் பலர் நினைத்தார்கள். ஒரு பொருளை அல்லது ஒரு ஆளைக் கண்ணுக்கு எதிரே பாராவிட்டாலும், மற்றொரு காரியத்தில்

* காப்பிஅடி—பிறர் செய்வதைப் பார்த்துச் செய்தல்.

கவனத்தைச் செலுத்தியிருக்கும் நேரத்தில், அந்தப் பொருளை அல்லது ஆளைப் பார்க்கும் திறமை சிலருக்கு ஒரு சிறிது ஏற்படக் கூடும். இதற்குக் காரணம் செயல்-தெளிவுக்குகந்த கவர்ச்சித் திறமை தான். அந்த உபாத்தியாயர் கணக்கைக் கொடுத்து விட்டு நாவலைப் படித்தாலும், சில மாணுக்கர்களிடம் இவருடைய செயல்-தெளிவின் கவர்ச்சி ஏற்படுவது வழக்கம். இதனாலேயே இவர் அந்தப் பையன்களைக் கையும் களவுமாகக் கண்டுபிடிக்க முடிந்தது.

ஒரு நாள் நான் வெளி மாடத்தில் நின்றபடியே தெருவில் கண் எட்டிய மட்டும் பராக்காகப் பார்த்த வண்ணமே எதைப்பற்றியோ சிந்தித்துக் கொண்டிருந்தேன். நான் நின்ற நிலையிலிருந்து' தெருவில் வருகிறவர்களையும் போகிறவர்களையும் நன்முய்ப் பார்க்க முடிந்தது. என் திருஷ்டியில் பட்டவர்களில் எவருடைய நடையும் என் கவனத்தைக் கவரவில்லை. தெருவைப் பார்த்துக்கொண்டு நின்ற என் நயன கோசரத்திற்குள் கும்பல் கும்பலாகவும் ஜதை ஜதையாகவும் தனி ஆட்களாகவும் எத்தனையோ ஆண்களும் பெண்களும் புகுந்து மறைந்தார்கள். எவரது நடையும் என்னைக் கவரவில்லை. திடீரென்று ஐந்தாறு பெண்கள் போவதைப் பார்த்தேன். அவர்களுடைய முதுகுப் பக்கந்தான் எனக்குத் தெரிந்தது. என்று லும், ஒருத்தியின் நடை நான் வெகு நாட்களாகப் பாராத என் தோழியின் நடை போலிருந்தது. உடனே, "கமலா! கமலா!" என்று கத்திக் கூப்பிட்டேன். கமலா திரும்பிப் பார்த்தாள். பிரிந்த நண்பர்கள் இருவர் அளவளாவிப் பேசுவதற்கு உதவியாக இருந்தது என் செயல் தெளிவின் கவர்ச்சித் திறமை.

காலடி ஓசையைக் கேட்டு இன்னவள் வருகிறாள் என்று தெரிந்து கொள்ளுகிறோம். பட்டப்பகலில் வண்டியை இழுத்துக்கொண்டு போகிற ஒரு குதிரை தனக்கு எதிரே ஓலைக்கீற்றுக்களை ஏற்றிச்செல்லுகிற வண்டியிலிருந்து எழும் சலசலப்பு – ஒலியை உற்றுக் கேட்கத் தன் காதுகள் இரண்டையும் கிராமபோன் குழல்போல முன்பக்கமாகத் திருப்பி வைத்துக்கொள் வதைப் பார்த்திருக்கிறோம். ஒரு சொற்பொழிவு மேடையில் நின்று சொற்பொழிவாற்றுகிற ஒருவருடைய குரல் சற்றே படுத்துவிட்டால், நாம் தலையைக் குரல் வரும் பக்கமாகத் திருப்பிக் கையால் செவியை அணைத்து உற்றுக் கேட்கிறோம். ஒலிவரும் திசைக்குச் செவிகளைத் திருப்பி அப்புலனுறுப்பை நடுநிலையாக நிறுத்துவதும் செயல்தெளிவின் கவர்ச்சித் திறனையே காட்டுகிறது. அப்படியே ஒரு பொருளை நேர்முகமாகப் பார்க்கும்பொழுது, அந்தப் பொருளிலிருந்து எழும் ஒளி விழிகளின் நடுவில் உள்ள பாப்பாவில் படுகிறது. பாப்பாதான் பார்வைத் தெளிவு உடைய பாகம். தலையை அங்குமிங்கும் அசைக்காமல் நிலையாக வைத்துக்கொண்டு பார்க்கும் நயன கோசரத்தில் படும் பார்வை - எல்லை வெகுதூரம் பரவுவது. எனினும், நயன-கோசரத்தின் நடுவில் இருக்கும் பொருள்களே திருஷ்டியில் தெளிவாகப் படுவன. ஆகையால், விழிகள் தமக்கெதிரில் தோன்றுகிறவைகளில் சிலவற்றையே செயல் - தெளிவின் கவர்ச்சி விதிப்படி ஏற்றுக்கொள்கின்றன.

நவீன மானிட வாழ்க்கைப் போக்கே வெகு விரைவாகச் செல்லும் இயல்புடையது. பல்லக்குகளிலும் மாட்டு வண்டிகளிலும் பிரயாணம்

பண்ணியதை வெகு விரைவான பிரயாண வசதிகள் என்று ஒரு காலத்தில் மனிதன் நினைத்திருந்தான். அப்படி நினைத்த மனிதனது சலன வேகம், விமானங்களின் மூலமாகவும், மோட்டார், ரயில் முதலிய வாகனங்களின் மூலமாகவும் ஒரு மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்யக் கூடிய நாகரிகத்தை அடைந்துவிட்டது. ஒரு காலத்தில் மனிதனுடைய நகர-உரிமையைப் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தோம். இன்றோ, ஒவ்வொரு ஆளையும் உலகத்தோடு தொடர்புப்படுத்தி, அவரவருக்கு அமைந்திருக்கிற உலக உரிமைகளைப் பற்றிப் பேசும் நாகரிகப் போக்கிலே ஓடிக்கொண்டிருக்கிறோம். இத்தகைய பரபரப்பான வாழ்க்கைப் போக்குடைய எந்த மனிதனும் செயல் - தெளிவில் கைதேர்ந்தவனாக இருக்கவேண்டும்.

நவீன நாகரிகத்தின் விளைவுகளான ரேடியோ முதலிய கருவிகளும் மனிதனைச் செயல்-தெளிவுக்குப் பழக்கி விடுகின்றன. ஒலி-அலைகள் வான மண்டலத்தில் பலவகையான அலைத் திட்டங்களைப் பெற்றுப் பரவுகின்றன. வானொலியைக் கவர்ந்து கொடுக்கும் பெட்டியாகிய ரேடியோ செட்டை, பலவகையான அலை வேகங்களில் எந்த வேகத்திற்கும் சரிப்படுத்தி வைக்கலாம். ஆனால், ரேடியோ செட்டுகளை உபயோகிக்கிறவர்களில் சிலர், சில அலைவேகத்திற்குப் பழகியிருப்பார்கள்; மற்றும் சிலர் வேறு சில ஒலி-அலைவேகத்திற்குப் பழகிவிடுகிறார்கள். என்றாலும், மனிதனுக்கு எட்டாத ஒலி-அலை வேகங்களும் உள்ளன. மனிதனுடைய செவிப்புலன், குறிப்பிட்ட ஓர் ஒலி-அலைப் பரப்பில் 20 முதல் 20,000 மட்டும்

ஒலி-அலைகளை ஒரு விநாடி நேரத்தில் கேட்கத்தகுந்த ஆற்றல் உடையது. செவிப்புலனின் இந்த எல்லை-த் திட்டத்திற்கும் அப்பாற்பட்ட பூத பௌதிகநாதங்கள் உள்ளன. இவற்றை மனிதன் கேட்க முடியாது. இதே விதமாக மனிதனுடைய திருஷ்டி வேகத்தையும் கணித்திருக்கிறார்கள். கண்களின் உணர்ச்சித் திறனை ஒரு விநாடிக்கு இத்தனை டிரில்லியன் என்று கூறுவது வழக்கம். ஒருவனுடைய கண்கள் ஒரு விநாடிக்கு 400 முதல் 700 டிரில்லியன் வேகத்தில் பார்க்கும் ஆற்றல் உடையது. சாதாரணமான ஒளி-அலைகளுக்கே இந்தப் பார்வை அளவைக் குறிப்பிடலாம். இந்த அளவுக்கும் அப்பால் செல்லுகிற திருஷ்டி-வேகம் உடைய பூத பௌதிக ஒளிகள் உள்ளன. உஷ்ண அலைகள், எக்ஸ்ரே, ஹெர்ட்ஸ் - அலைகள் முதலியன மனிதனுடைய திருஷ்டி வேகத்திற்கு அடங்காதவை.

இப்படியே மனிதனுடைய பஞ்சேந்திரியங்களின் கிராஹ்யசக்திக்கு எட்டாத எத்தனையோ புலன்-உணர்ச்சி வேகங்கள் உள்ளன. மூக்கும், சில வாசனைகளையே கிரஹிக்கத் தகுந்த ஆற்றல் உடையது. மூக்கின் கிராஹ்ய சக்திக்கு அப்பாற்பட்ட எத்தனையோ வாசனைகள் உள்ளன.

இவ்வாறாக, ஐம்புலன்களின் கிராஹ்ய சக்திக்கு அதீதமானவைகளை ஒழித்துவிட்டு, கிராஹ்ய சக்திக்கு அடங்குகிறவைகளையே அனுபவிக்கும் ஆற்றல் பெற்றிருந்தாலும், மனிதன் தன் ஆற்றல் அளவுக்குஎல்லாப் புலன் - உணர்ச்சிகளையும் அனுபவிக்க மாட்டான்; அவனால் அனுபவிக்கவும் முடியாது. ஐம்புலன்களின் கிராஹ்ய சக்திக்குட்பட்ட உணர்ச்சிகளில், காலங்


தோறும் சிலவற்றை விலக்கியும் சிலவற்றை ஏற்றுக் கொண்டும் அனுபவிக்கிறான். மனிதன் சூழ்நிலைகளி லிருந்து வருகிற அருட்டிகளில், எவை தன் செயல், தெளிவின் கவர்ச்சிக்கு உகந்தவை என்று தெளி வாகத் தெரிந்துகொண்டு அவற்றிற்குப் பொருத்த மான பிரதிச் செயல்களையே தோற்றுவிக்கிறான்.


ஓர் ஆளின் சலனங்கள் பல. இத்தகைய சலனங் களில் ஏதோ ஒன்றை அல்லது சிலவற்றை மட்டுமே ஒருவன் தெரிந்துகொள்ள முடியும். சலனங்களிற் பல ஒன்றுக்கொன்று எதிரிடையானவை. உதாரணமாக, கையை நிமிர்த்தல், வளைத்தல், ஒருபொருளை அணுகு தல், அதிலிருந்து விலகிச்செல்லுதல், என்பனபோன்ற ஏக காலத்தில் எதிரிடையாக நிகழ்கிற இரண்டு சலனங்களில் ஒன்றைத்தான் அவன் தெரிந்துகொள்ள முடியும். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்கிக் கொள்வோம். கமலம் ஒருதிசையில் பார்த்துக்கொண் டிருந்தாள். ஒரு தட்டில் சில மாம்பழங்கள் அவளு டைய வலதுகைப் பக்கமாகச் சற்றே விலகியிருந்தன. மேலே இருந்து ஒரு வர்ணப் பந்தை இடது கைப் பக்கமாக நூலில் கட்டி விட்டிருந்தது. இந்த இரண்டு பொருள்களும் கமலத்தின் நயன கோசரத்துக்கு உட் பட்டவை; என்றாலும், அவள் இரண்டையும் ஏக காலத்தில் நன்றாய்ப் பார்க்க முடியாது. மாம்பழம், பந்து ஆகிய இரண்டு பொருள்களிலிருந்தும் ஒளி அருட்டிகள் ஏக காலத்தில் கமலத்தின் கண்களைத் தாக்கிய போதிலும் இவ்விரு பொருள்களையும் பார்வையிடுதலாகிய பிரதிச் செயல் நிகழ வேண்டு மானால், கமலம் தன் திருஷ்டியைச் 'செயல் தெளிவு' விதிப்படி ஏதாவது ஒரு பொருளில் திருப்பவேண்டும்.


ஏககாலச்சக்திகள் இரண்டு ஒரே நேரத்தில் தாக்கும் பொழுது, திருஷ்டி மூலைக்கு மூலையாகத்தான் செல்லும். ஒன்றிலே பந்தை நோக்கிப் பார்க்கவேண்டும்; அல்லது, வலது கைப்பக்கமாகத் திரும்பி மாம்பழத் தட்டைப் பார்க்கவேண்டும். ஏக காலத்தில் இரண்டு பொருள்களையும் மூலைவிட்டமாகப் பார்த்தால் இரண்டு பொருள்களும் நயன கோசரத்தில் படா. இதனாலே தான், நம்முடைய திருஷ்டி, ஒன்றிலே, மேல்நோக்கிப் பார்க்கிறது, அல்லது கீழ்நோக்கிப் பார்க்கிறது; அல்லது பக்கப்பார்வையாகவோ நேர்ப் பார்வையாகவோ திரிகிறது. இங்ஙனம் பார்வையிலும் செயல்-தெளிவுக்கு இசைந்த பிரதிச் செயலைக் காணலாம்.


சில தருணங்களில், இதைவிடச் சிக்கலான நிலைமைகளில், மத்தியஸ்த நிலையான பிரவர்த்திகள் நிகழும். என்றாலும், சுலபமான விஷயங்களில் ஓர் ஆள் நிகழ்த்தவேண்டிய பிரதிச் செயல்களில் இதையோ, அதையோ 'உண்டு, இல்லை' என்ற முறைப்படி தெரிந்து கொள்வதுதான் இயற்கை விதி.

முன்னே சொன்ன திருஷ்டாந்தத்தில், கமலம் தனக்குமுன் இருந்த இரண்டு பொருள்களையும் ஏக காலத்தில் பார்க்க முடியாமல், ஒன்றைப் பார்த்த பிறகுதான், மற்றொன்றைப் பார்க்க வேண்டும் என்பதனாலேயே பிரதிச் செயல்கள் நிலை பெயர்ந்து இயங்குவன என்பது தெளிவாகிறதல்லவா? இப்படியே, ஓர் ஆள் தெரிந்துகொள்ளும் அருட்டிகள் அவனைத் தாக்கும்பொழுது, அவன் செய்கிற பிரதிச் செயல்களும் ஒன்றின் பின் ஒன்றாக நிலைபெயர்ந்து தெளிவு பெறுகின்றன. இந்த இயல்பு எந்த உயிர்









நிலைக்கும் பொதுவானது. குறிப்பிட்ட ஒரு நிலையில், குறிப்பிட்ட அருட்டிகளுக்கு ஏற்படக்கூடிய பிரதிச் செயல்களை நிரல்படவைத்து, அவற்றை ஒன்றின்பின் ஒன்ருகச் செய்வதே இயற்கை விதி. இந்த விஷயம் கவன சக்தியைப்பற்றிய ஆராய்ச்சியாலும் பரிசோதனையாலும் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

86-ம் பக்கத்துப் படங்களை கவனித்துப் பார்த்தால், முதலில் படங்கள் ஒரு மாதிரியாகக் கண்ணுக்குப் புலப்படுகின்றன. பின்னும் இவற்றைப் பார்த்துக் கொண்டே இருந்தால், முதலில் பார்த்த தோற்றங்கள் மாறி வேறு தோற்றங்கள் தெரியும். இவ்விதம் பார்க்குந்தோறும் தோற்றங்கள் மாறிக்கொண்டே போகின்றன. நாம் உபயோகிக்கும் நேரத்திற்கும், நமது கவன சக்திக்கும் ஏற்றவாறு பிரதிச்செயலான 'படம் பார்த்தலில்' தோற்றங்கள் நிலை பெயர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

புள்ளிகளும், கோடுகளும் நிறைந்த படங்கள் அருட்டிகளை ஒன்றின்பின் ஒன்ருக எழுப்புவன; அருட்டிகளுக்கு ஏற்றவிதமாக பிரதிச் செயல்களும் மாறி மாறி நிலை பெயர்ந்து தோன்றுவன—என்பதைக் கவனிக்கலாம்.

செயல் தெளிவைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது, நமது மனம் ஒரு நிலைமையைத் துண்டு துண்டாகப் பிரித்துப் பார்வையிடுகிறது என்று கருதலாகாது. ஒரு செயல் நிகழும்பொழுது, குறிப்பிட்ட ஏதோ ஒரு பேசியின் இயக்கத்தை மட்டும் கவனிப்பதாகக் கருதுவது தவறு. எந்தச் செயலிலும் அருட்டிகள் தனித்தனியே எழாமல், ஒன்ருேடொன்று கலந்து

எழுவதையும், அருட்டிகளுக்குத் தக்கவாறு நிகழ்கின்ற பிரதிச் செயல்கள் ஒன்ருேடொன்று கலந்து வருவதையும் பார்க்கலாம். ஒரு செயல் வெளிப்படுவதற்குப் பல அருட்டித் தொகுதிகளின் கலப்பே காரணமாகும். ஓர் உடலில் ஒரே செயலுக்குப் பல பேசிகளும், பேசிகளை இயக்கும் நரம்புகளும், நரம்பு நடு நிலையங்களும், ஜீவாணுக்களும் இயங்கவேண்டும். ஆகையால், 'செயல் - தெளிவு' என்பது பாகம் பாகமாகப் பிரித்துத் தெளிவது அன்று.

செயல்-தெளிவுக்குப் பொருத்தமான பிரதிச் செயலைக் "கூறுபோட்டுப் பார்க்கிற மானஸ சாஸ்திரம்" என்று சிலர் பரிகாசம் பண்ணலாம் இது முற்றிலும் தவறு. அ - ஆ - பி (அருட்டி-ஆள்-பிரதிச் செயல்) என்ற இந்த வாய்பாடே, கூறிட்டு பார்க்கும் மானஸ சாஸ்திரக் கொள்கையை நிராகரிக்கிறது—என்பது வெகு தெளிவல்லவா? அருட்டி மலையளவாக இருக்கலாம்; அல்லது தினையளவாகவும் இருக்கலாம். பிரதிச் செயலும் மலையளவாக இருக்கலாம்; அல்லது தினையளவாகவும் இருக்கலாம். கடலுக்குள் கடுகும் இருக்கலாம். கடுகுக்குள் கடலும் இருக்கலாம். மிகவும் நுண்ணிய ஆலம் விதைக்குள் அடங்கிக் கிடக்கிறது ஆலமரம். ஆலமரத்தில் நுண்ணிய விதையும் அடங்கியிருக்கிறது.

'கந்தன் மரத்தை வெட்டினன்.' இதை நாம் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். பார்க்கிற நமக்கு வெட்டுதலாகிற ஒரே செயலில், கையை ஓங்கிக் கோடாலியை வீசுதல், மரத்தைத் தாக்குதல், மரத்திலிருந்து சிராய் பெயர்ந்து வருதல், மரத்தில் வெட்டுக் காயம் தோன்றுதல், ஆகிய செயல்-தொகுதிகள் நமது

பார்வையில் படுகின்றன. இவற்ளுேடு, மரத்தை வெட்டினன் என்ற செயல் - தொடர்பு முடிவடைய வில்லை. கோடாலியை எடுக்கும்பொழுது இயங்கு கின்ற பேசி இயக்கங்களும், நரம்பு இயக்கங்களும், 'ஓங்கினன்' என்னும்பொழுது அதற்குரிய பேசி இயக்கங்களும் நரம்பு இயக்கங்களும், திருஷ்டி இயக்கங்களும், கந்தனது உடலில் மேலும் நிகழ்கின்ற பல்வேறு இயக்கங்களும் அடங்கும். வெட்டுதல் என்ற ஒரே செயல் தனித்திராமல் அநேகச் செயல் களின் தொகுதியாக இருக்கிறது. பார்க்கிற நமக்கோ எல்லாம் சேர்ந்து ஒன்ருகி 'வெட்டுதல்' என்ற செயலாகத் தோன்றுகிறது.

ஒருத்தி தெருவிலே போகிருள். உடனே "ஆஆ! என்ன அழகு!" என்று சொல்லுகிருேம். "ஆஆ! என்ன அழகு!" என்ற இந்த வியந்துரைக்கு எத்தனை அருட்டிகள்! எத்தனை பிரதிச் செயல்கள்! எண்ணித் தொலையுமா? 'செயல்-தெளிவின்' நியதிப்படி மூக்கு, கண், காது, கை, இடை, தொடை, பாதம், கட்டிய சேலை, அணிந்த அணிகள் என்றிப்படியே அங்கந் தோறும், ஆடை- அணிகலன்தோறும் எழுந்த அருட்டி களுக்கு ஏற்றவாறு நமக்குள் நிகழ்ந்த பிரதிச் செயல்களை ஒவ்வொன்ருகப் பிரித்துப் பிரித்து பார்வையிட்ட பிறகு "ஆஆ! என்ன அழகு!" என்று சொன்னேமா? அல்லது தெருவிலே போனவளை அங்கம் அங்கமாகப் பிரித்துப் பார்வை யிடாமல் மொத்தமாகப் பார்வையிட்டதனுல் எழுந்த பிரதிச் செயல்களின் தொகுதியாக எழுந்த வியப்பு- உரையாக "ஆஆ! என்ன அழகு!" என்று சொன்னேமா?

செயல்-தெளிவும், அருட்டி-பிரதிச் செயல்களின் கலப்புத் தொகுதியும், நேர் விரோதமான போக்குகளாகத் தோன்றினாலும், இவை யாவும் ஒவ்வொரு செயலுக்கும் உரிய அங்கங்களாக அமைகின்றன. ஒரு முகத்தைப் பார்க்கும்பொழுது, அதை ஒரு தொகுதியாகப் பார்ப்பதோடு, அந்த முகத்தை அதன் பின்னணிக்கோப்பு*களிலிருந்து வேருகப் பிரித்தும் ஆராய்கிறோம். ஒரு பொருளை எடுக்கும் பொழுது, எல்லா விரல்களையும் உபயோகிக்கிறோம். ஐந்து விரல்களினால் ஒரு பொருளை எடுப்பதைப் பார்க்கிலும், சிரமமான காரியம் இரண்டு விரல்களால் எடுப்பது. கீழே விழுந்த ஊசியை எடுக்கக் கட்டை விரலையும் சுட்டு விரலையும் உபயோகித்த போதிலும், துணையான மூன்று விரல்களும் கூடவே இயங்குகின்றன. வீணை வாசிக்கப் பழகுகிறவள் இடதுகை விரல்களைத் தனித்தனியே உபயோகிக்கச் சிரமப்பட்டு பழகுகிறாள். நெடுங்காலப் பயிற்சியால் ஒரு சிறிது தேர்ச்சி பெறுகிறாள். இடதுகை விரல்களால் ஸ்வரஸ்தானங்களைத் தொட்டு இசைகளை எழுப்புகிற அதே நேரத்தில் வலக்கை விரல்களில் ஒரு விரலால் சுதிகூட்டியும், மற்றிரண்டு விரல்களால் தந்திகளை வருடியும், வீணை வாசிக்கப் பழகவேண்டி இருக்கிறது. ஒரே ஆளின் வலதுகை இடதுகையோடு ஒத்துழைக்கச் செயல்கலப்புக்கள் தேவையாக இருக்கின்றன. ஒரு தொகுதி மற்றொரு

---

* பின்னணிக்கோப்பு—ஒரு காட்சியில், பிரதானமாக இருக்கின்றவைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதற்காகப் பின் பக்கத்தில் அலங்காரமாக அமைகின்றவை.

தொகுதிக்கு எதிராக இயங்குவதற்கு இவ்வளவு பயிற்சி தேவை. இப்படி இருக்க, ஒருத்தியின் வீணை வாசிப்பைக் கேட்டு மகிழ்கிற நமக்கோ, அவளுடைய செய்கையெல்லாம் ஒன்றாகக் கலந்து 'வீணை வாசித்தல்' என்னும் ஒரே செயலாகத் தோன்றுகிறது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது, செயல்-தெளிவும், அதற்கு உகந்த கவர்ச்சிகளும், பிரதிச் செயல்களும், தனித்தனியாகத் தோன்றுவன அல்ல; எல்லாம் ஒன்று பட்டுக் கலந்த இயக்கமே செயல்— என்பது தெளிவாகும். ஒரு செயலுக்கு முன் தெளிவு; தெளிவுக்கு முன் அருட்டித் தொகுதி; அருட்டித் தொகுதிகள் ஓர் உயிர் நிலையின் அகத்தும் புறத்தும் நின்று எழுகின்றன. இவைகளையே அருட்டிப் பிரதிச் செயல்களின் மானஸ - சாஸ்திர ரீதியான அதிசயம் என்கிறார்கள்.

சூழ்நிலையும் மனிதனும்

மானஸ சாஸ்திரத்தில் 'சூழ்நிலை' என்ற விஷயம் மிகவும் முக்கியமானது. மனிதனுடைய செயல்களைச் சரியானபடி தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவனுடைய ஒவ்வொரு செயலுக்கும் அமைகிற சூழ்நிலைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். சூழ்நிலைகளைப் பற்றிச் சரியான அறிவில்லாமல் ஒரு செயலைத் தப்பு என்றாவது, சரி என்றாவது சொல்லுகிற அபிப்பிராயங்கள் நீதியாக இரா. எந்தச் செயலையும் அதற்கு அமைந்த சூழ்நிலையிலே வைத்துப் பார்க்கும்பொழுதுதான் மனிதனுடைய மனமும், மனத்தின் இயக்கம் வெளியிடுகிற செயலும் எவ்வளவு பொருத்தமானவை என்று அறியமுடியும்.

தினந்தோறும் உடை - அலங்காரங்களில் வெகு சிரத்தையாக இருக்கிற ஒருவர் ஒரு நாள் தலை உரோமம் பறக்க, குலைந்து அழுக்குப் படிந்த உடை அணிந்து காரியாலயத்திற்கு வந்தால், அவருடைய நண்பர்களின் உள்ளத்தில் பல வினாக்கள் எழும். 'இவர் உடை அலங்காரங்களில் வெகு ஜாக்கிரதையாக இருப்பாரே; இன்றைக்கேன் இப்படி வந்தார்? உடம்புக்குச் சுகம் இல்லையா? வீட்டில் ஏதேனும் அசந்தர்ப்பமா? எதிர்பாராத அசௌகரியங்கள் ஏற்பட்டனவா?' என்றெல்லாம் சிந்திப்பார்கள்; அவருடைய செய்கைக்குக் காரணமான சூழ்நிலையை அறிய விரும்பி, "என்னப்பா, ஏன் இன்றைக்கு இந்தக் கோலத்திலே வந்தாய்?" என்று கேட்பார்கள்.

உபாத்தியாயர் வகுப்புக்கு வந்ததும் 'கடுகடு' 'வெடு வெடு' என்றிருக்கிறார். அதைக் காணும் மாணாக்கர்கள், "இன்றைக்கு நமது உபாத்தியாயர் தமது மனைவியோடு சண்டை போட்டுக் கொண்டு சாப்பிடாமல் வந்திருக்கிறார்; நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்," எனக் 'கிசுகிசு' என்று பேசத் தொடங்கி விடுவார்கள். மாணாக்கர் உபாத்தியாயரிடம், அவருடைய வெடுவெடுப்புக் குணத்திற்குக் காரணமான சூழ்நிலையைப் பற்றி நேரிலே கேள்வி கேட்டு ஆராய முடியாது; அதனாலே, அவர்களுக்குத் தோன்றிய காரணத்தைச் சூழ்நிலையாகக் காட்டுகிறார்கள். உண்மையான காரணத்தை அவர்கள் அறியக் கூடுமாயின், அவருடைய வெடுவெடுப்பு நியாயமானதென்று அறிந்து, தாறுமாறான காரணங்களைக் கூறமாட்டார்கள்.

ஒருவன் கொலைக் குற்றத்திற்கு ஆளாகி நீதிபதியின் முன் நிற்கின்றபொழுது, அவனுடைய கட்சியைப் பேசுகின்ற வக்கீல், தன் கட்சிக்காரன் கொலையே செய்யவில்லை என்று வழக்காடுகிறான். எதிர்க்கட்சி வக்கீலோ, கொலை செய்வதற்கான சூழ்நிலைகள் அமைந்திருந்தன என்றும், கொலை செய்ததாகக் காட்டும் உருசுக்கள் இருக்கின்றன என்றும் கூறுகிறான். கொலைக் குற்றம் உருசுவானால் அந்தக் குற்றத்திற்கு அவன் ஆளாக நியாயமான சூழ்நிலைகளும் அருட்டிகளும் இருக்கின்றனவா என்று நீதிபதி ஆராய்ந்து மரண தண்டனை விதிப்பதற்குப் பதிலாக அவனை இலேசாகத் தண்டித்து அனுப்புகிறார்.

ஒருவர் தமது மகளுக்கு வரன் தேடுகிறார்; வரனின் ஜாதகம் பொருத்தமாக இருக்கிறது; ஜாதகப்பொருத்தம் பார்த்துத் திருப்தி அடைந்தாலும், அந்த வரனை உடனேயே நிச்சயம் செய்யாமல், அவனுடைய சூழ்நிலையை ஆராயத் தொடங்குகிறார். அந்த வரனுடைய தாய் தந்தையரது குணங்களையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்கிறார். வரனுடைய தந்தைக்காவது தாய்க்காவது குஷ்டம் முதலிய கொடிய வியாதிகள் உண்டா? தந்தை குடி முதலிய பழக்கங்களுக்கு ஆளானவரா? வரனுடைய பாட்டன் பாட்டியர் எத்தனை வயதுவரை உயிரோடு இருந்தார்கள்? வரனுடைய தந்தையின் வருமானம் என்ன? வரனோடு பிறந்தவர்களின் நிலைமைகள் என்ன?—என்றிப்படியே சூழ்நிலைகளை ஆராய்கிறார். சூழ்நிலைகளை ஆராய்ந்து எல்லாம் திருப்தியாக இருந்தால் பெண்ணைக் கொடுக்க இசைகிறார்.

ஒரு மாணாக்கன் வகுப்பில் மிகவும் மந்தனாக இருக்கிறான். எந்தப் பாடத்தையும் சரியாகப் படிப்பதில்லை. உடனே உபாத்தியாயர், அவனிடம், "உன் தகப்பன் யார்? நீ இருக்கும் ஊர் எது? உன் தகப்பனார் செய்து வரும் உத்தியோகம் என்ன? என்றெல்லாம் கேள்விகள் கேட்டு அவனுடைய சூழ்நிலையை ஆராய்ந்து, மந்த குணத்திற்குக் காரணம் கண்டு பிடிக்க முயலுகிறார்.

ஒரு சிறுவனிடம் புத்திக்கோளாறுகள் காணப்படுகின்றன. உடனே அவனுடைய குடும்பத்தில் தாய்க்காவது, தந்தைக்காவது, பாட்டன் பாட்டிக்காவது புத்திக் கோளாறுகள் உண்டா என்று நாம் ஆராய விரும்புகிறோம்; அந்தச் சிறுவனுடைய புத்திக்

கோளாறுகளுக்குக் காரணமான சூழ்நிலை உண்டா என்று பார்க்க விரும்புகிறோம்.

ஒரு சிறுவன் கீழே விழுகிறான். கை உடைந்து விடுகிறது. அவனைப் பார்க்கிறவர்கள், அவனுடைய கை உடைந்ததற்குக் காரணமாக இருந்த சூழ்நிலையைத் தெரிந்துகொள்ள, "எப்படிக் கை உடைந்தது? நீ என்ன செய்தாய்? எதற்காக மரத்தின்மேல் ஏறினாய்? மரத்திலே எந்தக் கிளையில் இருந்தாய்?—என்றெல்லாம் கேள்விகள் கேட்கிறார்கள். ரயில் வண்டியில் பிரயாணம் செய்கிறவர்கள் ஒருவரோடு ஒருவர் சம்பாஷணை செய்யும்பொழுது எழுகின்ற கேள்விகள் பெரும்பாலும் அவரவர்க்கமைந்த சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டேயாம்.

மனிதனுடைய மனநிலைமைகளும் செயல் நிலைமைகளும் சூழ்நிலைகளின் மத்தியிலே அழகாகப் பொருந்துவன. சூழ்நிலைகளே மனிதனுடைய உடற்கூறுகளையும், மனப் போக்குகளையும், பண்பையும், நாகரிகப் போக்கையும் ஆக்குவன. அமெரிக்க இந்தியருடைய மூக்கமைப்பிற்குக் காரணம் சூழ்நிலைதான். சீனருடைய சப்பை மூக்கிற்குக் காரணமும் சூழ்நிலை தான். பாரத தேசத்து மக்களின் ஆத்துமீயப் பண்புக்கும் சூழ்நிலைதான் காரணம். மேலைநாட்டாரது லோகாயதமான கொள்கைகளுக்கும் காரணம் சூழ்நிலைதான். தேசந்தோறும் காணப்படுகிற நிறபேதங்கள், அங்க அவயவ வேற்றுமைகள், பாஷை வேற்றுமைகள், மன வளர்ச்சியின் ஏற்றத் தாழ்வுகள், பண்பின் உயர்வு தாழ்வுகள், நாகரிகப் போக்குகள்—யாவற்றிற்கும் காரணமானவைகளிலே சூழ்நிலைகளுக்குத் தனி ஏற்றம் உண்டு.

மனிதனது மனத்தையும் உடலையும் ஆக்கி அமைக்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் ஆராய வேண்டும். அகச் சூழ்நிலைகளும் புறச் சூழ்நிலைகளும் ஆள் தோறும் வேற்றுமைப்பட்டு, விதவிதமான செயல்களைத் தோற்றுவிப்பதினால், ஒரே தன்மையான சிந்தனைப் போக்கும் செயல்போக்கும் உடைய இருவர் கூட இல்லாமல் மனிதர்கள் யாவரும் தனித்தனி உயிர் நிலையாகித் தனித் தனி மனப்போக்கும் செயல்போக்கும் உடையவர்களாய்த் தனித்தனி அழகிலே விளங்குகிறார்கள். சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்றவர்களுக்குத்தான் ஆள்தோறும் அழகைப் பார்க்கும் ஆற்றல் உண்டு.

சூழ்நிலைகள் மானிட வாழ்க்கையை ஆண்டபோதிலும், மனிதன் சூழ்நிலைகளுக்கு அடிமையாகாமல், அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, தன் செயல் போக்கிலும் மனப்போக்கிலும் மகிழ முயலுகிறான். செயல் - தெளிவால் அருட்டிகளில் விலக்க வேண்டியவைகளை விலக்கி, இசைய வேண்டியவற்றிற்கு இசைந்து வாழ முயலுகிறான். எண்ணிறந்த இயற்கை விதிகள் அவனுக்குச் சூழ்நிலைகளாக இருந்தாலும், அவற்றை மேற்கொள்ளத் தன் ஆற்றலைப் பயன்படுத்திப் பல செயற்கை முறைகளைக் கையாளுகிறான். எல்லாச் செயல்களுக்கும், எல்லாச் சிந்தனைகளுக்கும் திட்டங்களை வகுத்துக்கொண்டு, தெரிந்து தெளிந்த அருட்டிகளுக்குப் பொருத்தமான பிரதிச் செயல்களை விளைத்து, தன்னோடு உலகமும், உலகத்தோடு தானுமாக கலக்கின்ற உயிர் நிலையாகி வாழ்கின்ற மனிதனுடைய ஆச்சரியமான மன மாளிகையின் அதிசயங்களை எல்லாம் திறந்து காட்டுகின்ற திறவு கோல்களில் சிறந்தது சூழ்நிலைத் திறவு கோலேயாம்.

'நீரளவே ஆகுமாம் நீராம்பல்.' அல்லி மலர் பூக்கும் குளங்களைப் பாருங்கள். அல்லிப் பூண்டிற்குச் சூழ்நிலை அது முளைத்து வளரும் நீர் நிலையே. குளமோ, குட்டையோ, மடுவோ, எதுவாயினும், அதில் மழைக்காலத்தில் எவ்வளவு நீர் நிரம்புமோ அவ்வளவிற்கு நீண்ட தண்டுகளையே பெற்றிருக்கும். மலர்களின் தண்டுகளோ நீர் மட்டத்திற்கு மேலே சற்றுக் கிளர்ந்து நிற்கும். நீர் மட்டம் தாழும்பொழுது கொடிகள் சுருண்டு நீரின் அடியில் கிடக்கும். நீர் மட்டம் உயரும்பொழுது அல்லித் தண்டும் நீண்டு எழும். அல்லிப் பூண்டு, தான் வளரும் நீர்-நிலையின் ஆழத்திற்கு ஏற்படும் ஏற்றத் தாழ்ச்சியை வெகு விரைவில் திட்டம் செய்துவிடுகிறது. எனினும், அந்தப் பூண்டு மதிப்பிடும் அளவிற்கும் அதிகமாக நீர் நிரம்பிவிட்டால், பூண்டின் இலைகள் நீருக்குள் மூழ்கி அழுகிப் போகும். இப்படி அழுகினாலும், நீரின் அடியில் கிழங்கு இருப்பதால், திரும்பவும் அல்லி தழைக்கும்.

உலகத்தில், உயிர்களின் வளர்ச்சியைத் திட்டம் செய்வன சூழ்நிலைகளே. இதை விளக்கும் இயற்கைத் திருஷ்டாந்தம் என்றே அல்லிப் பூண்டைக் குறிப்பிட வேண்டும். பெற்றோரிடமிருந்தும், பாட்டன், பாட்டி முதலிய மூதாதையரிடமிருந்தும் பாரம்பரிய நியதிக் கிரமமாக அமைகின்ற குணங்களை முன்னோர் தேடித் தந்த குலச் செல்வமாகப் பெறுகிறோம். பிறந்த பிறகு, வாழ்க்கையின் ஆரம்ப நாளிலிருந்து சூழ்நிலை - நியதிகள் முக்கியமானவை. சீதோஷ்ணங்களுக்கும், அதிர்ச்சி, ஓசை, ஒலிகளுக்கும், பலவகையான ஆட்சிக் கட்டுப்பாடுகளுக்கும் ஆளாகாமல், தாயின் உதரத்திற்குள்ளே காக்கப்படும் சிசு சினைப்படுகின்ற

நேரத்திலே அதன் குணத்திற்கும், உடலின் நிறத்திற்கும். அங்க அவயவ லக்ஷணங்களுக்கும் பாரம்பரிய நியதிகள் எப்படி ஆதிகாரணங்களாக இருந்தனவோ அப்படியே சூழ்நிலைகளும் ஆதிகாரணங்களாக அமைகின்றன. வளர்ச்சிக்கு உணவு தேவை. உணவைச் சூழ்நிலையிலிருந்து பெறவேண்டும். சூழ்நிலையாகின்ற தாய்க்குப் போதிய உணவிருக்கவேண்டும். அப்பொழுதுதான் குழந்தையின் சினைப்பை - வாழ்க்கை க்ஷேமமாகும்.

சினைப்படுவதற்கு முந்தியே சூழ்நிலைகள் பிறக்கப் போகின்ற குழந்தைக்குக் காரணமாகின்றன. சரீர வளர்ச்சிக்கு உதவி செய்கின்ற பல சுரப்பிகள் உள்ளன. சில சுரப்பிகள் இரத்தச் செழிப்பைக் காக்கின்றன. வேறு சில சுரப்பிகள் உடலின் உயரம் பருமன் முதலியவற்றைத் திட்டம் செய்கின்றன. அவ்வாறே, ஆண் பெண் ஆகிய இரு பாலாரிடத்திலும் பால் - மயத்தைப் போதிய அளவு வளம் பெறச் செய்வதற்கும் சில சுரப்பிகள் காரணமாகின்றன. உண்ணும் உணவில் போஷிப்புச் சத்துக்களும் சுகாதார நியதிகளும் சுரப்பிகளின் ஆரோக்கியமான இயக்கத்திற்கு குறைவின்றி அமையவேண்டும். சரீர ரசாயனத்தை ஆராய்கிற விஞ்ஞானிகள் உடலின் சுகநிலைக்கு இன்றியமையாத வைட்டமின்களையும், அவற்றின் தேவை அளவுகளையும் வரையறுத்துக் கூறுகிறார்கள். இவ்வளவு அரிசி சாப்பிட்டால் இத்தகைய போஷிப்புச் சத்து கிடைக்கும் என்றும், இவ்வகையான காய்கனிகளை உண்டால் இன்னின்ன வைட்டமின்கள் கிடைக்கும் என்று விளக்கியிருக்கிறார்கள். தாய் சாப்பிடும் உணவில் போஷிப்புச்

சத்துக்களும், வைட்டமின்களும் ஏற்றத் தாழ்ச்சியாக இருந்தால், சரீரத்தின் காவலாளிகளான அகச் சுரப்பிகளின் தொழிலிலும் ஏற்றத் தாழ்ச்சிகள் காணப்படும். சுரப்பிகளின் இயக்கத்தின் நடுநிலை குலையும். சூழ்நிலையாகிற தாய் தந்தையரின் சரீர நிலைமைகள் சினையைப் பாதிக்கின்றன. சினைப்பட்ட பிறகும், தாயுண்ணும் உணவில் ஏற்படும் போஷிப்புக் குறைவு-நிறைவுகளால் சிசுவின் வளர்ச்சியில் ஏற்றத் தாழ்ச்சிகள் காணப்படுகின்றன.

உணவைச் சூழ்நிலையிலிருந்து பெறுவதற்கு வசதிகள் தேவை. கணவன் போதுமான அளவில் சம்பாதித்தால் மனைவி போதுமான அளவில் உணவைத் தேடிக்கொள்ள முடியும். கணவன் போதுமானபடி சம்பாதிக்கவேண்டுமானால் அவனுடைய திறமை திராணிகளை மதிப்பிட்டு, தகுந்த வசதிகளை அமைத்துக்கொடுக்க வேண்டிய பொறுப்பு ஜன சமூகத்தைச் சார்ந்தது. ஜன சமூகம் வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமானால், தேசத்தின் செல்வ நிலை சரியான படி அமையவேண்டும். இப்படியே சூழ்நிலை நியதிகள் பெருகிக்கொண்டே போகும். இதையெல்லாம் பார்க்கும்பொழுது சினைப்பட்டு உருவாகி உதரத்தில் வளர்கின்ற குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற சூழ்நிலைத் தொடர்பு ஒருவாறு விளங்குகிறதல்லவா?

'இடம் அகப்படாத தோஷம் இந்திர பதவி அகப்படாமல் போச்சு' என்றொரு பழமொழி உண்டு. ஆம்; இது உண்மை. எதற்கும் தகுந்த இடம் அமைய வேண்டும். குழந்தைகள் உலகத்தில் பிறக்கின்ற இடங்களைச் சிந்தித்துப் பாருங்கள். 'இனம் இனத்தோடே; குலம் குலத்தோடே' என்றபடி, உலகில்

மக்கள் பல நிலைகளில் இருக்கிருர்கள். குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்பவர்கள் யாவரும் ஒன்ருகக்கூடி வாழ்கிருர்கள். துணிகளைச் சலவை செய்பவர்கள் ஒன்ருகக் கூடி ஒரு இடத்தில் வாழ்கிருர்கள். தோலால் பல பொருள்களைச் செய்பவர்கள் ஒன்ருகக் கூடி ஒரு இடத்தில் வாழ்கிருர்கள். ஒருவனது வாழ்க்கை, அவன் பிறக்கின்ற இடத்தைச் சார்ந்து ஆரம்பமாகிறது. வண்ணுர் வாழ்கின்ற இடத்தில் பிறக்கின்றவனது ஆரம்பக்கல்வி துணி மூட்டைகளைச் சார்ந்து வருகின்ற அனுபவ முத்திரைகளே. துணிகளைச் சலவை செய்கின்ற விஷயமாக அவர்கள் உபயோகிக்கின்ற சொற்கள் வண்ணுரக் குழந்தைகளுக்கு நன்ருய்த் தெரியும். பொற்கொல்லரின் பிள்ளைக்குச் சின்னஞ் சிறு வயதிலேயே தட்டாரத் தொழில்களைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது. வைத்தியர் வீட்டில் பிறந்த சிறுவன் பல மருந்துகளின் பெயர்களைத் தெரிந்து கொள்கிருன். பெற்ருேர் செய்யும் தொழிலைப்பற்றிய அனுபவ முத்திரைகள் பிள்ளைகளிடத்திலே ஆரம்ப நாட்களில் தோன்றுகின்றன.

சமூக வாழ்க்கை இடந்தோறும் வேற்றுமைப்படுகிறது. நெல் வயல்கள் ஏராளமாக உள்ள இடங்களில் வாழ்கின்றவர்கள் நிலத்தைப் பயிரிட்டு உண்டு வாழ்வார்கள். வர்த்தகர் நகரங்களில் வாழ்வார். நமது நாட்டில் கோயில்களைச் சுற்றி ஊர்கள் தோன்றின. நதிக்கரையிலும் கடலோரங்களிலும் திவ்ய ஸ்தலங்கள் தோன்றின. வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருக்கும் இடங்களில் ஊர்களும் நகரங்களும் தோன்றின. வசதிகள் மிகுந்த இடத்தில் ஜனத்தொகை பெருகும். வசதிகள் குறைந்த இடத்தில்

3633

ஜனத்தொகை குறையும். நதிக்கரை நாகரிகம், கடற்கரை நாகரிகம், க்ஷேத்திரநாகரிகம், பட்டண நாகரிகம், பண்ணை நாகரிகம், சேரி நாகரிகம், என்றிப்படியே மனிதர்கள் வாழ்கின்ற இடத்திற்கு ஏற்றவாறு நாகரிகம் வேற்றுமைப் படுகிறது. ஒருவனது வாழ்க்கைப் போக்குகளைப் பெற்ருேர் வாழும் இடங்களே பெரும் பாலும் திட்டம் செய்வன.

காட்டிலே வேட்டையாடித் திரியும் வேடனுடைய நாய்க்கும், செருப்புத் தைப்பவர்கள் வாழும் பாளயத்து நாய்க்கும் குண வேற்றுமைகள் இல்லாமற் போகுமா ? அக்கிரகாரத்து நாய்க்கும், சந்தைக் கடை நாய்க்கும் உணவு, பழக்க வழக்கங்கள் விஷயமாகப் பல வேற்றுமைகள் காணப்படும். மனிதரின் குணங்களும் தன்மைகளும் அவர்கள் வளரும் இடத்திற்கு ஏற்றவாறு அமைகின்றன. குண கர்ம வேற்றுமைப் பாடுகளை ஆதாரமாகக் கொண்ட மனித சமூகங்கள் பற்பல ஜாதிகளாகவும் இனங்களாகவும் பிரிந்து, தத்தம் பழக்க வழக்கங்களுக்கும் செய்யும் தொழில்களுக்கும் வசதிஅளிக்கின்ற இடங்களிலே தனித்தனிக் குழுக்களாக வாழ்கிருர்கள். வயிற்றுப் பாதையிலே போகிறது மனப்பாதை. வயிற்றுப் பிழைப்பிற்கு ஒரு தொழில் ; அந்தத் தொழிலில் தேர்ச்சிபெற ஒரு கல்வி ; அந்தக் கல்வியைப் பெறுவதற்குப் பொருத்தமான மனப்பயிற்சி-என்றிவ்வாறே சூழ்நிலை நியதிகள் இயங்குகின்றன. குறிப்பிட்ட ஒருதொழில் செய்பவரோடு போட்டி போட்டு வெற்றிபெற மனிதன் பலவாருகச் சிந்தனை செய்கிருன். மானிட வாழ்வே வயிற்றுப் பாதையில் ஓடுவது போலத் தோன்றுகிறது.

மண் பாண்டங்கள் செய்து வயிறு பிழைப்பவன் ஒருவன் பிறந்த ஊர் வைஷ்ணவ சமயத்தில் மிக்க வைராக்கிய சீலர்களான குழுவினர் வாழ்ந்த இடம். பாண்டங்கள் செய்பவனோ சைவ சமயத்தைச் சார்ந்தவன். ஆகையால், இளமை முதற்கொண்டே வறுமையால் வருந்தினான். சாதாரணமாகத் தமது கொள்கைகளுக்கு இசையாத சிறு குழுவினரை நெருக்குவதே மானிட உலகத்தின் கீழான மனப்போக்கு. அந்தக் குயவன் தான் கொண்ட சைவ நெறிப்படித் திருநீறு பூசிய உடம்போடு கடைத்தெருவில் சட்டி பானைகள் விற்கச் சென்றபோது, அவை விற்பனை ஆகவில்லை. வைஷ்ணவர்கள் தமது சமயத்தைச்சார்ந்த குயவர்கள் செய்த பாண்டங்களையே வாங்கி வந்தார்கள். சைவக் குயவனோ இடந்தவறிப் பிறந்தவன். ஆகையால் வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆளானான். வறுமையால் வருந்தியபோதிலும், தொட்டிற் பழக்கமாகிய திருநீறு பூசுதலைக் கைவிட விரும்பவில்லை. ஆயினும், முடிவிலே வயிற்று நெறியைத் தழுவக்கருதி, தன் நெற்றியிலேதிருநீறும், வயிற்றிலே திருநாமமும், தீட்டிக் கொண்டானாம். இது கதையாயினும், சூழ்நிலையைத் தெளிவாக விளக்குகிறது. குலாசாரங்கள் ஒருவனுக்குச் சூழ்நிலையாக அமையலாம். பிற்காலத்தில் வயிற்றுசாரத்தால் தன்னை மாற்றித் திருத்திக் கொள்ள நேரும்பொழுது ஏற்படும் மனக்கோளாறுகளுக்கு அந்தக் குலாசாரங்கள் காரணமாக, அமையலாம்.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.' ஒருவன் பிறக்கின்ற இடம் மட்டுமே, அவனுடைய சூழ்நிலைகளின் அங்கமாக அமைவதன்று. அவனுடைய மன

வளர்ச்சிக்குச் சூழ்நிலையில் உள்ள பொருள்களும் காரணமாகின்றன. உடல் வளர்ச்சிக்குச் சூழ்நிலைகளிலிருந்து உணவுப் பொருள்களைப் பெறவேண்டும். மன வளர்ச்சிக்கு, சூழ்நிலைகளிலுள்ள பொருள்களைப் பற்றிய அறிவும், அவற்றிற்கும் தனக்கும் உள்ள தொடர்புத் தெளிவும் தேவை. பால் வேண்டுமானால், பசு வேண்டும். பசு வேண்டுமானால், பசுவைப்பற்றிய சகல விஷயங்களும் தெரிந்திருக்க வேண்டும். உண்ணச் சோறு வேண்டுமானால், அரிசி வேண்டும். அரிசி வேண்டுமானால், கடைக்குப் போக வழி தெரிய வேண்டும். வழி தெரிந்தால்மட்டும் போதாது. கையிலே அரிசி வாங்கக் காசும் வேண்டும். காசு கொடுத்து அரிசி வாங்கினால்மட்டும் போதாது. அதைச் சமைக்கவும் தெரியவேண்டும். அரிசி வானத்திலிருந்து கடைக்கு மழையாகப் பொழிவதில்லை. நெல்லைப் பயிரிடத் தெரிய வேண்டும். இப்படிப் பார்த்துக்கொண்டே போனால், மானிட வாழ்க்கையை எண்ணிறந்த தேவைகள் நெருக்கிக் கொண்டிருக்கின்றன. தேவைகளைக் கொடுக்கும் பண்டம் பொருள்கள் யாவும் அவனுடைய சூழ்நிலைகளாக அமைந்திருக்கின்றன; அவனுடைய உடல் வளர்ச்சியும் மனோ வளர்ச்சியும், தேவையான பொருள்களைச் சூழ்நிலைகளிலிருந்து பெறுவதற்கான வசதிகளை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

பிறவி முதல் ஓர் உயிர்நிலையை எத்தனையோ வகையான சூழ்நிலை ஏவல்கள் ஏவிக்கொண்டே இருக்கின்றன. சீதோஷ்ண நிலைகள் அருட்டுகின்ற தன்மையிலே, நாம் அனல் வேண்டுமென்று

அழுதோம். அதனுக்காகத் தாயின் அணைப்புத் தேவையாக இருந்தது. கொஞ்சம் வளர்ந்த பிறகு, இந்த அருட்டிகளினால், நாம் உடைகளை நாடினோம். மழையிலும் காற்றிலுமிருந்து விலகி ஒதுங்க, மச்சிலும் குச்சிலும் தேடினோம். பசியும் ஓர் அருட்டிதான். அது நம்மை உணவு தேடுகின்ற செயலுக்குத் தூண்டலாயிற்று. பிணிகளும் அருட்டிகளே; இவை சுகத்தைக் காக்கும் வழி முறைகளை நாடித் தேடி அவற்றைக் கைக்கொள்ள நம்மை வற்புறுத்தின. சூரியனும் சந்திரனும், பிராணி உலகமும் ஜனனகாலம் முதல் நம்மை ஏவிக்கொண்டே இருக்கின்றன. கதிரவன் உதித்தவுடன் உயிர்களைப் பலவகையான செயல்களுக்கு ஏவி விடுகிறான். இப்படியே இயற்கையிலிருந்து ஓயாமல் ஏவல்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

ஜனனகால முதல் தாயே பிள்ளையின் அருட்டி நிலையமாக இருக்கிறாள். 'இந்த நேரத்திலேதான் பாலூட்டுவேன்; இந்த நேரத்திலேதான் நீராட்டுவேன்; இன்ன பொழுதிலேதான் உன்னைக் கொஞ்சிக் குலாவுவேன்; இன்ன வேளையிலேதான் உன்னை எடுப்பேன்; இந்த நேரத்திலேதான் உன்னைத் தூங்க வைப்பேன்' என்று, பல கட்டுத்திட்டங்களாகிற அருட்டிகளை வகுத்து வைக்கிறாள். குழந்தை வளர வளர அருட்டிகளும் வளருகின்றன. தாயிட்ட அருட்டிகளோடு தந்தையிடும் அருட்டிகளும் தோன்றுகின்றன. உற்றார் உறவினராலும், நாம் பிறக்க இடம் தந்த குழுவினராலும் விளைகின்ற அருட்டிகள், அரசாங்கம் இடுகின்ற அருட்டிகள் என்றிப்படியே கோடிக்கணக்கான அருட்டிகள் கூடிவந்து நாம் செய்

கின்ற செயல்களை ஆள்கின்றன; சிந்திக்கும் சிந்தனை களை ஆட்சி செய்கின்றன; நம்முடைய மன வளர்ச்சியையும் சரீர வளர்ச்சியையும் கட்டுத் திட்டம் செய்கின்றன. வெளித்தோற்றத்திலே காணப்படும் ஒருவனுக்குள் மாற்றுக்காண முடியாமல் மறைந்து கிடக்கிற இயல்பான தன்மயங்களை வெளிப்படாமல் அடக்குகிற ஏதுக்களும் சூழ்நிலை அருட்டிகளில் காணப் படுகின்றன. இந்தச் சூழ்நிலை அருட்டிகள் ஒரு குழந் தையின் இயற்கைத் தன்மயங்கள் உருவாக இடங் கொடாமல், முற்றிலும் செயற்கை முறையிலே உரு வாகும்படி செய்துவிடுகின்றன.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.' புகழ் பெற்ற வைத்தியரிடத்திலே பல ஆண்டுகளாக கம்பவுண்டர் உத்தியோகம் செய்கிறவனும் வைத்திய னுகிப் பிணியாளர்களுக்கு மருந்து கொடுக்கத் தொடங்கி விடுவான். வடமொழி கலந்து பேசுகின்ற அந்தணரோடு நெருங்கி உறவாடும் முஸ்லிமான் ஒருவன் அந்தணர்களைப் போலவே பேசப் பழகி விடுகிறுன். சேர்க்கை வாசனை என்றென்று உண்டு. மனிதன் தன்னைச் சூழ்ந்திருக்கும் சூழ்நிலைப் பொருள் களோடு சம்பந்தப்படுகிறபொழுது இந்தச் சேர்க்கை வாசனை ஏற்படுகிறது. ஆப்பிரிக்கா கண்டத்திலே வாழ்ந்த நீக்ரோக்களைக் கரும்புத் தோட்டங்களிலும், இதரத் தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக முதலாளிகளுக்கு அடிமைகளாக விற்ருர்கள். நாற்றுப் பிடுங்கி நட்ட பயிரின் செழுமைபோல இடம் பெயர்த்துக் குடியேற்றிய இந்தச் சமூகத்தார் சேர்க்கை வாசனையால் தம் முன்னோர்களிலிருந்து முற்றிலும் வேற்றுமைப்பட்ட பண்பும் நாகரிகமும்

பெற்றுவிட்டனர். இன்று அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களுடைய திறமை, திராணி, புத்தித் துலங்களை ஆப்பிரிக்கா கண்டத்து நீக்ரோக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சூழ்நிலைகள் ஒரு மனிதனை எம்மட்டும் மாற்றி அமைக்கும் வல்லமை பெற்றிருக்கின்றன என்பது தெளிவாகும். புராதன ஆரியர்கள் தென்னாட்டிலே புகுந்து திராவிடர்களோடு ஒட்டி உறவாடியபொழுது, திராவிடர்களுடைய நாகரிகம் ஒட்டமும் நடையுமாக முன்னேற்றமடைந்தது. தத்துவ ஞானங்கள் தோன்றின; தமிழ் மொழியிலே கலை நூல்கள் தோன்றின; சிற்பக் கலைகள் ஓங்கின; சித்திரக் கலைகள் பொலிவுற்றன. பல்லவர்கள் என்ற வகுப்பினரது முன்னோர் நமது நாட்டாரல்லர். ஆயினும், இவர்கள் நாகரிகத்திலே சிறந்து விளங்கிய தமிழரோடு உறவாடியபொழுது, பல்லவர்கள் புது சிருஷ்டியாகி விட்டனர். சூழ்நிலைகள் ஒருவனை உருவாக்கும் ஆற்றலை அளவின்றிப் பெற்றிருக்கின்றன.

'ஆண்டி மகன் ஆண்டியானல் நேரமறிந்து சங்கூதத் தெரியாதா?' 'நட்டுவன் பிள்ளையை நடனகலாசாலைக்கு அனுப்பவேண்டுமா?' புகழ் பெற்ற சிற்பியின் மகன் குழந்தைப் பருவத்திலிருந்தே உளியைக் கையாளப் பழகுகிருன். கண்கண்டதைக் கை செய்கிறது. அந்தப் பிள்ளை, தன்னைச் சூழக் கிடக்கின்ற உருவற்ற கற்கள் தன் தந்தையின் கைவல்லமையால் அழகிய வடிவங்கள் ஆவதைப் பார்க்கிருன். அந்தக் குழந்தையின் சூழ்நிலை முழுவதும் சிற்பச் சூழ்நிலை. 'பிறவிக் குணத்திற்கு மட்டை வைத்துக் கட்டமுடியுமா?' இந்தக் குழந்தைக்கு

பாரம்பரிய நியதியும் சூழ்நிலையும் ஒன்ருக அமைந்துள்ளன. இதனுல் அல்லவா குலாலர் வகுப்பிலே தோன்றுகிற பிள்ளைகள் அதே தொழிலைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகிருர்கள்? பொற்கொல்லர்களின் பரம்பரையிலே தோன்றுகிற பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாகப் பொன்-வெள்ளியால் அணிகலன்களைச் செய்கிருர்களே. இவற்றிற்குக் காரணம் பாரம்பரிய நியதியோடு சூழ்நிலை நியதியுந்தான்.

சூழ்நிலைத் தத்துவ ஆராய்ச்சி: 1906-ல் **காட்டல்** என்பவர் முதன் முதலாக அமெரிக்க விஞ்ஞானிகளைப் பற்றி ஓர் ஆராய்ச்சி செய்தார். இவ்வாராய்ச்சி அமெரிக்க விஞ்ஞானிகளது பிறப்பிடம், வாழுமிடம் முதலிய காரியங்களின் மூலமாக அவர்களது பாரம்பரியம், சூழ்நிலை, திறமை திராணிகள் முதலியன எவ்வளவு தூரம் அவர்கள் விஞ்ஞானிகளாவதற்குச் சாதகமாக விருந்தன என்பதை மதிப்பிடுவதற்கே நடைபெற்றது. இந்த ஆராய்ச்சிகளின் மூலமாக விஞ்ஞான அறிவுநிலையின் முன்னேற்றம் அநேகமாக சூழ்நிலைத் தொடர்புகளினுல் ஏற்படுகிறது என்பது தெளிவாயிற்று. அதிகமான ஜனத்தொகை, நாட்டின் செல்வநிலை, சமய சந்தர்ப்பங்கள், பள்ளிக்கூடங்கள், சமூகக் கட்டுத் திட்டங்கள், லக்ஷியங்கள் முதலிய காரணங்கள் விஞ்ஞான அறிவுடையவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றன. இவ்விதம் கூறுவதனுல் **காட்டல்** பாரம்பரிய நியதி என்று ஒன்று இல்லையென்று கூறவில்லை. பாரம்பரிய நியதிதான் ஓர் ஆளின் குணுகுணங்களையும் திறமை திராணிகளையும் நிர்ணயம் செய்கின்றன. ஆனுல், அந்த குணுகுணங்களும் திறமை திராணிகளும் செல்லுகின்ற

நெறி சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. நூற்று முப்பது புத்தித்துவ ஈவு பெற்ற இரண்டு குழந்தைகளில், பெரிய குடும்பத்துக் குழந்தை கைதேர்ந்த வைத்தியனாகவும், கீழ்க்குலத்துக் குழந்தை போலீஸ் இலாகாவை அழவைக்கும் குற்றவாளியாகவும் மாறிவிடலாம்.

தமது ஆராய்ச்சியை காட்டல்சாஸ்திரியார் இதோடு நிறுத்திவிடவில்லை. இதர தேசங்களைப் போலவே அமெரிக்காவிலும் பெரிய குடும்பங்கள் மிகச் சிலவே. ஆயினும் இந்தக் குடும்பங்களிலிருந்துதான் அநேக விஞ்ஞானிகள் தோன்றினார்கள். அமெரிக்க விஞ்ஞானிகளின் மொத்தத் தொகையில் ஏறக் குறைய கால் பங்குதான் சாதாரணக் குடும்பங்களில் உதித்தவர்கள். இதன் காரணம் என்ன? பாரம்பரிய நியதியா? நமது தேசத்தில் அப்படிச் சொல்வது ஒருவேளை உண்மையாக இருக்கலாம். ஏனெனில், கல்வியறிவு செழிக்கின்ற குடும்பங்கள், நமது தேசத்தில் சாதாரணமாகக் கீழ்க் குடும்பங்களோடு கலப்பதில்லை. நமக்குள் இத்தகைய கொள்வினை கொடுப்பனை கிடையாது. ஆனால், அமெரிக்காவில் இத்தகைய கட்டுத்திட்டங்கள் இல்லை. ஒருவன் எந்தப் பெண்ணையும் மணந்துகொள்ளலாம். அப்படியானால், ஏன் சில குடும்பங்களில் மட்டும் விஞ்ஞானிகள் தோன்றுகிறார்கள்? இதற்குக் காரணம், சில குடும்பங்கள்மட்டும் விஞ்ஞான அறிவைப் போஷித்து வளர்க்கக்கூடிய சூழ்நிலைகளைப் பெற்றிருப்பதுதான். வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி மாலை சூடிய விஞ்ஞானிகளின் பிள்ளைகள் குழந்தைப் பருவமுதல் தமக்கமைந்த சூழ்நிலைப் போக்கிற்

கிசைந்த துறைகளில் ஈடுபட்டு அறிவில் வளர்ச்சி அடைகிறார்கள். 'விஞ்ஞானம் வீசைக்கு என்ன விலை?' என்று கேட்கும் வீட்டில் வளரும் குழந்தைகளைக் காட்டிலும் மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வளரும் குழந்தைகள் விஞ்ஞானிகளாவதற்குத் தகுந்த காரணங்கள் காணப்படுகின்றன.

குழந்தைகள் மந்த புத்தியாக இருப்பதற்குக் காரணம் சூழ்நிலையா? பாரம்பரிய நியதியா? அல்லது இரண்டுமா? என்ற பிரச்னைகள் எழுந்தன. அப்பொழுது திறமை திராணிகளையும் புத்தித்துவத்தையும் மதிப்பிடுவதற்கான பரிசைஷத் திட்டங்கள் தோன்றலாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரபஞ்ச விகாஸ விஞ்ஞானம் என்ற புதுக் கொள்கையைக் கிளப்பிவிட்டுச் சிந்தனை உலகத்தில் பெரும் புரட்சி பண்ணியவர் சார்லஸ் டார்வின். இவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் கால்டன் என்பவர். இவர் மனிதனுடைய புத்தித்துவத்திலும் ஒரு விகாஸக் கிரமம் இருக்கவேண்டும் என்று சங்கல்பம் பண்ணிக்கொண்டு, சரீர ஸம்பந்தமாகவும் மானஸிக சம்பந்தமாகவும் ஆள்தோறும் காணப்படும் குண பேதங்களை அளக்கப் பலவிதமான முறைகளைக் கையாளத் தொடங்கினார். படங்கள் வரைவதில் தேர்ந்த ஓவியக் கலைஞர்கள், சிற்ப சாஸ்திரிகள் என்றவர் போன்ற பலரின் மன வியூகனத்தையும், கணித பண்டிதர்கள், நிர்மாணிகள் என்றவர் போன்ற பலரது மனோபாவங்களையும், மூளைப் போக்குகளையும், ஆற்றலையும் ஆராயத் தொடங்கினார்; மனப்போக்குகளின் பரஸ்பர சம்பந்தத் தொடர்புகளைத் தெரிந்து கொள்ளப் பல பரிசோதனைக் கிரமங்களையும், உபாயங்

களையும், உபகரணங்களையும் தாமாகவே தயாரித்துக் கொண்டார். ஆளாளுக்குள்ள வேற்றுமைகளை அளக்கத் தொடங்கினார்கள்.

ஆல்பிரடு பினே, ஸைமன் முதலான பண்டிதர்களும் இந்த ஆராய்ச்சி நெறியிலே சென்றார்கள். இவர்கள் பல பரிசைஷத் திட்டங்களை வகுத்தார்கள். ஆராய்ச்சியாளர்கள், ஆராயத் தெரிந்து கொண்டவர்களுக்கு வரைமுறையாகத் திட்டம் வகுத்துத் தயாரித்த பரிசைஷகளைக் கொடுத்து, ஒவ்வொருவனும் ஒவ்வொரு துறையிலும் அடைந்திருக்கும் மன வளர்ச்சியை மதிப்பிட்டார்கள். விடைப் பத்திரங்களைப் பார்த்து, ஒவ்வொரு விடைக்கும் மாற்குக் குறித்தார்கள். வயதுவாரியாகப் பரிசைஷத் திட்டங்கள் அமைந்திருந்தன. ஒரு சிறுவனுக்கு எட்டு வயதென்றால் அந்த வயதுக்கும் குறைவான வயதுடைய சிறுவர்களுக்குக் கொடுக்கும் பரிசைஷத் திட்டத்தின்படித் தயாரித்த வினாப் பத்திரங்களிலிருந்து ஆரம்பித்து, அந்தச் சிறுவன் எந்த அளவு வரைக்கும் கடினமான வினாப் பத்திரங்களுக்கு விடை எழுத முடியுமோ அந்த அளவுக்கு எழுதச் செய்தார்கள். இந்தப் பரிசைஷத் திட்டங்களுக்குக் கிடைத்த விடைப் பத்திரங்கள் சிறுவனுடைய மனவளர்ச்சிநிலையைக் காட்டின. ஆறுவயதுச் சிறுவனுக்கு அளவுத் திட்டமாகக் குறித்திருந்த பரிசைஷத் திட்டத்திற்கும் அதிகமாக ஒரு சிறுவன் விடை எழுத முடியாவிட்டால், அவனுடைய வயதால், அவன் அடைந்திருந்த மனத்தின் வயது வளர்ச்சியை வகுத்துவரும் பலனால் அவனுடைய புத்தித்துவத்தைக் குறிப்பிடத் தொடங்கினார்கள். சிறுவனுடைய வயது 8. அவனுடைய

மன வளர்ச்சி வயது 6. ஆறை எட்டால் வகுத்து வரும் பலனைத் தசாம்சக் கணக்கில் குறிப்பிட்டார்கள். ஆறை எட்டால் வகுத்து வரும் பலன் $\frac{3}{4}$. இதைத் தசாம்சத்தில் குறிப்பிடுவதானால் '75 என்று கூற வேண்டும். தசாம்சமாகக் குறிப்பதில் காணப்படும் புள்ளியை நீக்கி, இந்தச் சிறுவனுடைய புத்தித்துவ ஈவு 75 என்றார்கள். எட்டு வயதுச் சிறுவனுக்கு அமைந்திருக்க வேண்டிய புத்தித்துவ ஈவு நூறு. நூற்றுக்கு மேற்பட்டது திறமை திராணி புத்தித் துவங்களின் பெருக்கமாகவும் அதற்குக் குறைந் ததைப் புத்தித்துவக் குறைவாகவும் மதிப்பிட்டார் கள். புத்தித்துவ ஈவு என்பதில் முதல் எழுத்துக் களை மட்டும் எடுத்துக்கொண்டு பு. ஈ. 75 என்று குறிப்பிடுவது மானஸ சாஸ்திர மரபாயிற்று.

காட்டலுடைய ஆராய்ச்சிகள் அறிவின் சிகரத் தைச் சூழ்நிலை வாயிலாக விளக்கின. கார்டன் என்பவரது ஆராய்ச்சிகள், அதற்கு மாறாகக் கீழான அறிவுடைய குழந்தைகளை ஆராய்ந்து, அவர்களுக்கு அமைந்திருந்த சூழ்நிலைகளினால் விளைந்த தீமைகளை விளக்கிக் காட்டின. இவர் கால்வாய்ப் படகுகளில் வாழ்ந்த குழந்தைகளைப் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்தார். இந்தக் குழந்தைகள் மிகக் கீழான வாழ்க் கைப் போக்கை உடையவர்கள். இவர்களுக்குப் பள்ளிக்கூடங்களும் இல்லை; சமூகத் தொடர்பும் இல்லை.

சுருங்கச் சொன்னால் கால்வாய்ப் படகில் வளரும் குழந்தைகள் உலக சம்பந்தமான எவ்வித அறிவும் இல்லாத சூழ்நிலையில் வளர்கின்றவர்கள். ஒரு படகு; அதன் நடுவில் குளிருக்கும் மழைக்கும் ஒதுங்கச் சிறு

கொட்டகை; அதைச் சுற்றிலும் விறகு தேங்காய் முதலிய பண்டங்கள்; இவ்வளவுதான் இக்குழந்தைகளின் சூழ்நிலை. இத்தகைய படகிலேயே வளர்ந்து வயதில் முதிர்ந்த தம் பெற்றோரைத் தவிர வேறு எவரோடும் இந்தக் குழந்தைகள் பழகியதில்லை. வேறெதையும் தெரிந்துகொள்ளவும் இல்லை. வாழ்க்கைப் போக்கையே திருத்தவும் அமைக்கவும் தகுந்த சூழ்நிலைகள் இவ்வாறாக இருந்தால், குழந்தைகளின் புத்தித்துவம் வளர்வது எப்படி? திறமை திராணிகள் வெளிப்படுவது எப்படி? கார்டனுடைய ஆராய்ச்சியால், கால்வாய்ப் படகுக் குழந்தைகள் சராசரி 70 புத்தித்துவ ஈவு உடையவர்கள் என்பது தெளிவாயிற்று. அதாவது, பெரும்பாலோர் சாதாரண மானிட புத்தித்துவ நிலைக்கும் தாழ்ந்தவர்களாகத் தோன்றினார்கள். இவ் விஷயமாகப் பின்னும் ஆராய்ச்சிகள் செய்தபோது மற்றொரு உண்மை தெரிய வந்தது. நான்கு வயதுமுதல் ஆறு வரைக்கும் இக்குழந்தைகள் சராசரி 90 பு. ஈ. உடையவர்களாவும், பன்னிரண்டிலிருந்து இருபத்திரண்டு வயது வரைக்கும் இவர்கள் சராசரி 60 பு. ஈ. உடையவர்களாகவும் காணப்பட்டார்கள். இவ்வாறாகப் பாரம்பரிய நியதிகளை சூழ்நிலை நியதிகள் பெரிதும் பாதிக்கின்றன என்பது தெரியவருகிறது. நான்கு வயதில் அதிக புத்தித்துவம் உடைய குழந்தைகள்கூட, வசதியற்ற சூழ்நிலைகளால் தமக்கு இயல்பாக இருக்கும் புத்தித்வத்தைக் குறைத்துக் கொள்கிறார்கள். குருவிக்காரக் குழந்தைகளை ஆராய்ந்தபோதும் இதே உண்மை உறுதியாயிற்று.

இரட்டைக் குழந்தைகள், வளர்ப்புப் பிள்ளைகள் விஷயமாகச் செய்த ஆராய்ச்சிகளிலும் சூழ்நிலையின் விளைவுகள் வெளியாயின. மூன்று மானஸ சாஸ்திரிகள் 95 பு. ஈ. உடைய 74 அனாதைக் குழந்தைகளை அவர்களுடைய எட்டாவது வயதில் பெரிய குடும்பங்களுக்கு வளர்ப்புப் பிள்ளைகளாக அனுப்பி வைத்தார்கள். இந்தக் குழந்தைகள் நான்கு வருஷம் அந்த வீடுகளில் வளர்ந்தனர். இதன் முடிவில் திரும்பவும் அவர்களுடைய புத்தித்வத்தைப் பரிசோதித்தபோது பு. ஈ. 102·5க்கு வளர்ந்திருந்தது. திரும்பவும் பல சிறுவர்களைச் செல்வாக்கும் மதிப்பும் உள்ள குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைகளாகவும், சாதாரணக் குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைகளாகவும் தனித்தனியே பிரித்து இரு தொகுதிகளிலும் உள்ளவர்களுடைய புத்தித்துவத்தை மதிப்பிட்டனர். மதிப்பும் செல்வாக்கும் உடைய குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் சராசரி பு. ஈ. 105 உடையவர்களாகத் தோன்றினார்கள். சாதாரணக் குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் பு. ஈ. 100 பெற்றிருந்தனர். நான்கு வயதிற்கு முன் ஆரம்பித்தபோது யாவரும் ஒரே அளவு புத்தித்துவம் பெற்றிருந்தனர். நாட்கள் செல்லச் செல்லப் புதிதாக அமைத்துக்கொடுத்த சூழ்நிலைகளால் குழந்தைகளின் புத்தித்துவம் அவர்களை வளர்த்த குடும்பங்களின் கல்வி-செல்வ நிலைக்கு ஏற்ப அதிகரித்திருந்தது என்று விளங்கியது.

இவற்றை எல்லாம் பார்க்கும்பொழுது, ஒருவனது சரீர வளர்ச்சிக்கும் புத்தித்துவ வளர்ச்சிக்கும் சூழ்நிலைகள் முக்கிய காரணங்களாக அமைகின்றன என்பது தெளிவு.

விதி பெரிதா? மதி பெரிதா? அம்மம்மா! மிகப் பெரிய பிரச்னை. இதற்கு யாரால் பதில் அளிக்க முடியும்? பிரஸவ நேரத்தில் பிரும்மா ஒரு குழந்தை

தலையில் எழுத ஒரு வீட்டில் பிரவேசித்தாராம். வாசலிலே காத்துக்கொண்டிருந்த சீடன் தன் ஞான திருஷ்டியால் பிரும்மாவை நேர்முகமாகப் பார்த்து, "எங்கே போகிறீர்?" என்றானாம். பிரும்மா தாம் வந்த நோக்கத்தைக் கூறியபொழுது, "நீர் என் குருவின் குழந்தை தலையில் எழுதியது என்னவென்று திரும்பி வரும்போது என்னிடம் மறைக்காமல் கூறுவதாயிருந்தால் உள்ளே போக விடுவேன்; இப்படி வாக்குக் கொடுக்காவிட்டால் உள்ளே பிரவேசிக்க விடமாட்டேன்" என்றானாம் அந்த சிஷன். பிரும்மன் அதற்குச் சம்மதிக்கவே, சீடன் அந்தக் கடவுளை உள்ளே பிரவேசிக்க வழி விட்டான். பிரும்மன் திரும்பி வந்தபோது, "குருவின் குழந்தை தலையில் என்ன எழுதினீர்?" என்றான் சீடன். "ஓர் எருமையும் ஒரு மூட்டை நெல்லும் பெற்றுப் பிழைத்திடுக" என்று எழுதியிருக்கிறேன்" என்றார் பிரும்மன். பிறந்த குழந்தை பெரியவனாகி ஓர் எருமையையும் ஒரு மூட்டை நெல்லையும் வைத்துத் தரித்திரப் பட்டுக் கொண்டிருந்ததைக் காசிக்குச் சென்று திரும்பி வந்த சீடன்கண்டு, அந்த நாளிலேயே அந்த எருமையையும் ஒரு மூட்டை நெல்லையும் விற்றுத் தான தருமங்கள் செய்யச் சொன்னான். அன்றுமுதல் பிரும்மனுக்கு நாள்தோறும் ஓர் எருமையும் ஒரு மூட்டை நெல்லும் தேடும் தொழில் ஏற்பட்டதாம். இப்படி ஒரு கதை உண்டு.

'இவன் தலையிலெழுத்து; அன்று எழுதின எழுத்தை யாரால் கலைத்து எழுத முடியும்?" என்று அடிக்கடி பெற்றோர் தம் பிள்ளைகளைப்பற்றி நொந்துரைப்பதைக் கேள்விப்படுகிறோம். இத்தகைய பேச்சுக்களால் விளையும் தீமைகள் பல. விதியை மதியால் வெல்ல முடியுமா என்ற கேள்விக்கு விடை கூற முடியுமா? ஒருவன் எந்தப் பாரம்பரிய நியதியைக் கொண்டிருந்தாலும், அவனுடைய சூழ்நிலையை

ஆரம்பமுதலே மாற்றி, வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமைக்கக் கூடுமானுல், பெரிதளவு விதியை மதியால் வெல்ல முடியும் என்பதே நவீன மானஸ சாஸ்திரிகளின் ஆராய்ச்சித் துணிபு. சிறந்த சூழ் நிலைகளில் உதித்த சிறுவர்கள் உருப்படாமல் போவ தற்குக் காரணம் அவர்களுடைய தலையில் எழுதுகிற பிரும்ம தேவர்களான பெற்ருேர்களே. "வீட்டுக்கு ஒரே பிள்ளை! செல்லப் பிள்ளை! அவன் கேட்டதை எல்லாம் கொடுக்கவேண்டும்" என்ற மனப்பான்மை யும், பிள்ளைகளைக் கவனிக்க நேரமில்லாதபடி பலவித மான அலுவல்களில் சிக்கிக்கொண்டு அவதிப்படுகிற பெற்ருேர்களின் சந்தானக் கவலையீனமும், வறுமை யால் நேரிடுகின்ற முட்டுக்கட்டைகளும், வசதிக் குறைவுகளுக்குக் காரணமான பல விஷயங்களும் குழந்தையின் தலையிலெழுத்துக்கு அமைந்த கருவி களே அன்றி எந்தப் பிரும்ம தேவனும் வந்து தலையில் எழுதுவதில்லை. எத்தனையோ பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளில் காணப்படும் குணங்களைப் பாரம்பரிய நியதியால் திருத்தி அமைத்திருக்கிருர்கள்.மனம்போல மாங்கலியம். விரும்பினுல் பெறக்கூடாதது எதுவும் இல்லை. ஆசையே அளவற்ற ஆத்ம சக்திகளுக்குக் காரணம். நமது பிள்ளைகள் உலகத்தில் பெரியவர் களாக வேண்டும் என்ற விருப்பம் இருந்தால், எந்தப் பெற்ருேரும் தம் குழந்தையின் தலையில் எழுத்தை மாற்றி எழுத முடியும். எந்த மனிதனும் தன் நிலைமை யைச் சீர்திருத்தி அமைத்துக் கொள்ளவும் உயர்ந்த நிலையை அடையவும் முடியும்.

இந்நூலில் கையாண்டிருக்கும் புதிய மொழிகளும் சொற்றொடர்களும்

அக அருட்டி - Internal Stimulus
அகக் கூறுபாடு - Internal factors
அடக்கி ஆளப்படும் சிந்தனைத் தொடர்பு நிலை - Tho state of controlled association of ideas
அண்மைக்காரணம் - Immediate cause
அணுக்கட்டுக்கோப்பு - Microscopic structure, atomic structure
அதிகாரக் குரல்-Peremptory voice
அம்சம - Part
அருட்டி - Stimulus
அவ்வியக்த நிலை - Inhibition
அமுத்தல் - Pressure
அனுபவ முத்திரை - Mental impression of experience
ஆயத்தத் திட்டம் - Preparatory set
ஆளாளுக்குள்ள வேற்றுமை - Individual differences
இந்தனம், எரிபொருள்-Fuel
இயக்கம் - Movement
இயக்க நரம்புகள் - Motor nerves
இரசாயன மாறுதல் - Chemical change
உடல்கட்டுக்கோப்பு - Physical Structure
உயிர் நிலை - Organism
உஷ்ண - அலைகள் - Heat waves
உறுக்குதல் - Reprimanding or forcing
ஊக்குதல் - Instigation
ஊக்கங்கள் - Impulses
ஊடுபாவுகள் - Warp and woof
எக்ஸ்ரே - X-ray
எல்லையை நெருங்கிய திட்டம் - Goal set
ஏவல் - Excitement
ஒளி அலை - Light wave
ஒலி அலை - Sound wave
ஒற்றைப் பிரதிச் செயல் - Simple reaction
காரணம் - Cause
காரியம் - Effect
காரிய - இந்திரியங்கள் - Effectors
கிராஹ்ய - இந்திரியங்கள் - Receptors
சக்தி - Energy
சக்தி - அலைகள் - Waves of energy
சந்தர்ப்பத் தொடர்பு நிலைத் திட்டம் - Situation set
சம்பாவிதம் - Hypothesis
சமராசி - Average
சரீர சாஸ்திரம் - Physiology
சரீர - ரசாயனம் - Bio-chemistry
சலனம் - Motion
சுதந்திரத் தொடர்பு நிலை - The state of free association
சிந்தனைச் செயல் திட்டம் - Mental set

சுரப்பி - Gland
சுற்றுச் சார்பு - Environment
சூழ்நிலை - Environment
செயல் - Activity
செயல் - கலப்பு - Combined action
செயல்-தெளிவு - Selectivity
செயல்-போக்கு - Activity in progress
ஜன்ம சுபாவம் - Hereditory traits
ஜாக்கிராவஸ்தை - Conscious or wakeful state
ஜாடராக்கினி - Digesting agency
ட்ரில்லியன் - Trillion
தசைநார் - Muscle fibre
தன்மயம் - Personality
தாக்குப்பிடித்தல் - Managing, adjusting
தானாகவே எழும் செயல்-Involuntary action
திட்டம் - Plan; as a psychological term, set
துணைமுகம் - Indirect
தெரிந்து எடுத்துச் செய்யப்படும் பிரதிச் செயல் - Choice-reaction
தொடர்ச்சித் திட்டம் - Contiunation set
தொடர்புற்ற பிரதிச் செயல் - Associative reaction
நடுராசி - Medium
நயன கோசரம் - Range of vision
நரம்பு - நடுநிலையம் - Nerve-centre
நிகழ்ச்சி நிலை - Situation
நிகழ்ச்சிநிலைத் திட்டம் - Situation set
நிர்வாகத் திட்டம் - Executive set
நிலைமைத் திட்டம் - Situation set
நிலைமை, ஸ்திதி - State
நியதி - Law
நேர்முகம் - Direct
பரஸ்பரம் - Mutual
பரஸ்பரத் தொடர்புள்ள செயல்களின் திட்டம் - Process of interaction
பாதித்தல் - Affect
பாரம்பரிய நியதி - The law of heredity
பால்மயம் - Sex
பிரச்னைத் தொடர்பு நிலைத் திட்டம் - Problem - set
பிரதிச் செயல், பிரதி இயக்கம் - Response
பிரதிச் செயலின் நிகழ்ச்சிக் காலம் - Reaction time
பிரபஞ்ச விகாஸம் - Evolution
பிராணவாயு - Oxygen
பிரவர்த்தி - Behaviour
பின்னணிக்கோப்பு - Background
புத்தித்துவம் - Intelligence
புத்தித்துவ ஈவு - Intelligence Quotient
புலனுணர்ச்சி இந்திரியங்கள் - Sensory organs
புலனுணர்ச்சி அலைகள் - Sensory waves
புற அருட்டி - External stimulus
பேசி - Muscle
போக்குத் திட்டம் - Steer

போக்குவாய் - Outlet
பௌதிக விஞ்ஞானம் - Physics
மனப்பண்பாடு - Mental disposition
மனப்போக்கு - Mental activity
மனிதப் பிரவர்த்தி - Human behaviour
மனவியூகனம் - Mental structure
மானஸ சாஸ்திரம் - Psychology
மூல சூத்திரம் - Axioms
வரைஅறுக்கப்பெற்ற வாக்கியம் - Definition
வாய்பாடு - Formula
வியக்தி : Manifestation
வியக்த நிலை - Exhibition
விலாங்கு - Eel
ஸ்பரிச இந்திரியம் - Touch-organ
ஸ்வப்நுவஸ்தை, கனவு நிலை - Dream state
ஸங்கீர்ண வாக்கியம் - Compound Sentence
ஹெர்ட்ஸ் அலைகள் - Hertz waves

ஆங்கில மொழிகளுக்குத் தமிழ்

Activity - செயல்
Activity in progress-செயல்-போக்கு
Adjusting-தாக்கிப் பிடித்தல்
Affect - பாதித்தல்
Associative - reaction - தொடர்புற்ற பிரதிச்செயல்
Atomic structure - அணுக் கட்டுக் கோப்பு
Average - சமராசி
Axiom - மூல சூத்திரம்
Back - ground - பின்னணிக் கோப்பு
Biochemistry - சரீரரசாயனம்
Cause - காரணம்
Chemical change - இரசாயன மாறுதல்
Choice reaction - தெரிந்து எடுத்துச் செய்யப்படும் பிரதிச் செயல்
Combined action - செயல் கலப்பு
Compound sentence - ஸங்கீர்ண வாக்கியம்
Conscious state - ஜாக்ராவஸ்தை
Continuation set-தொடர்ச்சித் திட்டம்
Definition - வரை அறுக்கப் பெற்ற வாக்கியம்
Digesting agency - ஜாடராக்கினி
Direct - நேர்முகம்
Dream state - ஸ்வப்பனுவஸ்தை
Eel - விலாங்கு
Effect - காரியம்
Effectors - காரிய இந்திரியங்கள்
Energy - சக்தி
Environment-சுற்றுச்சார்பு, சூழ்நிலை

Evolution - பிரபஞ்சவிகாஸக் கிரமம்
Excitement - ஏவல்
Exhibition - வியக்த நிலை
Executive set - நிர்வாகத் திட்டம்
External stimulus - புற அருட்டி
Forcing - உறுக்குதல்
Formula - வாய்பாடு
Fuel - இந்தனம், எரி பொருள்
Gland - சுரப்பி
Goal Set - எல்லையை நெருங்கிய திட்டம்
Heat waves - உஷ்ண அலைகள்
Hereditary traits - ஜன்ம சுபாவம்
Hertz waves - ஹெர்ட்ஸ் அலைகள்
Human behaviour - மனிதப் பிரவர்த்தி
Hypothesis - சம்பாவிதம்
Immediate cause - அண்மைக் காரணம்
Impulse - ஊக்கிகள்
Indirect - துணைமுகம்
Individual Diffirences - ஆளாளுக்குள்ள வேற்றுமைகள்
Inhibition - அவ்வியக்தநிலை
Instigation - ஊக்குதல்
Intelligence-Quotient - புத்தித்வ ஈவு
Internal factor - அகக் கூறுபாடு
Internal stimulus - அக அருட்டி
Involuntary action - தானாகவே எழும் செயல்
Law - நியதி
Light wave - ஒளி அலை
Managing - தாக்குப் பிடித்தல்
Manifestation - வியக்தி
Medium - நடுராசி
Mental activity - மனப் போக்கு
Mental disposition - மனப் பண்பாடு
Mental impression of experience - அனுபவ முத்திரை
Mental set - சிந்தனைச் செயல் திட்டம்
Mental structure - மனவியூகனம்
Microscopic structure - அணுக் கட்டுக்கோப்பு
Motion - சலனம்
Motor nerves - இயக்க நரம்புகள்
Muscle - பேசி
Muscle fibre - தசை நார்
Mutual - பரஸ்பரம்
Movement - இயக்கம்
Nerve centre - நரம்பு நடுநிலையம்
Organism - உயிர் நிலை
Outlet - போக்கு வாய்
Oxygen - பிராணவாயு
Part - அம்சம்
Peremptory voice - அதிகாரக் குரல்
Personality - தன்மயம்
Physics - பௌதிக விஞ்ஞானம்

3633

Physiology - சரீர சாஸ்திரம்
Physical structure - உடல் கட்டுக்கோப்பு
Plan - திட்டம்
Preparatory set - ஆயத்தத் திட்டம்
Pressure - அழுத்தல்
Problem - set - பிரச்னைத் தொடர்பு நிலைத் திட்டம்
Process of interaction - பரஸ்பரத் தொடர்புள்ள செயல்களின் திட்டம்
Psychology - மானஸ சாஸ்திரம்
Range of vision - நயன கோசரம்
Reaction time - பிரதிச் செயலின் நிகழ்ச்சிக் காலம்
Receptors - கிராஹ்ய இந்திரியங்கள்
Reprimanding - உறுக்குதல்
Response - பிரதிச் செயல், பிரதி இயக்கம்
Selectivity - செயல் தெளிவு
Sensory organs - புலனுணர்ச்சி இந்திரியங்கள்
Sensory-waves-புலனுணர்ச்சி அலைகள்
Sex - பால்மயம்
Simple reaction - ஒற்றைப பிரதிச் செயல்
Situation - நிகழ்ச்சி நிலை
Situation set - சந்தர்ப்பத் தொடர்பு நிலைத் திட்டம், நிகழ்ச்சி நிலைத் திட்டம், நிலைமைத் திட்டம்
Sound wave - ஒலி அலை
State - நிலைமை, ஸ்திதி
Steer - போக்குத் திட்டம்
Stimulus - அருட்டி
Touch - organ - ஸ்பரிச இந்திரியம்
The law of heredity - பாரம்பரிய நியதி
The state of controlled association of ideas - அடக்கி ஆளப்படும் சிந்தனைத் தொடர்பு நிலை
The state of free association-சுதந்தரத் தொடர்பு நிலை
Trillion - ட்ரில்லியன்
Wakeful state - ஜாக்கிராவஸ்தை
Warp and woof - ஊடு பாவுகள்
Waves of energy - சக்தி அலைகள்
X-ray - எக்ஸ்ரே

Printed at the B. N. Press, Mount Road, Madras.
Q. H. Ms. T. P. No. E-16. August 1946. C. 1,500.

BIBLIOGRAPHY

Ballard, P. B. — *Group tests of intelligence* 1937

Cattell, J. Mck, & Cattell. J. — *American men on Science.* 5th Edition

Freeman, F. N. — *Individual Differences.* 1934

Gordon, Hugh. — *Mental & Scholastic Tests among Retarded Children, London Board of Education, Educational Pamphlet,* No 44, 1923

Maguinness, O.D., — *Environment & Heredity*

Woodworth, R.S., — *Psychology: a study of Mental Life* 1944

Woodworth, R.S., — *Experimental Psychology.*, 1939